ஜெர்மனியிலும் வன்னியன்
தொலைபேசி அட்டைகள்


தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.

1.50 Euro ஜேர்மனி
# ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY
2004 23 - 29 Juin 2004 19

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M° La Chapelle/Gare du Nord)

## சட்டவிரோதமாக வேலை செய்வது
## இலங்கையர்களின் நிறுவனங்கள் உதாரணம்
# பிரான்ஸ் அரசு நடவடிக்கையில் இறங்குகிறது

(பாரிஸ் 20.06.2004)

பிரான்சின் தொழில் துறை சட்டத்துக்குப் புறம்பான வகையில் உரிய பதிவுகள் இன்றி வேலை செய்வதையும் வேலை செய்விப்பதையும் தடுத்து நிறுத்துவதற்கு பிரான்ஸ் அரசாங்கம் தீர்மானத்திருக்கிறது. இந்த அறிவிப்பை பிரான்சின் தொழி லமைச்சர் ஜான் லுவி போர்லோ கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டிருக்கிறார்.

பிரான்ஸ் அரசாங்கத்துக்கு பாரிய நிதி இழப்பீட்டை ஏற்படுத்தும் இந்தச் சட்டவிராதமான நடவடிக்கைகு எதிரான போர் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக அவர் அறிவித்திருக்கிறார். இலங்கையர்களின் தொழில் நிறுவனங்கள் பிரான்ஸ் மண் ணில் ஆட்களை வைத்து வேலை செய்விக்கும்போது அவை பிரான்சின் தொழில் சட்டங்களைத்தான் கடைப்பிடிக்க வேண்டுமேயன்றி சிறீலங்காவின் தொழில் சட்டங்களை இங்கு கடைப்பிடிக்கக் கூடாது என்று அவர் உதாரணம் காட்டியி ருக்கிறார்.

தொடர்ச்சி 12ம் பக்கம்...

## சிறீலங்கா இராணுவமே கருணாவைப் பாதுகாக்கிறது!
### கூடஇருந்த நிலாவினி அம்பலப்படுத்துகிறார்



(22.06.04)

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட கருணா சிறீலங்கா இராணு வத்தின் பாதுகாப்பிலும், கட்டுப்பாட்டிலும் இருந்து தான் செயற்பட்டு வருகின்றார் என்பதை அவரோடு கூட இருந்த நிலாவினி உறுதிப்படுத்தியிருக்கிறார்.

மட்டக்களப்பிலிருந்து ஏப்ரல் இரண்டாம் வாரத் தில் கருணா ஓட்டம் பிடித்தபோது அவருடன் சேர்ந்து ஓடிச்சென்று, கடந்த இரண்டு மாதங் களுக்கு மேல் அவருடன் கூட இருந்த நிலாவினி உட்பட நான்கு பெண் போராளிகள் தற்போது தப்பி வந்து விடுதலைப் புலிகளுடன் இணைந் திருக்கின்றனர்.

தொடர்ச்சி 12ம் பக்கம்...

Orient Textilien & Schmuck
Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836
தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!
* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.
உரிமையாளர்: ச.ஜெகதீசன்

Pub.



## V.T.Cash & Carry

900g யாழ்ப்பாணம் மிளகாய்தூள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord


# காணி கொள்வனவுக்கு 100 சதவீத வரி! சிறீலங்கா அமைச்சரவை தீர்மானம்

வெளிநாட்டுக் குடியுரிமையுள்ள ஒருவர் இலங்கையில் காணிகளை கொள்வனவு செய்யும் போது, 100 சதவீத வரியை அறவிடும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சிறீலங்கா அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது, இது தொடர்பான சட்டமொன்றை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகரித்திருப்பதாக சிறீலங்காவின் விவசாய, கால் நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன அமைச்சர் அநுர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த இந்தச் சட்டம் கடந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் நீக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டம் தொடர்பாக சிறீலங்காவின் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் முகமாக கடந்த 18ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலே கருத்துத் தெரிவித்த அமைச்சர் அநுர திசாநாயக்க, இலங்கையின் காணிச் சட்டத்தின் படி, வெளிநாட்டவர்கள் இங்கு காணிகளை கொள்வனவு செய்யும் போது 100 சதவீத வரியை செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த ஐ.தே.க. ஆட்சியின் போது, இந்த வரி முற்றாக நீக்கப்பட்டது. இது நாட்டுக்குச் செய்யப்பட்ட துரோகச் செயலாகும். எனவே, இந்த வரியை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வர அரசு தீர்மானித்துள்ளது.

இந்த வரிச்சலுகை காரணமாக அண்மைக் காலத்தில் பேருவல, ஹ்க்கடுவ, திக்குவல்லை, அஹங்கம, காலி, அளுத்கம, மிரிஸ்ஸ உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் பெருந்தொகையான காணிகளை வெளிநாட்டவர்கள் கொள்வனவு செய்துள்ளனர். இதனால் காணியே இல்லாத எமது மக்கள் பெரும் கஷ்டத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் அரசுக்கும் நட்டமேற்பட்டுள்ளது என்று கூறினார்.

இலங்கையில் பிறந்த ஒருவர் வெளிநாடு சென்று, அந்நாட்டுக் குடியுரிமை பெறும் போது இலங்கைக் குடியுரிமை இரத்துச் செய்யப்படாமல் தடுப்பதற்கு, இரட்டைக் குடியுரிமை பெறவேண்டும் என்றும் அவ்வாறு இரட்டைக் குடியுரிமை பெறாத இலங்கையர்கள் வெளிநாட்டவர்கள் என்றே கருதப்படுவார்கள் என்றும் இந்தச் செய்தியாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

## உலக மயமாக்கல் : சிறீலங்காவை போதைப் பொருள் மையமாக்கிவிட்டது

திறந்த பொருளாதாரமும் உலக மயமாக்கலும் சிறீலங்காவில் போதைப் பொருள் ஆக்கிரமிப்புக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது என்று அந்நாட்டின் காவல்துறை மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார். சர்வதேச போதைப் பொருள் தினத்தை முன்னிட்டு சிறீலங்கா முழுவதும் காவல்துறை திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள போதைப் பொருள் ஒழிப்பு வாரம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கடந்த 17ம் திகதி வியாழக்கிழமை கொழும்பிலுள்ள காவல்துறை தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் சிறீலங்காவின் காவல்துறை மா அதிபர் தொடர்ந்து பேசும்போது, போதைப் பொருள் கடத்தலில் சர்வதேச மாபியா குழுக்கள் ஈடுபட்டுள்ளன. ஆயுதக் குழுக்கள் தமக்குத் தேவையான பணத்தைத் திரட்டிக் கொள்ள போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றனர். இந்த இரண்டு பிரிவுகளும் போதைப் பொருள் கடத்தலுக்கு மேலதிகமாக ஆட்கடத்தல், போலிப்பணம் அச்சிடுதல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான, சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு திறந்த பொருளாதாரக் கொள்கையும், உலக மயமாக்கலுமே வழி வகுத்துள்ளன என்று கூறினார்.

1980ம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்குள் ஹெரோயின் கொண்டு வரப்பட்டது. அபின், கஞ்சா, புகையிலை போன்றவற்றையும் ஹெரோயின் மிஞ்சியுள்ளதுடன், இதனைக் கட்டுப்படுத்துவதற்கு மிகவும் சிரமமான ஒரு விடயமாகவேயுள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு புதிய தொழில் நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டு சமூகச் சீர்கேடுகளும் நிகழுகின்றன. ஹெரோயின் சர்வதேச வியாபாரமாக வியாபித்துள்ளதுடன், இலகுவில் பணம் சம்பாதிக்கும் தொழிலாகவும் மாற்றமடைந்துள்ளது. சிறீலங்கா சிறைச்சாலைகளிலுள்ள 40 வீதமானவர்கள் போதைப் பொருள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களே என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.


பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி!
உங்கள் பற்களில் பிரச்சினையா?



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52
என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.






உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995



## Meubles Europeens

உங்கள் வீட்டுத் தளபாடத் தேவைக்கு ஜேர்மன், பெல்ஜியம்
தயாரிப்பு புதிய பழைய வீட்டுத் தளபாடங்கள் மலிவு விலையில்.
லெதர் சோபாக்கள் 3+ 2+1 சோகேஸ்
சாப்பாட்டு மேசைகள் கட்டில்
அலுமாரி குசின செட் மற்றும் அனைத்துவகை வீட்டுத்
தளபாடங் களையும், வீட்டுப் பாவனைப் பொருட்களையும்
உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்துகொள்ள நாடுங்கள்.

Meubles Europeens
4, Rue Des Villas
94800 Villejuif
Mo -Villejuif Louis Aragon (N°: 7)
Tél: 01 46 77 19 40 - 06 64 42 42 62

**திறக்கும் நேரம்**
திங்கள் முதல் சனி வரை - 14H - 20H
ஞாயிறு - 10H - 18H

Pub-Fr-20



## EUROCONSULT SARL TRADUCTIONS

மொழி பெயர்ப்பு நிலையம்
அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாக கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502



## போட்டோ பாலா

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்
உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:
Photo Bala
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77



## Errances Travels



55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய
நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# சந்திரிகா அரசின் சமாதான விரோதப் போக்குக்கு எதிராகக் குடாநாட்டு மக்கள் மாபெரும் பேரணி




சிறீலங்கா அரசின் சமாதான விரோதப்போக்கையும் இரட்டை வேடத்தையும் கண்டித்தும் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தும் கடந்த 17ம் திகதி வியாழக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது இந்தப் பேரணியில் சுமார் 70 ஆயிரம் பேர் உணர்வெழுச்சியுடன் பங்குபற்றினர். யாழ்.மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேரணி, வியாழக்கிழமை காலை 10.35 மணியளவில் நல்லூர்க்கந்தன் ஆலயமுன்றிலில் ஆரம்பமானது.

குடாநாட்டின் சகல பிரதேசங்களில் இருந்தும் நல்லூரில் ஒன்றுகூடிய மக்கள், உரிமை முழக்கங்களையும் அரசுக்கு எதிராகக் கண்டனக் குரல்களையும் ஓங்கி ஒலித்துக்கொண்டு பேரணியாகச் சென்றனர். உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்கவேண்டும் என்றும், போரா? சமாதானமா? என்பதை சிறீலங்கா அரசு முடிவுசெய்ய வேண்டும் என்றும் அவர்கள் எழுப்பிய பேரொலி யாழ் நகர வீதிகளில் எதிரொலித்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் பிரமுகர்கள் முன்னே செல்ல அவர்களைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக, கல்வியியற்கல்லூரி மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரமுகர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள் என 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தப்பேரணியில் சென்றனர். வடக்கு-கிழக்கின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட வேண்டும். இடம்பெயர்ந்த மக்களின் இயல்பு வாழ்க்கையை உடன் ஏற்படுத்தவேண்டும். இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் வாழவிடவேண்டும். தமிழ்த் தேசப்பற்றாளர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும். மலையகத் தமிழ்ச் சகோதரர்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்.

போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையிலான ஏராளமான முழக்கங்கள் வானைப்பிளக்க கோயில் வீதி ஊடாகப் பேரணி நகர்ந்து சென்றது. கோவில் வீதியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அலுவலகத்தில் பேரணியில்சென்றோரின் சார்பில் கோரிக்கை மனு ஒன்று கையளிக்கப்பட்டது. தொடர்ந்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகம் முன்பாக வைத்து கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளரிடம் அந்த மனுவின் மற்றொரு பிரதி கையளிக்கப்பட்டது. செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்திலும் அதன் மற்றொரு பிரதி கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து பேரணி மருத்துவமனை வீதி ஊடாக நகர்ந்து யாழ். செயலகத்தை அடைந்தது. அங்கு வைத்து சிறீலங்காவின் அரசுத் தலைவர் தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கான கோரிக்கை மனுக்கள் தனித்தனியாகக் கையளிக்கப்பட்டன. இந்த மனுக்களை யாழ். செயலகத் திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம் பிள்ளை பெற்றுக்கொண்டார். அரசுத் தலைவருக்கான மனுவை பேரணியின் ஏற்பாட்டுக்குழுத் தலைவர் எம்.இளம்பிறையனும், தலைமை அமைச்சருக்கான மனுவை யாழ். மாவட்ட பொது அமைப் புக்களின் ஒன்றியத் தலைவர் சூ.சிறிலும், எதிர்க்கட்சித்தலைவருக்கான மனுவை நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனும் கையளித்தனர்.

மனுக்கள் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கண்டனக் கூட்டம் ஒன்று அங்கு இடம்பெற்றது. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், வன்னி மாவட்ட நாடாளு

(தொடர்ச்சி 04ம் பக்கம்)

## உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்கள் மீளக்குடியமர அனுமதியுங்கள்

### பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள்

வடக்கு - கிழக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி, இடம்பெயர்ந்துள்ள மக்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் என்று சிறீலங்காவின் அரசுத் தலைவரை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரியுள்ளது. யாழ். நகரில் கடந்த 17 ம் திகதி வியாழக்கிழமை நடத்திய கண்டனப் பேரணியை அடுத்து யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஊடாக சிறீலங்காவின் அரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள கோரிக்கை மனுவிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளே எமது ஏகப்பிரதிநிதிகள் என்பதனையும், போரினால் சிதைந்து போயுள்ள எமது மக்களின் பாரம்பரிய வாழ்விடமான இத்தீவின் வடக்கு - கிழக்குப் பிரதேசத்தினை மீளக்கட்டியெழுப்பு வதற்கும் அங்கு இயல்பு வாழ்க்கையினை மீள ஏற்படுத்துவதற்கும் தமது சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும் வடக்கு - கிழக்கின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையினை விடுதலைப் புலிகளிடம் உடனடியாக ஒப்படைக்கவேண்டும் என்பதனையும், கடந்த பொதுத் தேர்தல் உள்ளிட்ட பலசந்தர்ப்பங்களில் நாம் சிறீலங்கா அரசுக்கும், சர்வதேசத்துக்கும் வலியுறுத்தியுள்ளோம்.

தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுதொடர்பாகப் புதிய சிறீலங்கா அரசும், அரசுத் தலைவர் சந்திரிகா அம்மையாரும் தெரிவித்து வரும் முன்னுக்குப்பின் முரணான கருத்துகளும் கிழக்கில் தொடருகின்ற தமிழ்த் தேசியப்பற்றாளர்களின் படுகொலைகளும்,


(தொடர்ச்சி 04ம் பக்கம்)

## பேரணியில் ஒலித்த கோசங்கள்...

- எங்கள் நிலம் எமக்கு வேண்டும்
- எங்கள் வீடுகள் எமக்கு வேண்டும்
- எங்கள் கடலில் நாங்கள் சுதந்திரமாக தொழில்செய்யவேண்டும்.
- உண்மையை எடுத்துச் சொல் பவர்களைக் கொல்லாதே!
- பேரினவாத அரசே! மலையகத்தில் தமிழரைத் தாக்குவதை நிறுத்து!
- இடைக்காலத் தன்னாட்சி அலகை வழங்கு!
- அமைதித் தீர்வைப் பின்போடாதே!
- உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமர அனுமதி!
- சிறீலங்காவில் செத்துப்போன ஜனநாயகம், செங்கோலைத் தேடுகிறது
- இயல்பு வாழ்வை ஏற்படுத்த இல்லையேல் தமிழ் ஈழம் காண்போம்!
- ஊடகவியலாளரைக் கொல்லாதே!
- எங்கள் தலைவன் பிரபாகரன்!
- பார்வையாளர்கள் தேவை இல்லை
- அப்பே ரட்ட அபிட்ட ஓன (எங்கள் தேசம் எங்களுக்கு வேண்டும்)
- எங்களை இழுத்தடிக்காதே. எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போகவேண்டும்.
- விடுதலைப் புலிகளே ஏக பிரதிநிதிகள்!

"SHELVA" "ZUG"
Credit and Insurance
✶ குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
✶ 30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
✶ வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
✶ இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# அமைதிப் பேச்சில் முட்டுக்கட்டை
# இலண்டனில் பாலா - சூல்ஹைய்ம் ஆராய்வு



சிறீலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் சாத்தியப்பாடுகள் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் சிறீலங்காவுக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹைய்ம் இலண்டனில் கடந்த 17ம் திகதி வியாழக்கிழமை விரிவான பேச்சுவார்த்தையை நடத்தியிருக்கிறார். இலண்டனில் உள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் வதிவிடத்தில் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேச்சுவார்த்தை நண்பகல் 12.30 மணிவரை நடைபெற்றது. எரிக் சூல்ஹைய்முடன் நோர்வேயின் வெளிநாட்டமைச்சு அதிகாரி லிஸா கோல்டனும் இந்தச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

கிளிநொச்சியில் கடந்த 16ம் திகதி புதன்கிழமை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சிறீலங்காவுக்கான நோர்வேத் தூதுவர் சந்தித்த பின்னர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடனான சூல்ஹைய்மின் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதில் உள்ள தடங்கல்கள் குறித்து இருவரும் விரிவாக ஆராய்ந்ததாகவும் குறிப்பாக, கிழக்கு மாகாண நிலைமைகள் தொடர்பாக அரசாங்க ஊடகங்கள் மூலம் மேற்கொண்டு வரும் பொய்யான பிரசாரங்கள் குறித்து அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எரிக் சூல்ஹைய்மிடம் கடுமையான அதிருப்தியைத் தெரிவித்ததாகவும் விடுதலைப்புலிகளுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. தற்போதைய சமாதான காலப்பகுதியில் அதனைச் சீர்குலைக்கும் வகையில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்தப் பிரசார நடவடிக்கைகள் சமாதான முயற்சியைப் பாதிப்பது குறித்து பாலசிங்கம் எடுத்துரைத்ததை ஏற்றுக் கொண்ட சூல்ஹைய்ம் இது விடயத்திலான தனது மன வருத்தத்தையும் வெளிப்படுத்தினார் என்று தெரிய வருகிறது

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றுகின்ற பட்சத்தில்



பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதில் தடங்கல்கள் எதுவும் இருக்கப் போவதில்லை என்பதையும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இந்தச் சந்திப்பின் போது விளக்கியுள்ளதாகவும் விடுதலைப்புலிகளுக்கு நெருக்கமான அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## உயர் பாதுகாப்பு...

(03ம் பக்க தொடர்ச்சி)

மலையக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஆயுத வன்முறைகளும், அடாவடித்தனங்களும் இக் கண்டனப் பேரணிக்குக் காரணங்களாய் அமைந்துள்ளன.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென நாம் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வரும் கருத்துக்குக் கிழக்கிலே அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் வலுச்சேர்த்துள்ளன. அங்கு நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவம் தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - தனது காவல் நிலைகளுக்கு அருகில் - இடம்பெறுகின்ற படுகொலைகளைக் கூடத் தடுத்து நிறுத்தாதுள்ளமை, விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் மட்டுமே தமிழ்மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழ முடியும் என்ற உண்மையை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

### அடிமைவாழ்வுக்கு நாம் தயாரில்லை

வரலாற்றுத் தனித்துவமுடைய, தமக்கெனப் பாரம்பரியப் பிரதேசத்தினைக்கொண்ட தமிழ்த் தேசிய இனம் தமக்கான தலைமையினையும் தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. சுயநிர்ணய உரிமை கொண்ட நாம், சிங்களப் பேரினவாத அரச இயந்திரத்திடம் எமது தலைவிதியை ஒப்படைத்துவிட்டு அடிமைகளாக வாழத்தயாரில்லை. கடந்த 56 ஆண்டுகளாக மாறிமாறிப் பதவிக்கு வந்த அரசுகள் காலத்துக்குக் காலம் ஒப்பந்தங்கள் என்ற பெயரில் எம்மை ஏமாற்றியமையே எமது பிரச்சினைகள் தொடர்பில் நாம் கண்டவரலாறாகும். எமது வாழ்வியல், பொருளாதார உரிமைகளை சிறீலங்கா அரசியல் சட்டங்களில் தொடர்ச்சியாக நிராகரித்தே வந்துள்ளன. எமது பொருளாதார மையங்கள் எவ்வாறு படிப்படியாக மாற்றமடைந்தன என்பதையும் நாம் கண்டுள்ளோம். இத்தீவினுடைய தென்பிரதேசத்தில் ஒரு சிறிய மக்கள் வாழும் கிராமம் ஒன்றிலாவது அம்மக்களை வெளியேற்றி சிறீலங்கா இராணுவத்தினரால் வடக்



குக் கிழக்கிலே அமைக்கப்பட்டது போன்ற இராணுவ வலயமொன்றினை ஏற்படுத்த முடியுமா? அவ்வாறு ஏற்படுத்தப்படின் அச்செயல் சிறீலங்கா அரசினையே ஆட்டங்காணவைக்கும். ஆனால், சிறீலங்கா அரச அமைப்புக்கு உட்பட்ட வழிமுறைகளின் மூலம் அவ்வாறானதொரு வலுமிக்க ஆட்சேபத்தைத் தமிழ்மக்களால் தெரிவிக்க முடியாத வகையிலேயே சிறீலங்காவின் பேரினவாத அரசமைப்பும் நடைமுறைகளும் அமைந்துள்ளன.

எமது பாரம்பரிய பிரதேசத்திலே எமது பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுகின்ற இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையொன்றின் மூலமாக மட்டும் தான் நாம் எமது வளங்களை மீளவும் கட்டியெழுப்ப முடியும். இவ்வாறான சபை தொடர்பாக ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் முன் வைக்கும் விமர்சனங்கள் யாவும் போர் நிறுத்த உடன்பாட்டைச் சீர்குலைத்து- சமாதானச் சூழலை நலிவடையச் செய்து - தமது கட்சியை அரசியல் இலாபம் ஈட்டவைக்கும் குறுகிய நோக்கம் கொண்டவையேயாகும். தாம் மார்க்ஸிட்டுகள் எனத் தமது மார்புகளைத் தட்டிக் கொள்ளும் ஜே.வி.பியினர், மார்க்ஸிட்டுக்களால் உருவாக்கப்பட்ட சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினை நிராகரிப்பது அவர்களுடைய சந்தர்ப்பவாத அரசியலை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இத்தகையோரின்கையில் பொம்மையாகத் தாங்கள் தொடர்ந்தும் செயற்பட்டால் நாமும் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசு அமைப்பதற்கான வழிவகைகள் குறித்தே மீண்டும் தீவிரகவனம் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

போர்நிறுத்த உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட அம்சங்களில் ஒன்றான தமிழர்களின் இயல்பு வாழ்க்கையைப் பல ஆண்டுகள் கடந்தும் சிறீலங்கா அரசும், படைகளும் நிறை வேற்றுவதாக இல்லை. ஆறுகட்ட சமாதானப் பேச்சுக்களிலும் முன்வைக்கப்பட்ட கலந்துரையாடலில் உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய சர்ச்சை முதன்மைப்படுத்தப்பட்டது. சர்வதேச நாடுகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் விலாவாரியாக உயர்பாதுகாப்பு வலயம் எப்படித் தமிழர்களின் இயல்பு வாழ்க்கையை மடக்கியது என்பது விளங்கப்படுத்தப்பட்டது.

ஆனால், இதுவரை அப்பிரச்சினை பற்றிய எந்தத் தீர்வும் சிறீலங்கா அரசினால் முன்வைக்கப்படவில்லை. தற்போதும் இராணுவக் காவலரண்கள், சிறிய முகாம்கள் என இராணுவ மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே, சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பினால் யாழ்ப்பாண நகரப் பகுதியில் மட்டும் 395ற்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால், நேரடியாக 435ற்கு மேற்பட்ட குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன. 48ற்கு மேற்பட்ட பொதுக்கட்டடங்கள் பாதிப்படைந்துள்ளன. உயர்பாதுகாப்பு வலயம் அமைக்கப் பட்டதால் 30 ஆயிரத்து 395ற்கு மேற்பட்ட குடும்பங்களும் 29 ஆயிரத்து 525ற்கு மேற்பட்ட தனியார் வீடுகளும் பாதிப்படைந்துள்ளன. இவ்வலயத்தில் 242ற்கு அதிகமான பொதுக் கட்டடங்கள் சிதைந்துள்ளன. தெல்லிப்பழைப் பிரதேசத்தில் மாத்திரம் 24 ஆயிரத்து 594 வீடுகளும் 180ற்கு மேற்பட்ட பொதுக்கட்டடங்களும் 24 ஆயிரத்து 816 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. கிழக்கு அரியாலையில் ஆயிரத்து 970 வீடுகளும் 14ற்கு மேற்பட்ட பொதுக்கட்டடங்களும் இரண்டாயிரத்து 450 குடும்பங்களும் இயல்பு வாழ்க்கையை இழந்துள்ளன.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

## சந்திரிகா அரசின்...

(03ம் பக்க தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் எஸ்.கனகரத்தினம், இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க மூத்த துணைப்பொதுச் செயலாளர் ரி.பஞ்சலிங்கம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர். பேரணியில் கலந்துகொண்ட மக்களுக்கு போக்குவரத்து மற்றும் ஏனைய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இந்தப் பேரணியினால் யாழ்நகரம் முடங்கிப் போனதாகவும் நண்பகல் வரை வர்த்தக நிலையங்கள் மூடிக்கிடந்தன என்றும் வாகனப் போக்குவரத்தும் குறைந்து காணப்பட்டதாகவும் அங்கிருந்த எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் ஆசிரியர் லிங்கம் அவர்களின் நெறியாள்கையில்
பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
இடம்: Breitenreinplatz -27, Bern

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
இடம்: Eigerplatz, Bern

தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33

ஈழமுரசு
ஐரோப்பா
POORALAM WEEKLY

# கருணாவைக் காப்பாற்றியது அலிசாகிர் மௌலானா தங்க வைக்கப்பட்டது ஜனாதிபதி மாளிகைக்கு அருகில்

## – நிலாவினி தகவல் –

## அரச பயங்கரவாத்தின் இன்னொரு முகம்

கருணாவின் பெயரால் கிழக்கில் சிறீலங்கா அரசாங்கம் அரங்கேற்றிவரும், அரச பயங்கரவாதம் தற்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. கருணாவோடு தப்பிச்சென்று மீண்டும் தற்போது விடுதலைப் புலிகளிடம் மறுபடி வந்து இணைந்துகொண்டுள்ள மட்டு - அம்பாறை முன்னாள் மகளீர் படையணித் தளபதி நிலாவினி இந்த அரச பயங்கரவாதத்தின் கொடூர முகத்தை அம்பலத்திற்கு கொண்டுவந்திருக்கின்றார்.

கிழக்கில் கருணாவின் பெயரால் செய்யப்படும் மனிதப் படுகொலைகளுக்கு சிறீலங்காப் படையினரும் இராணுவப் புலனாய்வுத்துறையினருமே காரணம் என்று விடுதலைப் புலிகள் அடித்துக் கூறியபோது அதை நிராகரித்துவந்த சிறீலங்கா பாதுகாப்புத் துறையினரின் பொய்முகம் இப்பொழுது இனம்காட்டப்பட்டிருக்கிறது. கருணா என்கின்ற நபர் சிறீலங்கா படையினரின் குறிப்பாக, புலனாய்வுத்துறையினரின் பாதுகாப்பில்தான் தங்கவைக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் படையினரோடு இணைந்தே செயற்படுகிறார் என்பதையும் நிலாவினி இன்று கிழக்கில் வைத்து ஊடகவியலாளருக்கு வழங்கிய செவ்வியிலே உறுதிப்படுத்தியிருக்கிறார்.

கிழக்கிலே பல்கலைக்கழக பேராசிரியர் தம்பையா மற்றும் ஊடகவியாளார் நடேசன் உட்பட 40ற்கும் மேற்பட்ட பொது மக்கள் கருணாவின் பெயரால் அல்லது கருணாவின் குழுவின் பெயரால் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். கொலையாளிகளை கண்டு பிடிக்கவேண்டிய பொறுப்பு கொலை நடந்த பகுதியின் சட்ட ஒழுங்கை தங்கள் கைகளுக்குள் வைத்திருக்கும் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சுக்கே உரியது. இந்தக் கொலைகளின் சூத்திரதாரி இதே பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பில் இருப்பது உறுதியாகின்றபோது, இந்தக் கொலைகள் சிறீலங்கா பாதுகாப்பு படையினருடைய அனுசரணையுடன் அவர்களால் வழிநடத்தப்பட்ட நபர்களாலேயே செய்யப்பட்டதென்பதும் உறுதியாகின்றது. ஒரு பிரதேசத்தின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அரசாங்கம் அந்தப் பிரதேசத்தில் திட்டமிட்ட அடிப்படையில் பிரதேசவாதத்தையும் படுகொலைகளையும் கட்டவிழ்த்துவிட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியதென்பது அப்பட்டமான ஒரு பயங்கரவாதச் செயலாகும். இது உண்மையிலேயே ஒரு ஆக்கிரமிப்பு அரசாங்கம், தம்மால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் செய்கின்ற வேலைக்கு ஒப்பானதாகும்.

சிறீலங்கா அரசின் இந்த மக்கள் விரோத இன அழிப்பு நடவடிக்கையை உலக நாடுகள் புரிந்துகொண்டு தமிழ் மக்கள் தங்கள் தாயகத்தில் சுய கௌரவத்துடனும் நிம்மதியுடனும் வாழ்வதற்கு தமிழர்களுடைய தேசிய விடுதலைப் போராட்டத்தையும் சுய நிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கவேண்டும்.

### கடைசியாக வந்த செய்தி

(22.06.04)

கருணாவிடம் இருந்து தப்பி வந்து விடுதலைப் புலிகளுடன் மறுபடி இணைந்துகொண்டுள்ள நிலாவினி ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வி தற்போது வெளிவந்திருக்கிறது. அதில் ஏப்ரல் மாதம் கருணாவிற்கு எதிரான தாக்குதலை விடுதலைப் புலிகள் ஆரம்பித்தபோது தாங்கள் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து தப்பி கருணாவோடு மட்டக்களப்பு–பொலநறுவை வீதிவழியாக 18 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வாகனேரிச் சந்தியை சென்றடைந்ததாகவும் அங்கே தங்களுக்காக ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா தனது மெய்ப்பாதுகாப்பாளர் சகிதம் வாகனத்தில் காத்திருந்ததாகவும் நிலாவினி கூறியுள்ளார்.

தாங்கள் சிலரே கருணாவுடன் அங்கு வந்ததை கண்ணுற்ற மௌலான, கருணாவிடம் 'உங்களுடைய படைகள் எல்லாம் எங்கே?' என்று வினவியதாகவும் அதற்கு அவர்களையெல்லாம் தான் கலைத்துவிட்டதாக கருணா கூறியதாகவும் குறிப்பிட்ட நிலாவினி, அதன்பின் உடனடியாக அலிசாகிர் மௌலானாவின் வாகனத்தில் கொழும்பிற்குச் சென்றதாகவும் அங்கு கொழும்புக் கோட்டையில் சிறீலங்கா ஜனாதிபதியின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள கில்டன் விடுதியில் உயர் இராணுவப் பாதுகாப்புடன் தங்கவைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் கொழும்பில் எமக்குத் தெரிய ஒரு இடத்தில் உள்ள வீடொன்றுக்கு கொண்டுசெல்லப்பட்டு 7, 8 நாட்கள் தங்கவைக்கப்பட்டோம். பின்னர் இன்னொரு வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். இந்த வீட்டில் இருந்து பார்த்தால் கொழும்பில் உள்ள அப்பலோ மருத்துவமனை தெரியும். நாங்கள் தங்கியிருந்த வீட்டிற்கு சிறீலங்கா புலனாய்வுத்துறையினரே பாதுகாப்பு வழங்கிவந்தனர். என்று நிலாவினி கூறினார்.

இந்திய அப்பலோ மருத்தவமனையின் இலங்கைக் கிளை கொழும்பிலுள்ள நாரகன்பிட்டியில் அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் சிறீலங்காப் படைத்துறையினருடைய சமிஞ்சைப்பிரிவு படைத்தளம் ஒன்று அமைந்துள்ளது. இத்தளத்தில் சிறீலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையின் ஒரு பிரிவும் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

'எங்களுடைய கைத்தொலைபேசிகளை உபயோகிக்க வேண்டாம் என எங்களுக்கு கருணா கண்டிப்பாகக் கூறிவிட்டார். வெளித் தொடர்புகள் எல்லாம் வரதனுடைய கைத்தொலைபேசிகளின் ஊடாகவே அனுமதிக்கப்பட்டன. இங்கு நாங்கள் தங்கியிருந்த வேளையில் வரதனுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. டக்ளஸ் கருணாவுடன் பேச விரும்புவதாக வரதன் சொன்னார். இதையடுத்து டக்ளசும் கருணாவும் கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டனர். தன்னோடு சேர்ந்து இயங்குமாறு டக்ளஸ் கருணாவைக் கேட்டுக்கொண்டதையும் அதற்குக் கருணா தன்னால் அப்படிச்சேர முடியாது எனவும், தான் சிறீலங்கா இராணுவத்தினருடன் இணைந்தே செயற்படப்போவதாகவும் கூறினார்.

நாங்கள் தங்கியிருந்த வீட்டிற்கு உயர் அதிகாரி ஒருவர் அடிக்கடி வந்து கருணாவுடன் நீண்டநேரம் உரையாடிச் செல்வார். இவர் யார் என்பது எங்களுக்கு தெரியவில்லை. கருணா எங்களிடம் கூறவுமில்லை. கடந்த 13ம் திகதி கருணா எங்களிடம், தான் குடும்பத்தினருடன் வெளிநாடு செல்ல முடிவெடுத்திருப்பதாக கூறினார். அன்று நாம் தங்கியிருந்த வீட்டிற்கு கறுப்புக் கண்ணாடி போடப்பட்ட சிறீலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை வாகனம் ஒன்று வந்தது. அதில் ஏறி கருணா சென்றுவிட்டார். அதன் பின் நாம் அவரைக் காணவில்லை. கருணா சென்றதையடுத்து, நான் தங்கியிருந்த வீட்டிற்கான காவல் பலமானதாக இருக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அப்பலோ மருத்துவமனைக்கு அண்மையில் இருந்த ஒரு தொலைத்தொடர்பு நிலையத்திற்கு சென்று கிழக்கிலுள்ள எனது உறுவினர் ஒருவருடன் நான் தொடர்புகொண்டு நானும் ஏனையவர்களும் மட்டக்களப்பிற்கு வந்துசேர்ந்தோம். நாங்கள் தொடர்ந்து விடுதலைப் புலிகளோடு, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடவே விரும்புகின்றோம். இது தொடர்பாக அமைப்பு என்ன முடிவு எடுக்கின்றதோ அதன்படி நாம் செயற்படவுள்ளோம் எனத் தெரிவித்த நிலாவினி, தற்போது கொழும்பில் வரதனும் இன்னொரு ஒருசில கருணாவின் சகபாடிகளுமே நிற்பதாகவும் கூறினார்.

நிலாவினியின் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொக்கட்டிச்சோலைக்கு அண்மையில் உள்ள சோலையகத்தில் இன்று இடம்பெற்றது. இது தொடர்பாக ஊடகவியளாளர்கள் அலிசாகிரைத் தொடர்புகொண்டு கேட்டபொழுது, இது மனிதாபிமான அடிப்படையில் தன்னால் செய்யப்பட்ட ஒரு நடவடிக்கையென்று அவர் ஒத்துக்கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடத்திடம் இதுபற்றி வினவியபோது, இது கட்சியின் முடிவல்ல என்றும் தனிப்பட்ட நபரின் முடிவே என்றும் தெரிவிக்கப்பட்டது.


### வட, கிழக்கு தமிழ் தேசியத்துடன் இணைந்தே மலையக மக்களின் உரிமைப் போராட்டம் இடம்பெற வேண்டும்

வடக்கு, கிழக்கு தமிழ் தேசியத்துடன் இணைந்துதான் மலையக மக்களின் உரிமைப் போராட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதைவிடுத்து நாம் தனித்து செயற்பட முடியாது என்பது யதார்த்தமாகுமென்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் கூறியுள்ளார். 50 வருட போராட்டத்திற்குப் பின்னர் ஆயுத பலத்திலும், அரசியல் ரீதியிலும் வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசியம் பலமடைந்துள்ளது. சர்வதேச சமூகத்தின் நேரடியான ஒத்துழைப்பையும் அது பெற்றுள்ள இந்த வேளையில் தென்னிலங்கையில் அரசாங்கம் பேச்சுவார்த்தையென்று ஏமாற்றி வருகிறது. அவர்கள் பலமான நிலையில் உள்ளதால் அவர்களை ஏமாற்ற முடியாது அது தவிக்கின்றது என்று அவர் கூறினார்.

கடந்த 16ம் திகதி புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் கலந்துரையாடலின் போது கருத்துத் தெரிவித்த அவர் இது போன்ற சூழ்நிலையில், வெறுமனே தேர்தலுக்கும், வாக்களிப்பதற்கும் பழக்கப்படுத்தப்பட்டுள்ள மலையக மக்கள் எவ்வாறு தமது உரிமைகளை பெற முடியும். எனவேதான், நாம் விடுதலைப் புலிகள் அமைப்புடனும் தமிழ் தேசியத்துடனும் நெருங்கிய தொடர்புகளை அன்று முதல் இன்று வரை வைத்திருக்கின்றோம். இதன் மூலம் தான் மலையக மக்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்தின் முன் கொண்டுவர முடியும்.



# அரசாங்கத்தினால் முடியாததை தொழிற்சங்கம் சாதிக்குமா?



அரசாங்கத்திற்கு எதிரான பெரியளவிலான தொழிற்சங்க நடவடிக்கையொன்றுக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, விவசாயிகளுக்கான உரவிலையை 350 ரூபாவாக குறைப்பது போன்ற பல வகையான உறுதிமொழிகளை ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி அரசாங்கம் மக்களுக்கு வழங்கியிருந்தது. ஆனால் அவற்றை இதுவரையும் நிறைவேற்றவில்லையென்றும் மக்களை அரசாங்கம் ஏமாற்றி வருவதாகவும் குற்றம்சாட்டியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளின் மூலமே அரசாங்கத்தின் இந்த பொய்களை அம்பலப்படுத்த முடியும் என்று சொல்லியிருக்கின்றார். அதேவேளை நாடு தழுவிய ரீதியில் சுகாதாரத்துறையினர் நாளை முதல் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். சம்பள நிலுவை, சம்பள உயர்வு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப்போராட்டம் நடைபெறும் என ஊடகவியலாளர் மாநாட்டில் சுகாதார தொழிற்சங்கத்தலைவர் சமன் ரத்னாயக்கா தெரிவித்துள்ளார். தமது இந்தப் போராட்டத்திற்கு ஏனைய தொழிற்சங்கங்களும் ஆதரவு தரும் என்றும் அவர் கூறியிருக்கின்றார். அரசாங்க பொது ஊழியர் சங்கமும் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றிற்கான முன்னறிவித்தலை அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கின்றது.

அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வு என்பது கடந்த இரண்டு ஆண்டுகாலமாக சரியான முறையில் வழங்கப்படவில்லை. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் போது சம்பள உயர்வு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அரசாங்கம் கலைக்கப்பட்டு தற்போது புதிய அரசாங்கமான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்ற பின்னர் அந்த தீர்மானத்தை அப்படியே அமுல்படுத்தியிருக்கின்றது. ஆனால் அவர்கள் (ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி) தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டபடி 3000 ரூபா சம்பள உயர்வை வழங்கவில்லை. இதனாலேயே தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப்போராட்டங்களுக்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். வழமையாக தொழிற்சங்களின் வேலை நிறுத்தப்போராட்டம் என்றால் எதிர்க்கட்சிகள் பின்னணியில் நின்று செயற்படுவார்கள். அந்த அடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணி நாளை நடைபெறவுள்ள சுகாதாரத்துறையினரின் வேலை நிறுத்தப்போராட்டத்திற்கு ஆதரவாக நிற்கின்றார்கள் என்று கூறலாம். ஆனாலும் தொழிற்சங்கங்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகள் பொய்யானவை என்பதை வெளிக்காட்டவும் வாழ்க்கைச்செலவு அதிகரித்து விட்டதினாலுமே தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கின்றார்கள்.

**நிதியமைச்சர் சரத் அமுனுகம புலிகளுடனான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் வரை அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாது என்று கூறியிருக்கின்றார்.**

அரசாங்கத்தைப் பொறுத்தவரை அமைச்சுக்களின் நடவடிக்கைகளுக்கு கூட ஒதுக்கப்படவேண்டிய சாதாரண நிதியைக்கூட திறைசேரியில் இருந்து பெறமுடியாமல் இருக்கின்றது. அத்துடன் வழமையான சமூக நலன் மற்றும் மானிய உதவிகளைக்கூட செய்யமுடியாமலும் இருக்கின்றது. இந்நிலையில் சம்பள உயர்வு வழங்குவது என்பதை அரசாங்கத்தால் நினைத்துப் பார்க்கவே முடியாது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் முடக்கம் அடைந்திருப்பதினால் வெளிநாட்டு நிதியுதவிகளை பெறமுடியாத நிலை சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதை நாடே அறியும். இந்த நிதி நெருக்கடியானது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவி வகித்த காலப்பகுதியிலும் நிலவியிருந்தது. புலிகளின் இடைக்கால நிர்வாகக்கோரிக்கைக்குப் பின்னர் பேச்சுவார்த்தைகளில் தாமதம் ஏற்பட்டது. அதனாலேயே தான் அப்போதிலிருந்தே நிதியுதவி வழங்கும் நாடுகள் ஏற்கனவே வழங்குவதாக இருந்த 45 பில்லியன் நிதியை இடைநிறுத்தியிருந்தன. இந்த நிலையிலேதான் மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை சனாதிபதி பொறுப்பேற்றதும் பொதுத்தேர்தலை நடத்தியதும் அதில் வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைத்தும் இருந்தார்.

பாரிய பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்பட்டிருந்த சூழ்நிலையிலேதான் சனாதிபதி அப்போது மேற்படி அரசியல் நாடகங்களை நடத்தியிருந்தார் என்பது நிதர்சனமானது. அவர் எதிர்பார்த்தது போன்று அரசாங்கத்தை அமைத்த பின்னரும் கூட நிதிநெருக்கடி நிலமையை சமாளிக்க முடியாமலே போய்விட்டது. அது மாத்திரமல்ல வெளிநாட்டு முதலீட்டாளர்களைக்கூட வரவழைக்கவும் முடியாமல் போய்விட்டது. புலிகளுடன் பேச்சு ஆரம்பிக்காவிட்டால் நிதி நெருக்கடிக்கு தீர்வு இல்லை என்று ஜனாதிபதிக்கு தெரிந்திருந்தும் பொதுத்தேர்தல் காலத்தில் மக்களுக்கான பல வகையான உறுதிமொழிகளை சனாதிபதி வழங்கியிருந்தார். ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கில் தான் தனது மனச்சாட்சியை மறைத்து சனாதிபதி செயற்பட்டிருந்தார் என்பது தெளிவான உண்மை. ஆனால் அதன் பிரதிபலன்களை சனாதிபதியும் அவரது அரசாங்கமும் தற்போது நேரடியாகவே அனுபவிக்கின்றது. குறிப்பாக சம்பள உயர்வு வழங்கப்படாமையினால் தற்போது எழுந்துள்ள தொழிற்சங்க அழுத்தங்கள் சமாளிக்க முடியாத நிலையில் அரசாங்கம் சிக்குண்டு கிடக்கின்றது. இதனை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி சாதகமாக பயன்படுத்துகின்றது.

தங்களது அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருந்திருந்தாலும் கூட இத்தகைய நிதி நெருக்கடிகள், தொழிற்சங்க அழுத்தங்கள் ஏற்பட்டிருக்கும் என்பது ரணில் விக்கிரமசிங்காவிற்கு தெரியும். ஆனால் தற்போது எதிர்க்கட்சியாக இருக்கின்றமையாலும் சனாதிபதி தனது அரசாங்கத்தை பழிவாங்கியதற்கு பதிலடி கொடுக்கும் வகையிலும் அவர் (ஐக்கிய தேசிய முன்னணி) இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளை சாதகமாக பயன்படுத்துகின்றது எனலாம். தொழிற்சங்கங்களும் அவ்வாறான ஆதரவுகளை சாதகமாகப் பயன்படுத்தி தமது கோரிக்கைகளை நிறைவேற்ற முற்படுகின்றன. ஆகமொத்தம் சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள பொருளாதர நெருக்கடியானது இனப்பிரச்சினை தீர்விற்கான நீதியான தீர்வு ஒன்றை ஏற்படுத்தாமையினாலேயே தோன்றியது என்பதை சகலரும் உணர்ந்துகொள்ள வேண்டும். அதுவே யதார்த்தமும் கூட. நிதியமைச்சர் சரத் அமுனுகம புலிகளுடனான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் வரை அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாது என்று கூறியிருக்கின்றார். அத்துடன் சகல அரசியல் கட்சிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு உதவி வழங்க வேண்டும் என்றும் கேட்டிருக்கின்றார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கப்பிரதிநிதிகளை சந்தித்து நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பாக விளக்கமளித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் மங்கள சமரவீர இடைக்கால நிர்வாகமோ ஏதேனும் ஓர் தற்காலிக தீர்வோ வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்படவில்லையானால் நிதியுதவி வழங்கும் நாடுகளின் நிதியுதவிகளை பெற்றுக்கொள்ள முடியாது என்று கூறியிருக்கின்றார். அவ்வாறு வெளிநாட்டு உதவிகள் தாராளமாக கிடைக்கின்ற பட்சத்திலேயே சம்பள உயர்வு மற்றும் விவசாயிகளுக்கான உரமானிய உதவி போன்றவற்றை வழங்க முடியும் என்றும் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியதோடு இக்கட்டான ஒரு காலகட்டத்தில் அரசாங்க வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபடக்கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். அமைச்சர்களின் இந்த விளக்கங்களையும் வேண்டுகோள்களையும் அவதானிக்கும் போது இனப்பிரச்சினைத் தீர்வு என்பதன் தாற்பரியம் அவர்களுக்கு நன்றாகவே விளங்குகின்றது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவது அல்லது சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்துவது அவர்களுக்கு (அமைச்சர்களுக்கு) முடியாத காரியமாக இருக்கின்றது. இந்த ஒரு சங்கடமான நிலைதான் கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திலும் அமைச்சர்களுக்கு ஏற்பட்டிருந்தது. மறு புறத்தில் காலங்காலமாக இந்த சங்கடமான நிலையை தோற்றுவித்து வந்தவர்கள் இந்த அமைச்சர்கள் என்று சொல்லப்படுகின்ற அரசியல்வாதிகள்தான்.

ஆனால் இவற்றை நிவர்த்தி செய்வதற்கு தற்போது கூட காலம் சென்றுவிடவில்லை. உண்மை நிலமைகளை ஆற அமர சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்த முடியும். சம்பள உயர்வு தாருங்கள் என்று கேட்டு தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்க தலைவர்களை அழைத்து தமிழர் உரிமைகளை வழங்க வேண்டிய அவசியத்தையும் அதற்கான ஆதரவையும் அரசாங்கம் கேட்க முடியும். ஏன் எதிர்க்கட்சி கூட அவ்வாறு தெளிவுபடுத்தலாம். வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு தன்னாட்சி அதிகார சபை வழங்குவதன் மூலம் நாட்டின் இறைமை கெட்டுவிடாது என்று அரசியல்வாதிகளே கூறுவார்களாக இருந்தால் தொழிற்சங்கங்களும் அவர்களைப் பின்தொடர்ந்திருக்கின்ற மக்களும் ஏற்றுக்கொள்வார்கள். போராட்ட முஸ்தீபில் ஈடுபட்டிருக்கும் தொழிற்சங்கங்கள் முற்றிலும் சிங்களவர்களை மையப்படுத்தியே இருக்கின்றது. எனவேதான் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை புரியவைப்பது இலகுவான காரியமாகும். அதேபோன்று சிறீலங்காவின் தென்பகுதியில் உள்ள தொழிற்சங்கங்கள் அனைத்துமே ஒன்று திரண்டு இனப்பிரச்சினையைத் தீருங்கள் அப்போது தான் எமது பிரச்சினைகளும் தீரும் என்று கூறி அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் அழுத்தம் கொடுப்பார்களேயானால் நிரந்தர சமாதானம் மட்டுமல்ல அவர்களின் சம்பள உயர்வும் தானாகவே வந்துவிடும். ஆகவே அரசியல் கட்சிகளால் முடியாததை அழுத்தக் குழுக்களாகிய தொழிற்சங்கங்கள் சாதிக்க முடியும். செய்வார்களா?

– கொழும்பிலிருந்து ஊரோடி

சுஜி ஜுவல்லரி
SUJI JEWELLERY
சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004



தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜிஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்கநகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.

Neuengass - Passage 3, 3011 Bern Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02

# பேச்சு வார்த்தை நடக்குமா ?

சமாதானப்பேச்சுவார்த்தைகள் உள்நாட்டிலேயே நடைபெற வேண்டுமென முன்னர் நிபந்தனைகளை விதித்த சிறீலங்கா சனாதிபதி சந்திரிக்கா தற்போது பேச்சுக்களுக்கான பேச்சுக்களையே வெளிநாட்டிலிருந்து



மேற்கொள்கின்றார் போல் தெரிகின்றது. தனிப்பட்ட பயணமாக இலண்டன் சென்ற சந்திரிக்கா நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெறல்கேசனை சந்தித்துப் பேசியுள்ளார். கடந்த நாட்களில் இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வே பிரதிநிதிகள் அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் மாறி மாறி சந்தித்துத் தகவல் பரிமாற்ரங்களை செய்து வந்த போது விடுதலைப் புலிகளின் கருத்துக்களைப் பெறுவதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். சந்திரிக்காவை சந்திக்க நாட்கணக்கில் காத்திருக்க நேர்ந்தது. சில சமயங்களில் சந்திக்க முடியாமல் போனது. கடந்த மாதம் கிளிநொச்சிக்கு வந்து விடுதலைப் புலிகளைச் சந்தித்த எரிக் சூல்ஹைறம் விடுதலைப்புலிகள் தெரிவித்த கருத்துக்களை சனாதிபதியிடம் தெரிவித்து சாதகமான பதிலை பெற முடியாமல் நோர்வே திரும்பினார். இதன் பிறகு கடந்த 16ம் திகதி சிறீலங்காவின் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கர் எதிர்பாராத விஜயம் ஒன்றை கிளிநொச்சிக்கு மேற்கொண்டார். முதல் நாள் இரவே விடுதலைப் புலிகளுக்கு ஹான் பிறஸ்கரின் வருகை குறித்து தெரியவந்தது.

அரசாங்கத்திடமிருந்து சாதகமான புதிய செய்தி ஒன்றை நோர்வே தூதுவர் கொண்டு வந்திருப்பார் என்றே எதிர்பாக்கப்பட்டது. அன்றைய கலந்துரையாடலின் முடிவில் ஊடகவியலாளர்கள் இது குறித்து ஆர்வமாக தூதுவரிடம் கேட்டபோது, அவ்வாறு எதையும் அவர் கொண்டு வரவில்லை என்பது தெரியவந்தது. ஆனால் அன்றைய சந்திப்பின் போது அரசின் நிலைப்பாடுகள் குறித்து சற்று அழுத்தமான முறையில் விடுதலைப் புலிகள் தமது கருத்துக்களை தூதுவரிடம் முன்வைத்தனர். அதன் பிறகு இப்போது இலண்டனில் இரு தரப்பினருக்குமிடையிலான தகவல் பரிமாற்ரங்களை நோர்வே தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹைறம் கடந்த 16ம் திகதி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து பேசியுள்ளார். இதனையடுத்தே நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெறல் கேசன் இலண்டனில் தங்கியிருந்த சந்திரிக்காவை சந்தித்து பேசியுள்ளார். இந்த பேச்சுக்களின் முழுமையான விபரங்கள்

# இனி ஒரு தேர்தல் வருமா?

தேரிவிக்கப்படவில்லை.

முன்னதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து பேசியபோது சந்திரிக்கா தெரிவித்த இணக்கப்பாடான கருத்துக்கள் கூட அடுத்தநாளே மாற்றம் பெற்றது. புலிகள் தெரிவித்த இடைக்கால நிர்வாகசபை தொடர்பாகவே முதலில் பேச்சு என்கின்ற விடையத்தில் உடன்படுவதாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்த சனாதிபதி அடுத்தநாள் தொலைக்காட்சியில் உரையாடியபோது இடைக்கால நிர்வாக சபை குறித்துபேசுகின்ற வேளையிலேயே இறுதிதீர்வுக்கான பேச்சுக்களும் இடம்

பெற வேண்டும் எனக்கூறியுள்ளார் சனாதிபதி முன்னுக்கு பின்முரணான கருத்துக்கள் விடுதலைப் புலிகளையும் சர்வதேச சமூகங்களையும் மட்டும் குழப்ப முறவைக்கவில்லை. ஊடகச்செய்திகளை உள்வாங்குகின்ற சாதாரண பொதுமக்களும் தலையயபிய்த்துக்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது.

முன்னர் ஒருதடவை சனாதிபதி சந்திரிக்காவின் உறுதிமொழிகள எழுத்தில் தரப்பட வேண்டும் என நோர்வே அனுசரணையாளர்கள் கேட்டதாக செய்திகள் வெளியாகின. உறுதிமொழிகள் மட்டுமல்ல, அவரது ஒவ்வெரு உரையாடல்களையும் பதிவு செய்து பின் அவருக்கே அதனைப் போட்டுக்காட்டித்தான் அவருடனான பேச்சுவார்த்தைகளைத் தொடரவேண்டியுள்ளது.

தேசிய இனப்பிரச்சனையை கையாள்வதற்கான தெளிவானதொரு நிலைப்பாடு சனாதிபதி சந்திரிக்காவிடம் இல்லை. நேரத்திற்கு நேரம் வெவ்வேறு விதமான கருத்துக்களை சொல்வதன் மூலம் பிரச்சினையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும் நடவடிக்கைகளையே அவர் செய்துவருகின்றார் என்பதற்கு அவரின் கடந்த கால நடவடிக்கைகள்சாட்சிபகிர்கின்றன. உண்மையில் சந்திரிக்காவை தனது ஆட்சி அதிகாரத்தை பேணுவதற்கும் அதனை நீடிப்பதற்குமான பிரச்சனைகளே அதிகம் ஆட்கொள்கின்றன. இதனை முன்னிறுத்தியே இனப்பிரச்சனையையும் கையாளமுயல்கின்றார். நாடாளுமன்றத்தில் தனது அரசின் அறுதிப்பெரும்பான்மையை நிலைநிறுத்தவும் அதன் மூலம் அரசமைப்பை மாற்றியமைத்து தனது சனாதிபதி ஆட்சிக் காலம் முடிவுற்றதும் பிரதமராக அதிகாரத்தை நீடித்துச்செல்லவும் என்னென்ன விடையங்களை மேற்கொள்ளமுடியும் என அவர் இரவும் பகலுமாக ஆராய்ந்து வருகின்றார். ஹெல உறுமய பிக்குகளின் முழுமையான ஆதரவினைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் தோன்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியை எவ்விதமேனும் வளைத்து கொள்ளலாம் என்கின்ற முயற்சியும் தோற்றுப்போனது.


முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை இனணத்துக்கொள்ள அல்லது அதனை பிரித்து தெடுக்கும் முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிப்பதன் மூலம் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின்

**ஜே.வி.பியின் இந்தமிரட்டல் உண்மையானதல்ல. அவர்கள் அரசாங்கத்தில் பங்குகொண்டு அதிகாரம் செய்யக்கிடைத்த இந்தச்சந்தர்ப்பத்தை இழக்கவிரும்பமாட்டார்கள்.**

ஆதரவை பெற்றுக்கொள்ளலாம் என்று சில விட்டுக்கொடுப்புக்களை செய்வது போல் காட்டிக்கொள்ள முனையும் போதுதெல்லாம் அவரின் பங்காளியான ஜே.வி.பி வரிந்து கட்டிக்கொண்டு அதனை எதிர்க்கின்றது. விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகம் பற்றிப்பேசினால் தாம் அரசில் இருந்து வெளியேறப் போவதாகவும் ஜே.வி.பியினர் அச்சுறுத்துகின்றனர். இன்னெரு தேர்தலுக்கு முகம் கொடுக்க தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

ஜே.வி.பியின் இந்த மிரட்டல் உண்மையானதல்ல. அவர்கள் அரசாங்கத்தில் பங்கு கொண்டு அதிகாரம் செய்யக்கிடைத்த இந்தச்சந்தர்ப்பத்தை இழக்கவிரும்பமாட்டார்கள். இன்னும் ஒரு தேர்தலுக்கு முகம் கொடுப்பதானால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி என்ற கூட்டமைப்பிலிருந்தே தனித்து அவர்கள் தேர்தலில் நிற்கவேண்டிவரும். அவ்வாறு நடக்கும் பட்சத்தில் மீண்டும் ரணில் தலமையிலான ஐக்கிய தேசிய முன்னனியே ஆட்சியமைக்கவேண்டிவரும். இது ஜே.வி.பியினருக்கு தெரியாத தொன்றல்ல. ஆனாலும் சந்திரிக்கா சிறிது இறங்கிவர முயற்சித்தாலும் அவரை இயன்றவரை அச்சுறுத்தும் முயற்சியில் ஜே.வி. பியினர் தொடர்ந்தும் ஈடுபடுவார்கள்.

ரணில்தலமையிலான ஐக்கிய தேசிய முன்னனி ஆட்சியதிகாரத்திலிருந்த கடந்த அரசாங்கத்தில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி என்ற வகையில் பல



சிக்கல்களை ரணில் அரசிற்கு சந்திரிக்கா கொடுத்து வந்தார். அதன் உச்சக்கட்ட நிகழ்வே ரணில் அரசின் வசமிருந்த பாதுகாப்பு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களை பறித்தெடுத்தமை. அச்சந்தர்ப்பத்தில் ரணில் அரசு பல சிக்கல்களுக்கும், இழுபறிகளுக்கும் முகம் கொடுக்க நேர்ந்தது. அதனால் சமாதானப் பேச்சுக்களும் சிக்கலுக்குள்ளானது.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியதிகாரத்துக்கு வந்துள்ள சந்திரிக்கா, ரணில் எதிர் கொண்ட சிக்கல்களை விட அதிகமானவற்றை உள்ளேயும் வெளியேயும் எதிர்கொண்டு வருகின்றார். இன்றைய குழப்பமான அரசியல் சூழ்நிலையில் மீண்டுமொரு நாடாளுமன்ற தேர்தலுக்கு நாடு செல்லவேண்டி ஏற்படும் என்றே பொது மக்கள் எதிர்பாக்கின்றார்கள்

**– வன்னியிலிருந்து விவேக்**

**நேசன் Cash and Carry**



இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள்,
V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.


217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 3574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

# நடிகர் விஜயகாந்த் – டாக்டர் ராமதாஸ் மோதல்?



தேர்தலில் போட்டியிடாமல் அன்புமணி அமைச்சராகி இருக்கிறார் என்று நடிகர் விஜயகாந்த் பேசியதற்கு பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்தார். பாட்டாளி மக்கள் கட்சி நிறுவன தலைவர் டாக்டர் ராமதாஸ் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது, நடிகர் விஜயகாந்த் பேசும் போது, எனது மகன் அன்புமணி பதவிக்கு ஆசைப்பட்டு, தேர்தலில் போட்டியிடாமல் மத்திய அமைச்சராகி இருக்கிறார் என்று கூறி உள்ளார். அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். நடிகர்கள் அரசியலுக்கு வரக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அப்படி வருபவர்கள் அரைவேக்காட்டுத்தனமாக இருக்கக் கூடாது. நடிகர் விஜயகாந்த் அரைவேக்காட்டுத்தனமாக பேசி இருக்கிறார். அன்புமணி ஒருவர் மட்டும் தேர்தலில் போட்டியிடாமல் மத்திய அமைச்சராகி விட்டது போல் பேசுவது அவரது அறியாமையை காட்டுகிறது. 1991ம் ஆண்டு நரசிம்மராவ் பிரதமரானபோது அவர் பாராளுமன்றத்தின் எந்த சபையிலும் உறுப்பினராக இல்லை. பதவிக்கு வந்த பிறகுதான் உறுப்பினர் ஆனார். இப்போது மத்திய அமைச்சராக பதவியேற்ற பலர் டெல்லி மேல்சபை உறுப்பினர்கள்தான். இதில் 2 பேர் இப்போதுதான் ராஜ்யசபை உறுப்பினர் பதவிக்கு போட்டியிடுகிறார்கள். தமிழ்நாட்டில் 2 முறைகள் முதல் அமைச்சராக இருந்த ராஜாஜி தேர்தலில் போட்டியிடாமல் மேல்சபை உறுப்பினராக வந்துதான் அந்த பதவியை ஏற்றார், இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறினார்.

இதேவேளை நடிகர் விஜயகாந்துக்கு எதிராக சேலத்தில் பாட்டாளி மக்கள் கட்சியினர் போராட்டத்தில் குதித்தனர். விஜயகாந்த் நடித்த படம் ஓடிய திரையரங்குகளை முற்றுகையிட்டு படத்தை ஓடவிடாமல் தடுத்தனர். சேலம் கோரிமேட்டில் உள்ள ஒரு திரையரங்கில் நடிகர் விஜயகாந்த் நடித்த கள்ளழகர் படம் திரையிடப்பட்டு இருந்தது. பாட்டாளி இளைஞர் சங்க மாநில தலைவர் ரா.அருள் மற்றும் நிர்வாகிகள் இரவு அங்கு சென்று தியேட்டரை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள். விஜயகாந்த் நடித்த படத்தை திரையிடக்கூடாது என்று வலியுறுத்தினார்கள். அதை தொடர்ந்து அந்த தியேட்டரில் கள்ளழகர் படம் எடுக்கப்பட்டு அதற்கு பதில் `குத்து' திரையிடப்பட்டது.



இந்நிலையில் கடலூர் மாவட்டத்தில் விஜயகாந்த் ரசிகர் மன்றத்தினர் பா.ம.க.வுக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள். இதன்போது பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசின் உருவ பொம்மை எரிக்கப்பட்டது. தகவல் கிடைத்ததும் போலீசார் விரைந்து சென்று உருவ பொம்மை எரித்ததாக 15 பேரை கைது செய்தனர்.

ஏற்கனவே நடிகர் ரஜனிகாந்திற்கும் டாக்டர் ராமதாசிற்கும் இடையே முரண்பாடுகள் எழுந்து தற்போது தணிந்துள்ள நிலையில், இப்போது நடிகர் விஜயகாந்திற்கும் டாக்டர் ராமதாசிற்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் தோல்விக்கு நானே பொறுப்பு

## – வாஜ்பாய் –



தேர்தல் தோல்விக்கு நானே பொறுப்பு; அதற்காக பிராயச்சித்தம் தேடுவேன் என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார். மனாலியில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது, கடந்த பாராளுமன்ற தேர்தலில் எனது பெயரை முன்னிறுத்தியே தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரசாரம் நடை பெற்றது. அதனால் தோல்விக்கு நானே அதிகபட்ச பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதற்காக பிராயச்சித்தம் தேடுவேன். தோல்விக்காக மன்னிப்பு கேட்கவும் விரும்புகிறேன். பா.ஜனதாவையும், தேசிய ஜனநாயக கூட்டணியையும் வலுப்படுத்துவதற்காக மேலும் கடுமையாக உழைப்பதுதான் தோல்விக்கான பிராயச்சித்தமாகும். அடுத்த தேர்தல் எனது தலைமையில் நடை பெறுமா? என்பது குறித்து இப்போது எதுவும் கூற முடியாது. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால், நான் கடுமையாக உழைக்க வேண்டும்.

தேர்தலில் கிடைத்த தோல்வி என்பது தனிப்பட்ட ஒருவரின் தோல்வி ஆகாது. அது, கூட்டுத் தோல்வி. தோல்விக்கான காரணங்களை ஆராய வேண்டும். இதன்மூலம் வருங்காலங்களில் தோல்வியை தவிர்க்க முடியும். இவ்வாறு வாஜ்பாய் கூறினார். பின்னர், மனாலியில் நடைபெற்ற விழாவில், பேசிய வாஜ்பாய், வாழ்க்கையில் வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வருவது சகஜம்தான். தோல்விக்காக யாரும் அழுது கொண்டு இருக்க முடியாது. ஆனால், வெற்றியே நமது இலக்காக இருக்க வேண்டும் என்று கூறினார்.

# தாயகம் திரும்ப முயன்ற 27 ஈழத்தமிழர்கள்

## இராமேஸ்வரத்தில் கைதுசெய்யபாட்டனர்

தமிழகத்தில் இருந்து கடல் வழியாக தாயகம் திரும்பமுயன்ற 27 ஈழத்தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்தில் வைத்துத் தமிழகக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்த இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் அனுமதியின்றி கடல் வழியாக நாடு திரும்புவது அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் போர் அற்ற நிலை நீடிப்பதால் அகதிகள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதில் ஆர்வமாக உள்ளனர்.

இலங்கை அகதிகள் இவ்வாறு நாடு திரும்புவது குறித்தும் கரையோரப் பகுதிகளில் இருந்து இலங்கைக்குப் பொருள்கள் கடத்தப்படுவது குறித்தும் கடந்த சில நாள்களாக தமிழகக் காவல்துறையினர் விசாரணைகளை நடத்தி வந்தனர். கடந்த 16ம் திகதி புதன்கிழமை நள்ளிரவு இலங்கைக்கு அகதிகளுடன் படகு புறப்படுகிறது என்று கிடைத்த தகவலை அடுத்து இந்தியக் கரையோர ரோந்துப் படையினர் இராமேஸ்வரம் கடற்பகுதியில் வைத்து 27 ஈழத்தமிழர்களுடன் படகைக் கைப்பற்றினர்.



ரோந்துப் படையினர் படகை மடக்கியதும் அதிலிருந்த படகோட்டிகள் உட்பட நால்வர் கடலில் குதித்து நீந்தித் தப்பிக்க முயன்றுள்ளனர். அவர்களில் இருவரை ரோந்துப் படையினர் துரத்திப் பிடித்தனர். கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் திருநெல்வேலியில் பணியாற்றும் காவல்துறை காவலர் என்று தெரிய வந்துள்ளது. அனுமதியின்றி இலங்கை செல்பவர்களுக்கு இவர் முகவராக செயற்பட்டு வந்தார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது

அகதிகளை கைதுசெய்த இந்தியக்கடற்படையினர் படகையும், படகிலிருந்த இரண்டு இலட்சம் ரூபா மதிப்புள்ள 40 பீடிச்சிப்பங்கள், சீடி பிளேயர், ரீவி, சேலை, போர்வை போன்ற துணிவகைகள், 4 மொபைல் போன்கள் போன்றவற்றையும் பறிமுதல் செய்தனர். பிடிபட்டவர்கள் கடற்படைமுகாமிற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். பிடிபட்டவர்கள் சேலம், திண்டுக்கல் முகாம்களில் தாங்கள் அகதிகளாகச் தங்கியிருந்ததாகவும் இலங்கைக்கு விமானத்தில் செல்வதற்கு போதிய வசதி இல்லாததால் முகவர் வசந்தனிடம் தலா ரூ.10 ஆயிரம் வீதம் கொடுத்து படகில் தாங்கள் இலங்கை செல்ல முயன்றதாகவும் தெரிவித்தனர்.




லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்

தரமான, கூடவே சுவையான இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் லாச் சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை

5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91

எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE



ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.



Pub-Fr

# ஈராக் இராணுவத்தில் சேர வந்தவர்கள் மீது தாக்குதல்

## 35 பேர் பலி, 138 பேர் காயம்


(20.06.04)

ஈராக் இராணுவத்தில் சேர வந்தவர்கள் மீது தற்கொலைப்படை நடத்திய தாக்குதலில் 35 பேர் பலியாகி, 138 பேர் காயம் அடைந்தனர். ஈராக் நாட்டில் வருகிற 30ம் திகதி நிர்வாகப் பொறுப்பை தற்காலிக அரசிடம் அமெரிக்கா ஒப்படைக்க உள்ளது. இதனால் இடைக்கால அரசு புதிய இராணுவத்தை உருவாக்குவதற்காக இராணுவத்துக்கு ஆட்களைச் சேர்த்து வருகிறது. பாக்தாத்தில் உள்ள ஆள் எடுப்பு மையத்தில் இராணுவத்தில் சேருவதற்கு ஆட்கள் திரண்டு இருந்தனர்.

அப்போது இந்த மையத்தின் வாசலில் தற்கொலைப் படையினர் வெடிகுண்டு ஏற்றப்பட்ட கார் ஒன்றை நிறுத்தி இருந்தனர். காரில் இருந்த குண்டு திடீர் என்று வெடித்தது. இதில் அந்த இடத்திலேயே 12 பேர் பலியானார்கள். பலர் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது மேலும் 23 பேர் பலியானார்கள். இதனால் பலியானார்கள் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்தது. ஒரு பெண் உள்பட 138 பேர் காயம் அடைந்தனர்.



## கணவருக்காக வாதாட வழக்கறிஞர்களை திரட்டுகிறார் சதாம் மனைவி



ஈராக்கிய முன்னாள் அதிபர் சதாம் உசேன் மீது விசேட நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற இருக்கிறது. சதாம் உசேனுக்காக வாதாட அவரது மனைவி, 20 வழக்கறிஞர்களை நியமித்திருக்கிறார். சதாம் உசேன் வழக்கை விசாரிக்க ஈராக்கில் ஒரு விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தில் சதாம் உசேன் ஆஜர் படுத்தப்படுவாரா என்ற விவரம் இன்னும் தெரியவில்லை. ஆனால் அவர் மீதான வழக்குகள் அங்கு விசாரிக்கப்படும். சதாம் உசேனுக்கு ஆதரவாக வாதாட 20 வழக்கறிஞர்களை சதாம் உசேன் மனைவி சஜிதா கைர் நியமித்துள்ளார். சஜிதா தற்போது ஜோர்டானில் இருக்கிறார். அவர் நியமித்துள்ள வழக்கறிஞர்கள் குழுவில் ஜோர்டான் வழக்கறிஞர்கள் சங்க தலைவர் உசேன் மிஜல்லி மற்றும் முகமது அல்-ரஸ்தன் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். இந்த குழுவினருக்கு அதிகாரத்தை வழங்கி சதாம் உசேன் மனைவி சஜிதா கையெழுத்திட்டுள்ளார். ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்து இருப்பது சட்ட விரோதம். அதை தொடர்ந்து நடந்த அனைத்து சம்பவங்களுமே சட்ட விரோதங்கள்தான் என்று வழக்கறிஞர் மிஜல்லி தெரிவித்துள்ளார்.

ஈராக் அதிபர் சதாம் உசேன் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் திகதி அமெரிக்க படையினரால் கைது செய்யப்பட்டு இரகசிய இடத்தில் வைக்கப்பட்டுள்ளார். அவரை பார்க்க யாருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. செஞ்சிலுவை சங்கத்தை சேர்ந்த இருவர் மட்டும் ஒரே ஒரு தடவை சதாமை பார்க்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஈராக்கில் அமெரிக்கா எதிர்கொள்ளும் புதிய பிரச்சினை

### திருமணம் ஆகாமலேயே தாய்மையடையும் இராணுவத்தினர் அதிகரிப்பு

ஈராக்கிற்கு அனுப்பப்பட்ட பெண் இராணுவத்தினரால் அமெரிக்கா புதிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது. ஈராக்கில் இருக்கும் பெண் அமெரிக்க இராணுவத்தினர் பலர் திருமணம் ஆகாமலேயே தாய்மையடைந்துள்ளனர். இதனால் அவர்கள் போர் முனையை விட்டு நாட்டுக்கு திரும்பிக் கொண்டு இருக்கிறார்கள். ஈராக் சென்ற இராணுவத்தினரில் பலர் இராணுவ வீரர்களுடன் ஏற்பட்ட காதல் காரணமாக திருமணம் ஆகாமலேயே தாய்மையடைந்தது தான் அமெரிக்க அரச தரப்பிற்கு சிக்கல்களை உருவாக்கியிருக்கிறது.

திருமணம் ஆகாமல் தாய்மையடைந்த வீராங்கனைகள் எத்தனை பேர் என்று சொல்ல அமெரிக்க இராணுவ தலைமையகமான `பெண்டகன்' மறுத்து விட்டது. `இது வெளியில் சொல்லக் கூடிய புள்ளி விவரம் அல்ல" என்று அமெரிக்க இராணுவ தலைமையகம் சொன்னதாக `வாஷிங்டன் டைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை ஈராக் சென்றுள்ள இங்கிலாந்து நாட்டு வீராங்கனைகளிலும் பலர் திருமணம் ஆகாமலேயே தாய்மையடைந்தது இராணுவத்தில் இருந்து வெளியேறி உள்ளனர். கடந்த ஆண்டு மே மாதம் பெர்சியன் கடலில் போய்க் கொண்டிருந்த ஒரு போர்க் கப்பலில் வீராங்கனை ஒருவர் திருமணம் ஆகாமலேயே கப்பலிலே குழந்தை பெற்றார். அவர் தாய்மையடைந்ததே தனக்கு தெரியாது என்று உயர் அதிகாரிகளிடம் தெரிவித்தார். தெற்கு ஈராக்கில் உள்ள இங்கிலாந்து படைகளில் 82 வீராங்கனைகள் கடந்த ஆண்டு தாய்மையடைந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டதாக `இலண்டன் டெய்லி டெலிகிராப்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தாய்மையடைந்ததன் காரணமாக இராணுவத்தை விட்டு கடந்த ஆண்டு 1,698 வீராங்கனைகள் வெளியேறினார்கள். இந்த ஆண்டு முதல் 6 மாதங்களில்



இந்த எண்ணிக்கை 922 ஆக உயர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஈராக் போர்க் கைதியை நிர்வாணமாக்கி சித்ரவதை செய்த அமெரிக்க வீராங்கனைகளில் ஒருவரான 21 வயது லிண்டி இங்கிலண்டு, ஒரு வீரருடன் ஏற்பட்ட காதல் காரணமாக திருமணம் ஆகாமலேயே தாய்மையடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

L Auto Theorie Kurs
Car Driving Licence
கார் தியோறி படிக்க வேண்டுமா?
(ஓரளவு டொச்மொழி போதும்)
கார் ஓட லைசென்ஸ் வேண்டுமா?
(குறைந்த செலவுடன்)
BERN SWISS
2004 ம் ஆண்டுக்கான புதிய புத்தகம், புதிய வினாக்களுடன் புதிய வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன
தொடர்புகளுக்கு:
றூபா சிவரூபன் 079 314 16 43

சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்
N.S.Jewellery
(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)
உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது இறக்குமதி செய்துள்ளோம்.
சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.
N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich
Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

# அம்பாள் ஸ்ரோர்ஸ்
# Ambal Store

Schwarzenburg strasse 127, 3097 Liebefeld-BE

Tel. 031.972 89 46 Fax. 031.972 89 46 Natel. 079.311 86 16

எமது ஸ்தாபனத்தின் மாதாந்த மலிவு விலைப்பட்டியலின் மூலம் அதிக லாபமடைய அனைத்து வாடிக்கையாளர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

மலிவு!...... மலிவு!........ மலிவு!.....மலிவு!...... மலிவு!........ மலிவு!....மலிவு!........ மலிவு!

## மலிவு விலைப் பட்டியல்.

16.06.2004 - 15.07.2004 வரையும்.

| பொருட்கள் | முதலில். | தற்போது. | சேமியுங்கள். |
|---|---|---|---|
| உடன்மீன்கள் | 9.50 | 5.90 | 3.60 |
| உடன் இறால் | 16.50 | 9.50 | 7.00 |
| வெண்டி | 5.50 | 3.60 | 1.90 |
| முருங்கை | 5.50 | 3.60 | 1.90 |
| புடல் | 5.50 | 3.60 | 1.90 |
| 5Kg ப-அரிசி | 12.50 | 9.50 | 3.00 |
| நெஸ்ற்ரோமோல்ட் | 7.50 | 5.50 | 2.00 |
| 2Kg மசூல் பருப்பு | 5.90 | 3.50 | 2.40 |
| நண்டு, கணவாய் | 9.50 | 6.70 | 2.40 |

-14 வருட இறக்குமதி அனுபவம் கொண்டவர்கள் மூலம் உடன் மீன்கள், மரக்கறிகள், பழவகைகள், இறக்குமதி செய்யப்படுவதால் நேரவிரயம், பொருள்விரயம், பொருளாதார விரயம் போன்றவற்றைத் தவிர்த்து மக்களின் நன்மதிப்பைப் பெற்று நாமும் மகிழ்வு கொள்கிறோம்.

- சுகாதார முறைப்படி மருத்துவர்களின் பொதி செய்யப்பட்ட இறைச்சிவகைகள் மட்டுமே எம்மிடம் விற்பனைக்குக் கிடைக்கும்

- சுவிஸில் இறக்குமதியாகும் அனைத்து விதமான மளிகைப் பொருட்களும் எமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## அறிமுகம்: பணமாற்றுச் சேவை

### யாழ்பாணத்திற்கான பணமாற்றுச்சேவை

சுவிஸ் நேரம் நண்பகல் 12:30ற்கு முன் எம்மிடம் வரும் பணம் அன்றய தினமே உங்கள் உறவினர் கையில்.

- நேர விரயத்தினைத் தவிர்க்க சுவிஸின் எந்த மூலையில் இருந்து கொண்டும் எமது வங்கிக்கு பணத்தினை சேர்க்குமிடத்து, உங்கள் உறவினர் கையில் துரிதகதியில் பணம் போய்ச் சேரும்.

யாழ்பாண பணமாற்றுச்சேவை எவ்வித பண இழப்புமின்றி குறித்த தொகை குறித்த நேரத்தில் உங்கள் உறவுகளின் கைகளில்.

- அனைத்து நாடுகளுக்கும் பணம் அனுப்பும் கூலி 10.00 சுவிஸ்பிராங்குகள் மட்டுமே!

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை-11:00 மணி தொடக்கம் 19:00 மணிவரை எமது ஸ்தாபனம் திறந்திருக்கும்

அனைத்துத் தொடர்புகட்க்கும் K.Aravinthan

Ambal Store, Schwarzenburgstrasse-127 ug, 3097 Liebefeld

# அதியுயர் சபையில் உரியப்பட்ட பண்பாடும் கசக்கப்பட்ட விழுமியங்களும்



ஊழல் மலிந்து, சீர்கேடுகளின் மொத்த உருவமாக மாறிவிட்ட சிறீலங்காவின் அரசியலைச் சீர்படுத்த வல்லவர்கள் எனச் சிங்கள மக்களால் நம்பப்பட்டவர்களும், தமது முன்னைய வன்முறைப் பாதைகளை அவர்கள் நிச்சயமாகவே கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் நிரந்தரமாகவே கலந்துவிட்டார்கள் என சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரால் தெரிவிக்கப்பட்டவர்களுமான ஜே.வி.பியினர், தாம் தமது வன்முறைப் பாதையிலிருந்து இம்மியும் விலகிவிடவில்லையென்பதை நாட்டின் அதியுயர் சபையான நாடாளுமன்றிலே நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள்.

88–90களில் `இருண்ட நாட்களை' நாட்டிற்குப் பரிசளித்த இந்தச் செந்தோழர்கள் பிறேமதாசவின் இரும்புக் கரத்தினால் தமது ஆயுதப் பாதை தமது நோக்கினை அடைந்திட உதவாது என்பதனை உணர்ந்து கொண்டனர். எனவே நாடாளுமன்ற அரசியலையே தமது எதிர்காலப் பயணத்துக்கான வாகனமாகப் பயன்படுத்த விழைந்த அவர்கள் 1994, 2000, 2003, 2004 ம் ஆண்டுத் தேர்தல்களில் படிப்படியாக முன்னேறி இன்று சிறீலங்காவின் தேசிய அரசியலில் `இரண்டாவது பெரும் சக்தி' என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரினால் விளிக்கப்படும் அளவுக்கு முன்னேறியுள்ளார். ஆனாலும்கூட அவர்களின் `பிறவிக்குணம்' மட்டும் எள்ளளவேனும் மாறிவிடவில்லை என்பதற்கு கடந்த மூன்று நாடாளுமன்ற அமர்வுகளுமே சாட்சியங்களாகும்.

பொதுவுடமை பேசியே தமது அரசியலைத் தொடங்கிய அவர்கள் அதன்போது தேசத்தின் அனைத்து விழுமியங்களையுமே புறந்தள்ளியிருந்தனர் என்பதும், அவை மாற்றியமைக்கப்படவேண்டுமென்பது அவர்களது அரசியல் இலக்காக விளங்கியது என்பதுவும் இன்னமும் நோக்கத்தக்கவை. அந்தப் பண்புக் கூறுகள் அவர்களை விட்டுக் கொஞ்சமும் அகன்றுவிடவில்லை என்பதனை கடந்துபோன நாடாளுமன்ற நாட்கள் சுட்டிக்காட்டுகின்றன.

எதையுமே எடுத்தெறிந்து பேசுவதுடன், தாம் நினைப்பதுவும் சொல்வதுமே சரியானதெனச் சாதிப்பதுடன் அதற்காக எந்த வழிமுறையையுமே பின்பற்றத் தயங்காத `துணிவு'ம் ஜே.வி.பியினரின் சின்னங்களாகும்.

இவர்கள் சிங்கள அரசியல்வாதிகளின் பொட்டுக்கேடுகளைப் புட்டுக்காட்டுவதும், தமிழ் மக்களுக்கான அரசியல் அதிகாரப் பரவலாக்கம் உள்ளிட்ட உரிமைகளை வழங்குவதை, `நாட்டைப் பிரிக்கும்' ஈனச் செயலாகச் சித்தரிப்பதும் அடிமட்டச் சிங்கள மக்களையும் சிங்கள மத்தியதர ஊழியர்களையும் வெகுவாக ஈர்த்து விட்டிருந்தன. தாம் ஆட்சியில் பங்கேற்றால் ஊழல்களுக்கு இடமளிக்க மாட்டோம், ஏழை மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம், தொழிலாளர், விவசாயிகள், ஊழியர்களின் வாழ்வை முன்னேற்றுவோம் என்ற கோசங்களில் தென்னிலங்கைச் சிங்கள ஏழை, மத்தியதர மக்கள் முற்றிலும் தம் வசமிழந்து போனதே 2004 ஏப்ரல் 2ம் திகதியின் கதை. இதற்கு வெறுமனே ஜே.வி.பியினரின் வார்த்தை ஜாலங்கள் மட்டுமே காரணமல்லவென்பதும், இருபெரும் கட்சிகளினதும் ஊழல் மலிந்த அராஜகம் நிறைந்த, ஏழைகளைச் சிறிதுமே ஏறெடுத்தும் பார்க்காத ஆட்சித் திறமே அவர்களை ஜே.வி.பியினரின் ஆவேசப் பேச்சுக்களின் சொல்லடுக்குகளுட் சிக்கவைத்தன என்பதுவும் உண்மையே.

**ஆனால் நடந்தது என்ன?**

கொழும்பு செக்கடித் தெருவின் பாலியல், சூதாட்ட, ஆபாசத்திரைப்படங்கள் ஆகிய சமூகச் சீர்கேட்டு நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதன் மூலம் சிறீலங்காவின் சமூக விழுமியங்களும், பண்பாடும் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும், இவற்றுக்கு ஊறுவிளைவிக்கும் ஆபாசத் திரைப்படங்களின் இறக்குமதியைத் தடைசெய்யப் போவதாகவும் காலாச்சார விழுமியங்கள் அமைச்சு தெரிவிக்கிறது. இதற்காக கலாச்சார விழுமியங்கள் அமைச்சரும் ஜே.வி.பி பிரமுகருமான விஜித ஹேரத்துக்குப் பெரும் புகழாரம் சூட்டப்படுகிறது.

இதே விஜித ஹேரத் கடந்த 8ம் திகதி நாட்டின் அதியுயர் சபையிலே துச்சாதன் வேடம்பூண்டு மிகச் சிறப்பாகச் செயற்பட்டது மேற்படி விழுமியங்களை எந்தளவுக்கு பாதுகாக்கின்றது என அக்கறையுள்ளவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

சிறீலங்காவின் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின்படி, அரசமதம் பௌத்த மதமென்பதும். அதனைப் பேணி வளர்ப்பது அரசின் கடமையென்பதும் உலகறிந்த விடயம். பௌத்த துறவிகளுக்கு சிங்கள பௌத்தர்கள் அதி உயர் மரியாதை செலுத்துவர். தமது வீடுகளுக்கு வரும் பிக்குகள் அமரும் கதிரையில் வெள்ளைத் துணியொன்றை விரிப்பது அவர்களின் வழக்கம். நாட்டின் தலைவர்கூட துறவிகளின் பாதம் பணிந்து ஆசிபெறுவதுடன், அவர்களுக்குச் சமமாக அமர்வது கிடையாது.

இந்தளவுக்கு அதியுயர் மரியாதைக்குரிய பௌத்த துறவிகள் இருவர் சிறீலங்காவின் நாடாளுமன்றில் அடித்து உதைக்கப்பட்டு, விதைகள் கசக்கப்பட்டு வதைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் ஒருவரின் காவியுடை உரியப்பட்ட வெட்கக்கேடும் நடந்தேறியுள்ளன. இதில் துகிலுரி படலத்தை நிறைவேற்றியவர் கலாசார அமைச்சர் விஜித ஹேரத் என்பது கவனிக்கத்தக்கது. பிக்குவைக் கட்டிப்பிடித்துத் தூக்கித் தாக்குதற் படலத்தை ஆரம்பித்து வைத்தவர், அரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கவின் மைத்துனரான ஜீவன் குமாரதுங்க என்பதும் முக்கியத்துவம் பெறுகிறது. நலமடிக்கும் தொழிலைப் புரிந்த பெருந்தகை யாரென்பது வெளிப்படுத்தப்படவில்லை. அவரும் யாராவது முக்கியஸ்தராகவே இருத்தல் கூடும்.

`மகே அம்மே' என்று பிக்கு எம்பி கதறிய நிகழ்வு சிறீலங்காவில் நிகழ்ந்த அதியுயர் பண்பாட்டுக்கொலை எனக் கருதுதல் கூடும். அன்றைய தினம் செங்கோலினைப் பிரதியமைச்சர் ஒருவரே களவாடிச் சென்றமையும், அதனை மீளப்பெறச் சென்ற உதவிப் படைக்கலசேவிதரிடம் செங்கோலினை நிலத்தில் அடித்து நொருக்கிவிடப் போவதாக அவர் மிரட்டியதும்,

13வது நாடாளுமன்றின் முதலாவது அமர்வின்போது சபாநாயகர் தெரிவில் தமக்கு எதிராக வாக்களித்த பிக்குகள் மீது புத்தகங்களை வீசி எறிந்து தூசித்ததும், அவர்களது விகாரைகளின் முன்னர் கறுப்புக்கொடிகளைக் கட்டியதும் விஹாரைகளைத் தாக்கியதும்.

இரண்டாவது அமர்வின்போது தமக்குத் தெரியாது இரு பிரதான கட்சிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வந்ததன் மூலம் உப சபாநாயகர் தெரிவு போட்டியின்றி நடந்தபோது விமல் வீரவன்ச பிரதமர் மஹிந்த ராஜபக்சவைச் சபை நடுவே முகத்தின்முன் விரலை நீட்டி எச்சரித்ததும்,

கந்தப்பளைப் படுகொலை விவாதத்தின்போது அதனைக் குழப்பிய அராஜகமும்,

சபாநாயகர் தெரிவின்போது வாக்குப் பெட்டியை அபகரித்து அதன் மீதே ஏறிக் குந்திக் கொண்டதுவும்,

எம்பியின் `மகே அம்மே' யின் முன் வீரியமிழந்துதான் போய்விட்டன அல்லவா? ஒரு பிக்கு எம்.பி. சிறுநீர் கழிக்க முடியாது அவதிப்படுகிறார். மற்றையவரின் வயிற்றினுள் உள் இரத்தப் பெருக்கினால் இரத்தம் உறைந்துள்ளது. கையின் எலும்பும் பாதிக்கப்பட்டுள்ளது.

நிலமை இவ்வாறிருக்க விமல் வீரவின்சவும், சபை முதல்வர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் `அப்படி ஒரு தாக்குதல் சம்பவம் நடக்கவே இல்லை' என அடித்துக் கூறியதோடு, பிக்கு எம்.பிக்களே தம்மைத் தூசித்ததாகவும், அவர்களில் ஒருவர் தூசண வார்த்தையால் ஏசியதைத் தாம் கேட்டதாகவும் கூறினார்.

ஆக, நடந்தவை இவைதான். வெறும் இரண்டே மாதங்களில் சிறீலங்காவின் பண்பாட்டை இவ்வளவு சிறப்பாக உலக அரங்கில் முன்னிறுத்திவிட்டனர் சிவப்பு, நீலச் `சந்தான' வினர். இரண்டு மாதங்களிலேயே இவ்வளவு கீர்த்தியைப் பெற்றுக்கொடுத்து இவர்கள் இனிமேல் எவ்வளவு காரியங்களைச் சாதிப்பார்களோ அந்தப் புத்த பகவானுக்கே வெளிச்சம்.

> சிறீலங்காவின் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின்படி, அரசமதம் பௌத்த மதமென்பதும். அதனைப் பேணி வளர்ப்பது அரசின் கடமையென்பதும் உலகறிந்த விடயம். பௌத்த துறவிகளுக்கு சிங்கள பௌத்தர்கள் அதி உயர் மரியாதை செலுத்துவர். தமது வீடுகளுக்கு வரும் பிக்குகள் அமரும் கதிரையில் வெள்ளைத் துணியொன்றை விரிப்பது அவர்களின் வழக்கம். நாட்டின் தலைவர் கூட துறவிகளின் பாதம் பணிந்து ஆசிபெறுவதுடன், அவர்களுக்குச் சமமாக அமர்வது கிடையாது.

**பு. சத்தியமூர்த்தி**


S.A. Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

CREDIT வங்கிகடன் S.A.NATHAN

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா ? B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

## சிறீலங்கா இராணுவமே.....

*(01ம் பக்கத் தொடர்ச்சி)*

கருணாவின் காலத்தில் மட்டக்களப்பு, அம்பாறைமாவட்ட மகளிர் விசேட தளபதியாகவிருந்த நிலாவினி கருணா இப்போதும் இராணுவப் பாதுகாப்பில் இருப்பதற்கு தான் கண்கண்ட சாட்சி என்று கூறியிருக்கிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலண்டன் பி.பி.சி நிறுவனத்துக்கு கருத்துத் தெரிவித்த அவர், கருணாவின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் தமக்கு துண்டறப் பிடிக்கவில்லை என்றும் பெற்றோர்களிடம் தங்களை ஒப்படைக்கும்படி தொடர்ந்து அவருக்கு தாங்கள் அழுத்தம் கொடுத்துக்கொண்டு இருந்ததாகவும் குறிப்பிட்ட நிலாவினி, சிறீலங்கா இராணுவம் கருணா பாதுகாப்புக் கருதி வேறிடத்துக்க மாற்றியதை அடுத்து தாங்கள் தப்பிவந்துவிட்டதாகவும் கூறியுள்ளார். இதேவேளை, கருணாவைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்த சிறீலங்கா அரசு முயற்சிக்கின்றது என்று மட்டு - அம்பாறை மாவட்ட விசேட தளபதி கேணல் ரமேஷ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இக்குற்றச்சாட்டை சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் திட்டவட்டமாக மறுத்தார். அவ்வாறு ஏதாவது நடந்திருந்தால் அதற்கான சரியான ஆதாரங்களை விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கவேண்டும். அப்படிச் செய்தால் அதுபற்றி விசாரிப்பது குறித்து நாங்கள் பரிசீலிக்கலாம் என்றும் அவர் மேலும் சொன்னார்.

## சட்டவிரோதமாக...

*(01ம் பக்கத் தொடர்ச்சி)*

இந்த சட்டத்துக்குப் புறம்பான தொழில் வழங்கல் நடவடிக்கையால் வருடத்துக்கு 5500 கோடி யூரோ இழப்பீடு எற்படுவதாக குறிப்பிட்ட பிரான்சின் தொழிலமைச்சர் ஜான் லுவி போர்லோ தற்போது பாரிய நிதிநெருக்கடியில் சிக்கியிருக்கும் 'செக்குரித்தே சோசியலுக்கு' (அரச மருத்துவக் காப்பீட்டு நிறுவனம்) எற்பட்ட நட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு இந்தச் சட்டவிரோத வேலை வழங்கலாலேயே ஏற்பட்டதாகவும் கூறினார். இதை தடுத்த நிறுத்துவதற்காக தொழில்துறைசார் கண்காணிப்பு நிறுவனங்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுத்திருப்பதுடன் இதற்கென புதிதாக 85 பரிசோதகர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முதலில் கட்டடத்தொழில் மற்றும் பொதுப் பராமரிப்புச் சார்ந்த தொழிற் துறைகள், கபே பார்கள் உணவு விடுதிகள் தங்கும் விடுதிகள் சார்ந்த தொழில் துறைகள் விவசாயம் சார்ந்த தொழில்துறைகள், கலை கலாச்சார அமைப்புகள் சார்ந்த தொழிற் துறைகள் என்ற நான்கு பாரிய துறைகளில் கண்காணிப்பு பணிகள் மெற்கொள்ளப்படும் என்றும் இந்த துறைகளில் தான் அதிகளவுக்கு சட்டவிரோத வேலை வழங்கல்கள் இடம்பெறுவதாகவும் குறிப்பாக கட்டடத்தொழில் மற்றும் உணவுவிடுதி தங்கும் விடுதி தொழிற் துறைகளில் 40 வீதமான மோசடிகள் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சட்டவிரோதமாக தொழில் வழங்கும் நிறுவனங்களுக்கான அரசாங்க சலுகைகளை நிறுத்துவதுடன் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு மூன்று வருடச் சிறைத் தண்டனையும் 35 ஆயிரம் யூரோ அபராதமும் விதிப்பதென்று பிரான்ஸ் அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. சட்டவிரோதமாக

தொழில் வழங்குபவருக்கு மட்டுமல்லாது தொழில் செய்பவருக்கும் இந்தத் தண்டனை வழங்கப்படவுள்ளது. அண்மைக் காலமாக பிரான்சின் தொழிற்துறைக் கண்காணிப்பு அமைப்புக்கள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில் வேறும் சில மோசடி நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக பிரெஞ்சு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சிலர் தமது தேவைகளுக்காக அமைப்புக்கள் அல்லது நிறுவனங்களை உருவாக்கிவிட்டு தேவை முடிந்ததும் அரசாங்கத்துக்கு செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளை செலுத்தாமல் பொய்யான நட்டக் கணக்குக்களைக் காட்டி தமது நிறுவனத்தை மூடிவிடுவது, இவ்வாறான நிறுவனங்களில் போலியான சம்பளப் பட்டியல்களை தயாரித்து மோசடியான முறையில் வேலை இழப்பீட்டுத் தொகையை பெறுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பிரான்சின் தொழில் அமைச்சு இவ்வாறான மோசடி நடவடிக்கைகள் தொடர்பான போதுமான ஆதாரங்களை வைத்துக்கொண்டே செயலில் இறங்குவதாகவும் அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வேலை மோசடிக்கு எதிரான இந்தப் புதிய நடிவடிக்கையின் பெறுபேறுகள் தொடர்பான முதலாவது அறிக்கை அடுத்த மாத காலத்துக்குள் வெளியிடப்படும் என்று பிரான்சின் தொழிலமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 'ஹிட்லர் போன்று ஆட்சி நடத்த இடமளிக்க முடியாது எதிர்க்கட்சியினர் இணைந்து நல்ல பாடம் புகட்டுவோம்' கண்டியில் எதிர்க்கட்சித் தலைவர்

(22.06.04)

ஜனாதிபதியும், மக்கள் விடுதலை முன்னணியினரும் இணைந்து நாடாளுமன்றத்தை கட்டுப்படுத்தி ஹிட்லரைப் போன்று சர்வாதிகாரப் போக்கில் நாட்டை ஆட்சி செய்ய எத்தனிக்கின்றனர். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. எனவே, எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒன்றுபட்டு அரசாங்கத்துக்கு நல்ல பாடம் புகட்டுவோம் என்று சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



நேற்றுத் திங்கட்கிழமை காலை கண்டி குயின்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறினார்.

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில் மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் பொருட்டு இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து பேசுகையில்... தங்களுக்கு விருப்பமான வகையில் நாடாளுமன்றப் பலம் கிடைக்வில்லை என்பதால் நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளைச் சீர்குலைத்து ஜனநாயகத்தையும், கௌரவத்தையும் பாதிக்கும் வகையில் செயற்படுகின்றனர். தொடர்ந்தும் இவ்வாறு செயற்படுவார்களானால் எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒன்றுபடுத்தி ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் ஆதரவுடன் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தவும் தயாராகவுள்ளது என்றும் தெரிவித்தார். இக்கூட்டத்தில் மலிக் சமரவிக்கிரம, கெஹெலிய ரம்புக்வெல, திஸ்ஸ அத்தநாயக்க உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பெண் கவிகளிற்கான....

# கறுப்பு யூலை கவிக் கனல்

1983 யூலை மாதம்!

எங்கள் ஆழ் மன அடித்தளத்தில் வடுக்களாய்ப் பதிந்த மாதம். இனக்கலவரம் என்ற பெயரில் ஈழத் தமிழரின் மன உடல்கூறுகள் துண்டுதுண்டாய்ப் பிய்த்தெடுக்கப்பட்ட மாதம். ஓடிற்று இது நடந்து 21 ஆண்டுகள். இக் கறுப்பு யூலையை நினைவுகூரும் முகமாகவும், இலைமறைக் காய்களாக உள்ள பெரும் கவிஞர்களை ஊக்குவிக்கு முகமாகவும் இக் கவிக் கனல் இடம்பெறவுள்ளது.

**கவிக் கனல் கவிதைக்கான நிபந்தனைகள்**

1. கவிதைகள் யாவும் 16 வரிகளுக்குட்பட்டவையாக இருக்கவேண்டும்.
2. 14 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் யாவரும் பங்குபற்றலாம்.
3. கறுப்பு யூலையைக் கருவாகக்கொண்டு, விரும்பிய தலைப்பொன்றில் கவிதை புனையப்படலாம்.
4. சிறந்ததாகத் தெரிவுசெய்யப்படும் கவிதைகள் 18.07.2004 நடைபெறவுள்ள கறுப்பு யூலை நிகழ்வில் மேடையேற்றப்படும்.

கவிதைகள் 30.06.2004 க்கு முன்னர் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

**உங்கள் கவிதையுடன் பெயர், முகவரி தொலைபேசி இலக்கத்தையும் அனுப்பிவைக்கவும்.**

Frau Mangayarkarasi Shanmugathasan
"Kavikkanal"
Pestaiozzistrasse 7, 6032 emmer


உங்கள்...
மில்லர் அங்காடியின் 10வது ஆண்டை முன்னிட்டு 04.07.2004 வரை

# மாபெரும் மலிவு விற்பனை



மீன் 7.50 sfr இருந்து

மளிகைப் பொருட்கள் அனைத்தும் மிக மலிவு விலையில்.... உங்கள் இல்லங்களின் விழாக்களுக்கு விசேட விலைக் கழிவு தருகிறோம்




மரக்கறி 3.80 sfr இருந்து

அனைத்துவகை தொலைபேசி அட்டைகளும் சிறப்பு விலையில் கழிவில் விற்கப்படும்...

LOTUS, HOME SWEET HOME

தொலைபேசி அட்டைகள் ~~30~~ - 24

உலகின் எப்பாகத்துக்கும் பணம் அனுப்பித் தரப்படும்
உலகின் எப்பாகத்திலிருந்தும் பணம் எடுத்துத் தரப்படும்.
அனைத்துப் பொருட்களும் அதி விசேட விலைக்கழிவில்

MOOS STR 11, 6003 LUZERN
Tel / 041 210 63 67

# எனது பாடலும் உனது பாடலும்

## (முன்னாள் தோழருக்கு இந்நாளில் பகிரங்கமாக)

எனது பாடலை நான் எழுதியே ஆகவேண்டும். வெகு விரைவாக – அதி வேகமாக எனது பாடலை நான் எழுதியே ஆகவேண்டும்.

எனது இசையை நான் பாடியே ஆகவேண்டும் புயலிலும் வேகமாக, மழையை விட ஈரமாக எனது இசையை நான் பாடிட வேண்டும்.

எனது காதலை நான் சொல்லியே ஆக வேண்டும் தென்றலை விட மென்மையாக, மலரை விட மிருதுவாக எனது காதலை நான் சொல்லியே ஆகவேண்டும்.

எனது வாழ்வை நான் குறித்தே ஆகவேண்டும். இரும்பை விட உறுதியான இரத்தத்தை விட உயிர்ப்பான எனது வாழ்வை நான் குறித்தே ஆகவேண்டும்

இப்பொழுதே, இந்தக் கணமே இதனை நான் செய்தே ஆகவேண்டும். இல்லையெனில் பின்நாளில் எப்பொழுதுமே இவை செய்யப்படமுடியாது போய்விடும்.

நல்லது தோழரே, நான் சொல்ல வந்தது என்னவென்று உனக்குப் புரிந்ததுதானே?

எனது பாடல் என்றேனே, எனது இசை என்றேனே, எனது காதல் என்றேனே, எனது வாழ்வு என்றேனே அல்ல, அப்படியல்ல.

எனது பாடல் அல்ல, அது. உனதும் பாடல். எல்லோரினதும் பாடல். எனது இசை அல்ல, அது உனதும் இசை. எல்லோரினதும் இசை. எனது காதல் அல்ல அது. உனதும் காதல். எல்லோரினதும் காதல். எனது வாழ்வு அல்ல, அது உனதும் வாழ்வு. எல்லோரினதும் வாழ்வு.

இதனை இன்னும் நான் எப்படி எடுத்துச் சொல்ல? மேலும் இதனை நான் எப்படி விளக்கி முடிக்க?

தோழரே, நாட்களை எல்லாம் நாம் நினைவில் குறிக்கிறோம். வாழ்வினை எல்லாம் நாம் பதிவு செய்கிறோம். கல்லுத் தடக்கி வீழ்த்திய காலம் அல்ல நமது காலம். முள்ளுக்கீறி இரத்தம் கசிந்த வாழ்வு அல்ல நமது வாழ்வு.

சொல்கிறேன் கேள். சோர்வுதான். சோகம்தான். ஆயினும் சொல்கிறேன் கேள். வாழ்வின் வதைபடலை என் வாயால் சொல்கிறேன் கேள். வரலாற்றின் இரத்தப் பெருக்கை என் வாயால் சொல்கிறேன் கேள். அது உனக்கும் தெரியும்தான். நீயும் உணர்ந்ததுதான். நீயும் அனுபவித்ததுதான். ஆனால் நீ மறந்திருப்பாய். அல்லது மறந்ததுபோல் நடித்திருப்பாய்.

ஆதலினால் சொல்கின்றேன் கேள்.

கல் தடுக்கியா நாம் வீழ்ந்தோம். இல்லையே! மலை அல்லவா நம் முன்னே நின்றது. அந்த மலையை அகற்ற ஒவ்வொரு கல்லு கல்லாய் நாம் பெயர்த்தோமே. பெயர்த்த கல்லைத்தூக்கி எறியவே இடர்ப்பட்டோம். எத்துணை கடினமாக நாம் முயன்றோம். ஞாபகம் கொள்கின்றாயா? இன்னும் அந்த மலையின் கருங்கற்பாறைகள் எஞ்சிக்கிடக்கின்றன.

என்றாலும் இன்னும் முயல்வோம்.

இடையில் நீ ஏன் விலகினாய் சொல் விலக்கப்பட்டேன் என்று வீண்கதை பேசாதே! விடு உலகெங்கும் நிகழ்ந்த விடுதலைப்போரின் வரலாறுகளை எல்லாம் நீ வாசித்தாய்தானே! வாசித்தபின்தானே இந்த விடுதலையின் வாசலுக்கு நீ வந்தாய். வந்த பிறகும் வாசித்தாய்தானே! இல்லையெனாதே!

உன் மேசையில் குவிந்திருந்த புத்தகங்களையெல்லாம் நான் பார்த்தேன். உனது அலுமாரியில் அடுக்கியிருந்த வரலாற்று ஆவணங்களையெல்லாம் நான் வாசித்தேன். இல்லையெனாதே! இன்னும் பொய் சொல்லாதே!

விடுதலை வரலாற்றின் பக்கங்களில் விலகிய, விலக்கப்பட்ட விலகிய ஓடிய எத்தனை வரிகளை நீ வாசித்திருப்பாய். இல்லையா? ஆயினும் விடுதலைக் கீதங்கள் அந்த வரலாற்றின் பக்கங்களில் இசைக்கப்பட்டனதானே? கவிதையின் வீச்சில் விடுதலையின் வீறு எழுந்ததுதானே?

விடுதலை முச்சு விடுபட்டுப் போனதில்லையே.

இன்னும் நான் சொல்வேன். நிறையச் சொல்வேன். அடுக்கிச் சொல்வேன்.

விலக்கப்பட்டேன் என்று இன்னும் சொல்லாதே! விடுதலையின் வாழ்வில் நிறையக் காயங்கள் கண்டோம். இன்னும் காயங்கள் காண்போம். அதற்காக காதலித்த தேசத்தைக் கைவிடலாமா?

தோழரே, மார்க்சீயதத்துவம் பேசுகின்றீர்– வாய்கிழியக் கத்துகின்றீர். வல்லபமாய்ப் பேசுகின்றீர். மெத்த மகிழ்ச்சி மார்க்சீயம் மகத்தான ஆயுதம். அதிலும் ஆருக்கும் சந்தேகம் வரல்கூடுமோ?

ஆனால் மார்க்சீயம் சகலரோக நிவாரணி அல்லவே! வரலாறு விரிய, வாழ்வு பெருக, மார்க்சீயம் தன்னுள் வாங்க, தத்துவம் வெளியில் நிறைய உண்டு. மார்க்சீயம் உளுத்துப்போன தத்துவம் அல்ல. இன்னும் மென்மேலும் உயர்த்தப்படவேண்டிய ஆயுதம். அதனைப் புரிந்து கொள்வீர்.

இப்படி நான் சொன்னேன் என்றவுடன் புரட்டல்வாதி, திரிபுவாதி, என்று ஆயிரம் புனைவுகளை என்மேல் போர்த்துவீர். போலி என்று மேலும் ஓர் ஆடையை என்மேல் எறிவீர். போர்த்துங்கள்? மேலும் ஓர் பொன்னாடை என்று அகமகிழ்வேன். அவ்வளவும்தான் செய்வேன்.

அதற்கப்பால் அதுபற்றிக் கவலைப்பட ஏதுமில்லை. செய்ய ஆயிரம் வேலைகள் உண்டு. அவை நோக்கி விரைவேன். வீண்நேரம் போக்கேன். விழல் கதைத்து திரியேன்.

தோழரே உமக்குத் துன்பம் தர நான் ஒருப்படேன். சொல்ல துயர் பெருகும். ஆயினும் சொல்லும் தேவை உண்டு.

மனிதர் மனிதர், என்றுதான் நாமும் நின்றோம். மானுட விடுதலைப் பாடலைத்தான் நாமும் இசைத்தோம்.

மாத்தறையில் பொடிமெனிக்கா துவக்கெடுப்பான்
மாதகலில் கந்தையா பொல்லெடுப்பான்
நாத்தாண்டியாவில் காசிம்லெப்பை
நாருரிக்கும் கத்தியினைக் கரமெடுப்பான்.

என்று புதுவை இரத்தினதுரையும் இலங்கைத்தீவு முழுமைக்கான இனங்களை இணைத்த, வர்க்க விடுதலைக் கீதம் பாடினார்.

`இல்லை, நீர் மனிதர் அல்லர். தமிழர், தமிழர்' என்றே எமக்கு எதிரி சொன்னான். எதிரியைச் சார்ந்து எல்லோரும் சொல்லினர். நாம் தமிழர் என்று அப்போதுதான் அறிந்தோம். எதிரி அடிக்க அடிக்கத்தான் நாமும் தமிழர் என்று எழுந்தோம். மனிதர் என்று அவன் எம்மை, மதிக்கவில்லை. தமிழர் என்று சொல்லித்தான் எம்மை அவன் மிதித்தான். நாம் தமிழர் என்று அவன்தான் நமக்குச் சொல்லித்தந்தான்.

அதனால்தான் புதுவை இரத்தினதுரையும் இப்படிப் பாடுகின்றார்.

ஒன்றாய் இருந்த வீட்டில்தானே
உரிமை கேட்கின்றோம்
பாதி வீட்டைத் தந்தால் போதும்
மீதி வீடு அவர்களுக்குத்தான்.
இந்தப் பிரிவிடுதலுக்கேன் இந்தனை கொதிப்பு?
ஆரோகணித்திருக்க சிம்மாசனமா கேட்டோம்
கால் மடித்திருக்க கதிரைதானே கேட்டோம்.

நண்பரே, நம் தோழரே, இவை உண்மை அல்லவா? இல்லையா இதனை ஒரு காலத்தில் நீரும் ஏற்றிருந்தீர்தானே?

எல்லோரும் ஏற்றிருந்தோம் அல்லவா? இல்லை என்று மறுப்பீரா? எத்தனை சைக்கிளோட்டங்கள்?

எண்ணிப்பாரும். எத்தனை காடுகளைக் கடந்தோம். யோசித்துப்பாரும். எத்தனை கடல்களை மேவினோம். உணர்ந்து பாரும். நாம் பட்ட துன்பம் ஒன்றா, இரண்டா? ஒருக்கால் யோசியும்.

யாவற்றுக்கும் மேலாக எத்தனை தோழர்களை இழந்தோம். இல்லையா?

உன்னை சிங்கள இராணுவம் தேடுகின்றது. ஊர்விட்டு ஊர் ஓடி வந்தாய். ஒளிந்தாய்.

சாப்பாட்டுக்குப் பணம் இல்லாது சங்கடப்பட்டாய். பட்டினி நாட்கள்தான் பல வந்தன, போயின.

தேடும் இராணுவத்துக்கு அஞ்சி, இரவெல்லாம் படுக்கைகள் மாறின. மாட்டுக் கொட்டகையில் ஓரிரவு, தண்ணீர்த்தாங்கியில் இன்னொரு இரவு, வாழைத்தோட்டத்தில் ஓரிரவு, கோயில் மூலஸ்தானத்திலும் ஒரு இரவு இப்படி அஞ்சிய இரவுகள் ஆயிரம்.

ஆயினும் பகல் பகலாய் அரசியல் வேலை செய்ய, நீ பஞ்சிப்படவில்லை. எத்தனை ஒழுங்கைகளை ஊடறுத்து ஓடின உன் சைக்கிள். எத்தனை முகங்களைக் கண்டன உன் கண்கள். எத்தனை

**மாயோன் எழுதுவது...**

அரசியல் வார்த்தைகளை நீ அள்ளி வீசினாய். எத்தனை சூரியன் உன்னைச் சுட்டெரித்தது. எத்தனை நிலாப்பாலில் நீ குளித்தாய். பயமற்ற வாழ்வை வாழவும், மற்றவர்களை வாழவைக்கும் துணிவு கொண்டாய்.

துயரில் துடித்த நாட்களும் இருந்தனதாம். சக தோழன் கோரமாகச் சாக்காட்டப்பட்டபோது, துயரில் வெந்தோம். துடித்துப்போனோம். கடலம்மா இரக்கமே இல்லாது, இன்னொரு தோழனை விழுங்கியபோது, விம்மினோம். வெடித்துக் குலுங்கினோம். விடுதலைக்காக நமக்குச் சாவரினும் சந்தோசமாக ஏற்றிருப்போமோ இல்லையோ தெரியாது. ஆனால் நமது தோழர்களுக்கு சா வந்தபோது தாங்கவே முடியாதிருந்தது.

ஞாபகமிருக்கின்றதா நண்பரே, எத்தனை நெருப்பாறுகளைக் கடந்தோம். எத்தனைநாள் மலைகளைக் குடைந்தோம். கடலும், காடும் எம்மை ஈவிரக்கமில்லாமல் தின்ன முயன்றபோதும் இல்லையென்று நிமிர்ந்தோம். இல்லையா தோழரே. இவற்றினூடுதானே உங்கள் பயணமும் இனிதாய் நிகழ்ந்தது. இவற்றுக்கிடையில்தானே உங்கள் இலக்கும். தெளிவாய்த் தெரிந்தது.

இடையில், இப்பொழுது ஏன் இந்தத் தயக்கம் நேர்ந்தது? சொல்லுங்கள் தோழரே!

மிகுதி அடுத்த இதழில்

IMPORTAS Asian Groceries

Importers, Distributors & Wholesalers of Kings, Niru, Suryaa, TRS, GFT

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

| | | |
|---|---|---|
| பறோட்டா | 36X375 | 1.00 ஈரோ |
| Family பறோட்டா | 24X750 | 1.80 ஈரோ |
| பாலப்பம் | 30X400 | 1.30 ஈரோ |
| மசாலாதோசை | 30X400 | 1.30 ஈரோ |
| இட்டலி சாம்பார் | 30X500 | 1.40 ஈரோ |
| சப்பாத்தி | 36X400 | 1.10 ஈரோ |
| பூரி மசாலா | 30X500 | 1.50 ஈரோ |
| சென்ன பட்டூரா | 30X500 | 1.50 ஈரோ |

Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45

சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports Tel: 0049 -24625557



## சிறுகதை

# ஊனமது நல் அழகே

**சாந்தினி வரதராஜன்**
**(ஜேர்மனி)**

(1)

கடலின் ஆழத்தில் மூழ்கி எழுவதுபோல் மெல்ல எழுந்த பரிதி தன் சிவந்த முகத்தின் நிறமுகூர்த்தத்தை மாற்றி மஞ்சள் பூசிய பெண்ணின் முகத்தைபோல் மாறி ஜொலித்ததை ஜன்னல் அருகிலிருந்து ரசித்துக்கொண்டிருந்த என் செவிகளில் அம்மாவின் மெல்லிய விசும்பல் ஒலி கேட்டது. என் புலனை திசை திருப்பினேன் குப்புற படுத்திருந்த அம்மாவின் முதுகு குலுங்குவதை பார்த்ததும் புரிந்துவிட்டது. இது ஒன்றும் எனக்கு புதிதல்ல வழமையான காட்சிதான். நான் இந்த மண்ணில் மலர்ந்த நாளிலிருந்து இந்த நிமிடம்வரை அம்மா சிரித்ததை பார்த்ததே இல்லை. ஆனால் இன்று யார் அம்மாவை அழவைத்திருப்பார்கள்? அப்பாவும் வீட்டில் இல்லையே அம்மாவின் அருகில் சென்று அணைத்து ஆறதல் கூறவேண்டும்போல் என் உள்ளம் துடித்தது. அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பார்களே அதுபோல்தான் என் நிலைமையும். என் அம்மாவின் உதவியின்றி ஓர் அடிகூட நகரமுடியாத உண்மை நிலை என் இமைகளை நனைத்தன.

அம்மாவின் இந்த நிலைமைக்கு எந்த புது காரணமும் இருக்காது. எல்லாம் என்னால்தான். யாராவது தொலைபேசியில் அம்மாவின் மனதை புண்படுத்தியிருப்பார்கள். அவர்கள்தான் வேற்று மனிதர்கள். அப்பா கூட அவர்களைப்போல் மாறியதுதான் என்னால் தாங்கிகொள்ள முடியவில்லை. முன்பென்றால் அப்பா எப்போதும் ஆதவன் ஆதவன் என அன்பை சொரிந்தபடியே இருப்பார். ஆனால் இப்போ அதற்கு நேர்மாறாக அம்மாவையும் என்னையும் பார்த்தாலே எரிந்தெரிந்து விழுகின்றார். 'ஏன்.. ஏன்?' என எத்தனையோ நாட்கள் எனக்குள்ளே கேள்விகளை எழுப்பி பல நிகழ்வுகளை கூட்டியும் கழித்தும் பார்த்தன் பலன் சமன் நான்தான் என்ற முடிவை புரிந்து எத்தனை இரவுகளை விழித்தபடி கழித்திருக்கின்றேன்.

அப்பா நான் கடவுளிடம் இப்படி என்னை படைத்துவிடு என வரம் பெற்றா பிறந்தேன்? இல்லை உங்களுக்கு மகனாக பிறக்கவேண்டும் என்று உங்களிடம் கேட்டேனா? ஏன்இப்படி மாறினீங்கள்? அம்மா என்ன பாவம் செய்தா? இப்படி எத்தனையோ கேள்விகள் என்னைபோலவே வளைந்த முதுகுடன் என்னுள் எழுந்தபடியே இருக்கும். ஆனாலும் என்ன கடலுக்குள் அலையும் அலைகளின் ஆசைகளும் ஆவேசங்களும் யாருக்கும் தெரியாமல் கடலுக்குள்ளேயே அடங்கிவிடுவதுபோல் எனக்குள் எழுவன எல்லாம் என்னுள்ளேயே அடங்கிவிடுகின்றன. மனிதன் என்ற பெயரில் என் அம்மாவின் உதவியுடன் நடமாடும் வெறும் ஜடம் தானே நான்.

இறைவன் ஒன்றை எடுத்து ஒன்றை கொடுப்பான் என்றும், ஒரு கதவு மூடினால் மறு கதவு திறக்குமென்றும் அம்மா அடிக்கடி கூறுவதை கேட்டு இருக்கிறேன். ஆனால் என் விடயத்திலோ மாறாக சாதாரண மனிதனுக்கு இருக்க வேண்டிய அத்தனையும் பறித்தெடுத்துவிட்டு ஓர் அசாதாரண மனிதன்போல் சிந்திக்கும் அறிவையும் ஆற்றலையும் அதிகமாக கொடுத்து விட்டான். இருந்தும் என்ன அவற்றை மற்றவர்களுக்கு உணர்த்த முடியாத நிலை. இதனால் அடிக்கடி கடவுளை சபிக்கவேண்டும் போல்தோன்றும் ஆனாலும் எதை என்னிடமிருந்து பறிக்க முடியுமோ அத்தனையும் பறித்தவன் யாருக்கும் கிடைக்க முடியாத அம்மாவை எனக்கு அளித்ததனால் இறைவனுக்கு அடிக்கடி நன்றிதான் கூறுகின்றேன். இந்தவிடயத்தில் என்னைபோல் அதிஷ்டசாலி இந்த உலகில் யாருமே இருக்கமுடியாது. எனக்கு இறைவன் கொடுத்த அம்மாவை ஒரு நாளாவது அம்மா என்று வாய் நிறைய அழைக்கவேண்டும். அதைகேட்டு என் அம்மா சிரிக்க வேண்டும் அப்படியாவது என் அம்மா சிரிக்கவேண்டும் இது என் ஆசை என்பதைவிட எனக்குள் அடிக்கடி எழும் வெறி என்று கூடசொல்லலாம். இதற்கு பல காரணங்கள் உண்டு.

முன்பெல்லாம் நாங்கள் மூவரும் இங்க நடக்கிற சகல விசேசங்களுக்கும் போய்வருவோம். அங்கு சென்றால் என் வயதை ஒத்த பிள்ளைகள் ஓடுவதை, நடப்பதை, சிரிப்பதை, விளையாடுவதை விழிகளை கூட இமைக்க மறந்து பார்த்துக் கொண்டே இருப்பேன். அதிலும் அவர்களின் கால்களின் விரைவான அசைவை பார்த்தால் எனக்கு ஓர் ஏக்கம் என்னுள் எழுந்து கொண்டே இருக்கும். அவர்கள் கால்களை பார்க்கும் விழிகளால் அடிக்கடி என் கால்களையும் ஒப்பீடு செய்து பார்த்துக்கொண்டே இருப்பேன். என் செய்கையை அம்மா பார்த்துவிடக்கூடாதே என அம்மாவின் முகத்தை நோக்கிய எனக்கு என் அன்பு அம்மாவும் தன் விழிகளில் நீர் துளிர்க்க அக் காட்சியை தன்னை மறந்து பார்த்து கொண்டிருந்தா. அப்பொழுது மனிதர்கள் என்ற பெயரில் இதயத்தில் அழுக்கையும் நாவில் விஷத்தையும் கொண்ட சிலர் என் அம்மாவை எப்படி புண்படுத்தினார்கள்.

நளினி உம்மட ஆதவனுடன் பிறந்த பிள்ளைகள்தானே இவர்கள். பாரும் எப்படி ஓடி ஓடி விளையாடினம். அங்க பாரும் என்ர மகளை இவனைவிட சின்னவள் எப்படி துடியாட்டமா இருக்கிறாள். இவன் ஆதவன் 'அம்மா' என்றுகூட கூப்பிட மாட்டானே? எப்படித்தான் சகித்துக் கொண்டு இருக்கிறீரோ தெரியாது என்னால முடியாதப்பா. நீர் சரியான இரும்புமனுசி. அது சரி நளினி, இந்த சாறி புதிசே? நல்ல டிசைனா. இருக்கு எங்க வாங்கினீர்? தொடர்பற்ற பேச்சு அவர்களின் அறியாமையும் இங்கிதமின்மையும் அப்பட்டமாக வெளிப்படுத்தியது. ஆனால் என் அம்மாவோ வாயிருந்தும் ஊமையாக விழிகளிருப்பது அழுவதற்காக, என்பதுபோல் இருந்த காட்சி என் இதயத்தில் நெருப்பை அள்ளிக்கொட்டியதுபோல் இருந்தது.

வாழ்க்கை எவ்வளவு வலியதோ அதுபோல் கொடியதும் அதுதான் என அந்நிகழ்வு எனக்கு உணர்த்தியது. இப்படி எத்தனை நிகழ்வுகள் அம்மாவையும் என்னையும் எங்கள் வாழ்வையும் வதைத்தெடுத்திருக்கின்றது. சில நேரங்களில் அடுத்தவர்கள் புரியும் உதவிகளைவிட அவர்கள் கொடுக்கும் துன்பம் உன்னதமானது. ஏன் எனில் அந்த வேதனையில் தாக்கம் எப்படியாவது ஜெயிக்க வேண்டும் என்ற உத்வேகம் தோன்றிக் கொண்டே இருக்கும். அன்று எனக்கும் அப்படித்தான், அம்மா என்ற அந்த உன்னத உறவை நான் உச்சரிக்க வேண்டும் அதை கேட்டு என் அம்மா மகிழ்வதை நான் பார்க்க வேண்டும் என சபதம் எடுத்ததன் விளைவு இரவுபகலாக உதட்டையும் என்னையும் கஷ்டப்படுத்தி முயற்சி செய்தன் பலன் அம்மா எதிர்பார்க்காத வேளையில் அம்மா என அழைத்து நாங்கள் இருவரும் அடைந்த மகிழ்வுக்கு எல்லையே இல்லை. வேலைக்கு சென்றிருந்த அப்பாவுடன் தொலைபேசி தொடர்பை ஏற்படுத்தி என்னை அம்மா என்று கூப்பிடவைத்து எப்படி மகிழ்ந்தா? அன்று என் ஆசை அம்மா சிரித்ததுபோல் நான் என்றும் பார்த்ததே இல்லை. இப்படி பல நிகழ்வுகள் எங்கள் இருவரையும் புண்படுத்தியதன் விளைவு. அம்மா இங்கு

நடக்கும் நிகழ்சிகளுக்கு செல்லும் சூழ்நிலைகளை தவிர்த்தா. இதனாலும் அப்பாவுக்கு அம்மாவிற்கும் வாக்கு வாதங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

நளினி உமக்கென்ன தெரியும் என்னடைய நண்பர்கள் என்னை பகிடி பண்ணினம் நீ என்ன இப்பவும் தனியாளே? எங்க பார்த்தாலும் தனியா வருகிறாய் உன்னுடைய வீட்டிலும் ஏதாவது விஷேசம் நடந்தால் நாங்களும் உன்னைப்போல தனியாதான் வருவம் என்று சொல்லி சிரிக்கினம். அதற்கும் அம்மா மௌனம் சாதிப்பா. இப்பொழுதெல்லாம் அம்மா பேசுவதையும் குறைத்துக் கொண்டு விட்டா.

என்ன நளினி நான் கேட்கிறன் நீர் பேசாமல் இருக்கின்றீர்..?

நான் சொல்லிறதுக்கு என்ன இருக்குது ரமேஸ். இங்க யாரும் வரவும்வேண்டாம். வந்து என்ர பிள்ளையையும் என்னையும் புண்படுத்தவும் வேண்டாம். அதுதான் நான் எத்தனை நாளாய் சொல்லிறன் நீர்தான் கேட்கிறீரே இல்லை.

ரமேஸ் எனக்கு ஆதவன் மட்டும்போதும் நான் சாகும்வரை அவனை பார்த்துக்கொண்டே இருப்பேன். பிறக்கிற குழந்தையும் இவனைப்போலவே பிறந்திடுமோ என்று பயப்படுகிறீர் நளினி. இப்படி எத்தனை பேருக்கு மற்றப்பிள்ளை குறையே இல்லாமல் பிறந்திருக்கு பயப்படவே தேவையில்லை என்றுதானே டொக்டர் சொன்னவர். நளினி இந்த வீட்டிலேயேயும் குழந்தையின் சிரிப்பொலி கேட்கவேண்டும் என கூறியவரின் கண்களில் ஆசை அரும்பி நின்றது.

அவரின் ஆசையின் நிஜத்தை புரிந்து கொண்டவள் வேண்டாம் ரமேஸ். அதில நிரம்ப கஷ்டத்தை நாங்கள் எதிர்நோக்க வேண்டிவரும்.

எனக்கு தெரியும் உமக்கு சிரமம் என்று. அதுக்கு நான் ஒரு யோசனை சொல்லிறன் ஆதவனை அதற்கென்று இருக்கிற விடுதியில சேர்த்து விடுவம். அங்க அவனை மாதிரி எத்தனை பிள்ளைகள் இருக்கினம் அவனுக்கும் பொழுதுபோகும் சோஷலும் கொஞ்ச காசு கொடுக்குமாம். ஒவ்வொரு கிழமையும் நாங்கள் அவனை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வருவம் என்ன சரிதானே நளினி.

அப்பாவின் இரக்கமற்ற பேச்சு என் இதயத்தை பிழிந்தது. இதற்கு அம்மாவின் பதில் என்னாவக இருக்குமென நான் காதை கூர்மையாக்கி கொண்டேன்.

'தயவு செய்து என்னையும் என்ர பிள்ளையையும் பிரிக்காதீங்க ரமேஸ். உங்களுக்கு எங்களை பிடிக்காட்டி என்னை விவகரத்து செய்துவிட்டு நீங்கள் என்ன வேண்டுமானலும் செய்யுங்கோ.' என அம்மா அழுவதை பார்க்க எனக்கும் அழுகைவந்தது. வலியதன் ஆதிக்கம் எளியான் மீது எப்போதும் தன் வலிமையை நிருபித்துக்கொண்டே இருக்கும் அதுபோல்தான் அப்பாவும் தன் கோபத்தை கதவில் காட்டிவிட்டு வெளியேறினார். இந்த வீட்டில் இது தினமும் நடக்கும் காட்சியாகவே போய்விட்டது.



மழைபெய்து ஓய்ந்தபின்னும் இலைகளிலிருந்து நீா துளிகள் விழுவதுபோல் இடியாய் இடித்து மின்னல்போல் வெளிச்சம்போட்டு காட்டிய அப்பாவின் பேச்சின் தாக்கம் அம்மாவின் கண்களிருந்து கண்ணீர் வடிந்துகொண்டே இருந்தது. கைகள் இருந்தும் அக் கண்ணீரை துடைக்க முடியாது ஊமையாக நானும் அழுதுகொண்டே இருந்தேன். சூரியனின் அக்னி வெப்பத்தை இடியை மழையை எல்லா இன்னல்களையும் தன் தலையில் தாங்கி மண்ணுக்கும் மனிதருக்கும் நிழல்தரும் மரம்போல என் அம்மாவும் என்னால் ஏற்படும் அத்தனை துன்பங்களையும் தனக்குள் மறைத்துவைத்து என்னை மகிழ்வித்துக் கொண்டிருப்பதை நினைக்கும் ஒவ்வொரு நிமிடமும் நானும் அம்மாவும் அடிக்கடி விரும்பிபார்க்கும் அஞ்சலி படம்தான் நினைவில் வரும். அந்த படத்திலும் என்னைப்போலவே அஞ்சலிபாப்பா. ஆனால் அஞ்சலி பாப்பாவின் அப்பாவுக்கு அஞ்சலி என்றால் உயிர். அவர் என்னுடைய அப்பா மாதரி இல்லை நல்லவர். ஆனால் ஆரம்பத்தில அவளின் அக்காவுக்கும் அண்ணாவுக்கும் அஞ்சலியை பிடிக்காது. அவையின்ர அப்பாவிடம் கேட்பினம் அப்பா இந்த அஞ்சலி ஏன் எங்கட வீட்டில பிறக்கவேணும்? சுஜி வீட்டில பிறந்திருக்கலாம் அல்லது சுதன் வீட்டிலயாவது பிறந்திருக்கலாம்தானே.

அதற்கு அந்த நல்ல அப்பா சொல்வார். 'ஒருநாள் வானத்தில் உள்ள தேவதைகள் எல்லாம் ஒன்று கூடி அஞ்சலி பாப்பாவை எங்கு பிறக்கவைக்கலாம் என யோசித்தார்களாம். அப்போ அவர்களுக்கு எங்கள் வீடுதான் ஞானத்தில் தெரிந்ததாம். அதுதான் அஞ்சலி எங்கடவீட்டிலேயே பிறக்கட்டும் என ஆசீர்வதித்தார்களாம்.'

'ஏன் எங்கட வீடு மட்டும் தெரிய வேண்டும்?'

'ஏன் என்றால் அஞ்சலி பாப்பாவை பார்க்கிறதிற்கு ஒரு நல்ல அம்மா வேணும். அந்த நல்ல அம்மா இந்த வீட்டிலதானே இருக்கிறா.'

(மிகுதி அடுத்த இதழில்)

பாகம் - 2

19



# வலிகாமம் இருந்து வன்னி வரை

**- கவிஞர் நாவண்ணன்**

நியூஸ் பிறிண்ட் காகிதத்தில் வெளிவரவேண்டிய பத்திரிகைகள் Bank paper, Cover paper, Brown paper, Card board, Bristol Board, Art board என்ற பல ரகப் பேப்பர்களிலும் வெளிவந்தன. இதை விடப் பெருமுயற்சி யாதெனில் பழைய காகிதங்களை ஊறவைத்து அரைத்து அவற்றை உருளைகளால் நசுக்கி பப்படம் செய்யும் பாணியில் காகிதங்களைச் செய்து அதில்கூட அச்சிடல் வேலைகள் செய்யப்பட்டன.

தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வருபவர்கள் யார் எவரெனினும் சோதனைச் சாவடிகளில் அவற்றை வைத்துப் பறிமுதல் செய்வதுடன் ஆண், பெண் என்ற பால் வேற்றுமையோ, கல்விமான், பாமரன், ஏழை, செல்வன் என்ற பேதமோ இல்லாது பகிரங்கமாகத் தாக்கப்பட்டனர். அப்படியொரு சந்தர்ப்பத்தில்தான் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஒருமுறை அனுமதி பெற்று மறைவழிபாட்டுக்காகத் தனது வாகனத்தில் பாஸ்கா மெழுகுதிரிகளைக் கொண்டு வந்தபொழுது சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்டார். ஆயரையே அடித்தவர்கள், அதிகம் பணம் கொண்டு வந்தமைக்காக இந்தக் குருக்கள் இரண்டு பேரையும் என்ன செய்வார்களோ என்று கலக்கமாக இருந்தது. இந்தச் சம்பவத்தின் காரணத்தால் போக விரும்பிய அனைவரையும் அனுப்பிவிட்டு தமது இல்லத்தில் இருந்த ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் விமானம் மூலம் கொழும்பு சென்று அவர்களை விடுவித்து வந்தார். அவர்கள் தாம் இருவரும் உடல் ரீதியான உபாதைகள் எதற்கும் உள்ளாக்கப்படவில்லையென்றார்கள்.

எனது மகன் கிளிநொச்சிக்கு வந்து நிற்பதாகவும், எங்கே தங்கி நிற்கின்றான் என்று தெரியாது எனவும் சிலர் சொன்னார்கள். இடப் பெயர்வுத் துன்பத்துடன் அவன் எங்களோடு ஒட்டாது திரியும்போக்கு எனக்கும் என்னவளுக்கும் பெரியதுயராக இருந்தது. அவனைத் தேடிச் சென்றால் அவன் என்கண்முன்னே வராது ஒளிந்து கொள்வான். அல்லது தற்செயலாகக் கண்டால் கூட நான் அழைத்தும் வராது போனால் அது அவனுக்கும் எமக்கும் இடையே பாரிய இடைவெளியைத் தோற்றுவித்துவிடும் என்பதனால் நடப்பது எதுவோ நடக்கட்டும், வரும் நேரம் வரட்டும் என்று இருந்துவிட்டேன்.



'யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த புனித சவேரியார்' குருமடம் ஆரோபணத்தில் இயங்கத் தொடங்கிவிட்டது. ஆகவே தை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அங்கு அடைக்கலம் கோரி இருப்பவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று விடவேண்டும்' என்று பத்திநாதன் அடிகள் கேட்டுக் கொண்டார். கொடுக்கப்பட்ட நிவாரணங்கள் உதவிகளோடு தனித்தனியே அடுப்பு மூட்டி சமையல்களும் ஆரம்பித்துவிட்டோம். முடிந்தவர்கள் ஊர்மனைக்குள் சென்று கிடைத்த வேலைகளைச் செய்து வருவாயைத் தேடிக்கொள்ளவும் செய்தனர்.

என்னுடைய அதிர்ஷ்டம் ஆரோபணம் அச்சகத்திலேயே வேலை கிடைத்தது. ஜேம்ஸ் பத்திநாதன் அடிகளின் நம்பிக்கைக்குரியவனாக நான் அச்சகத்தின் நிர்வாகத்தை ஏற்று நடாத்திக்கொண்டிருந்தேன். ஒருநாள் அச்சகத்தில் என் பணியை ஆற்றிக்கொண்டிருக்கையில் என்னவளிடமிருந்து அழைப்பு வந்தது. எனது மகன் வந்திருக்கின்றான் என்ற தகவலையும் வந்தவர் கூறினார்.

உடனே புறப்பட்டு நாம் இருந்த எமிலானுஸ்பிள்ளை நினைவு மண்டபத்திற்குச் சென்றேன். மகன் வந்திருந்தான். அவனோடு கூடவே ஒரு போராளியும் வந்திருந்தான். நாங்கள் தங்கியிருந்த இடத்தில் ஓர் இரும்புக் கட்டில் இருந்தது. அக்கட்டிலில் என்னவள் இருந்தாள். அவளுக்குப் பின்புறமாக இருந்து தன் தாயின் கழுத்தை இரண்டு கைகளாலும் சுற்றிக் கட்டி அணைத்தபடி, அவள் தோள் மீது தன் நாடியை அழுத்தியபடி தாயின் கன்னத்தோடு கன்னம் வைத்துக்கொண்டு மகன் இருந்தான். அதே கட்டிலில் எதிர்ப்புறமாக நானமர்ந்தேன். கட்டிலின் மறு விளிம்பில் அந்தப் போராளியிருந்தான். அவன் என்னைப் பார்த்துச் சிரித்தான்.

என்னவள் தான் கூறினாள். 'தம்பி இயக்கத்துக்குப் போகப் போகின்றானாம்.'

நான் அவனது முகத்தைப் பார்த்தேன். அவனுக்கு என் முகத்தைப் பார்க்க தயக்கம்போலும் கண்களைத் தாழ்த்திக் கொண்டான். கூடவந்த போராளி பேசினான். 'ஓமையா, உங்கடை மகன் இப்ப எங்களோடைதான் நிற்கிறார். அவர் இனி றெயினிங்குக்குப் போகப்போறார். அதற்கு முதல் அவர் உங்களிட்டச் சொல்லிற்றுப் போக வேணுமாம். நீங்கள் பேசுவீங்களோ என்று பயந்துதான் என்னையும் கூட்டிக்கொண்டு வந்தவர்'

அவன் தான் உண்மையாகவே விடுதலைப் போராளிகளுடன் நிற்பதை உறுதிப்படுத்தவும். இதுவரை நாளும் தான் அவர்களோடுதான் நின்றான் என்பதை நம்ப வைக்கவுமே அந்தப் போராளியை சாட்சியாகச் சீருடையுடன் அழைத்து வந்துள்ளான் என்பதுவும் புரிந்தது.

*'சைக்கிளில் முன் சட்டத்தில் மகன் இருக்க கவியழகன் என்ற அந்தப் போராளி சைக்கிளை ஓட்டிக்கொண்டு வந்தான். நாம் அவர்களை நெருங்கி எதிருக்கெதிர் சந்திக்கு முன்னர் டிப்போ சந்தியில் இருந்து பரவிப்பாஞ்சான் பக்கம் உள்ள வீதியால் அவர்கள் திரும்பி விட்டார்கள். அவர்கள் வேகத்துக்கு என்னால் சைக்கில் ஓடவும் முடியவில்லை. சென்ற தொலைவுக்கு கூப்பிடவும் முடியவில்லை. இது பெரிய ஏமாற்றமும் தாக்கமுமாக இருந்தது. அந்த இடத்தில் வைத்தே என்பிள்ளைக்கு நான் இறுதி விடை கொடுத்துவிட்டதாகவே நினைக்கின்றேன்.'*

'உம்முடைய பெயர் என்ன தம்பி?'

'கவியழகன்'

'சரி என்மகன் இயக்கத்தில் சேரவிரும்பினால் அதை நான் தடுக்கப்போறதில்லை நான் வளர்த்த நாய், பூனை, கோழி இதுவெல்லாம் இப்ப எங்க நிற்கின்றன என்று கேட்டால் பதில் சொல்லக்கூடிய நிலையில இருக்கிற என்னால, உன்ரைபிள்ளை எங்க நிற்கிறான் என்று கேட்டால் பதில் சொல்ல முடியாமல் இருந்தேன். இப்போ என்ர பிள்ளை உங்களோடைதான் நிற்கிறான் என்று தெரிஞ்சு போய்ற்று நான் தடைசெய்யேல்ல தாராளமாய்க் கூட்டிக்கொண்டு போங்கோ' என்றேன். ஏதோ பூகம்பம் நிகழும் என நினைத்து வந்தவர்களுக்கு எனது பதில் வியப்பைக் கொடுத்திருக்கவேண்டும். மகனும், அந்தப் போராளியினதும் முகங்களில் மகிழ்ச்சி. என்னவளின் முகத்தின் உணர்வை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சற்று நேரம் இருந்து தேனீர் குடித்துவிட்டுப் புறப்பட்டுப்போனார்கள்.

அவர்கள் போனதின் பின்னர் என் மனதில் ஏற்பட்ட ஒருவித வெறுமையை என்னவென்று கூறத்தெரியவில்லை. அச்சகத்துக்குப் போய்விட்டேன். என்றாலும் மகன் இனி எனது முழுமையான உரிமைக்கு அப்பாற்பட்டவனாகி விட்டான் என்பதில் ஏற்பட்ட வெறுமையைத் தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தது.

பகல் சாப்பிடப்போனேன். என்னவளின் முகத்தில் வழக்கமாக இருக்கும் கலகலப்பு இல்லை. உணவு பரிமாறினாள். சாப்பிட்டு முடிந்ததும் என்னிடம் கேட்டாள் `தம்பியைப் பார்க்கவேணும் போலிருக்கிறது. கிளிநொச்சிக்கு ஒரு முறை போய் வருவோமா?'

`தான் நிற்கிற இடத்தை தம்பி சொன்னவன், அந்தப் பொடியனும் கூடவே வந்தபடியால அவனோட மனம் திறந்து கதைக்க முடியாமல் போய்விட்டது. அவனோடை நிறையக் கதைக்க வேணும்போல இருக்கிறது'

எனக்குள்ளும் அந்த விருப்பம் இருந்தது. பிற்பகல் அச்சகத்துக்கு வரமுடியாது என்பதை அறிவித்துவிட்டு என்னவளுடன் சைக்கிளில் புறப்பட்டேன். அவனை எங்கு சென்று சந்திப்பது என்ற எண்ணத்துடன் போய்க்கொண்டிருந்த நாங்கள் கிளிநொச்சி டிப்போ சந்தியை அடைந்த போது `அந்தாவாறான் தம்பி' என்றாள் என்னவள்.

சைக்கிளில் முன் சட்டத்தில் மகன் இருக்க கவியழகன் என்ற அந்தப் போராளி சைக்கிளை ஓட்டிக்கொண்டு வந்தான். நாம் அவர்களை நெருங்கி எதிருக்கெதிர் சந்திக்கு முன்னர் டிப்போ சந்தியில் இருந்து பரவிப்பாஞ்சான் பக்கம் உள்ள வீதியால் அவர்கள் திரும்பி விட்டார்கள். அவர்கள் வேகத்துக்கு என்னால் சைக்கில் ஓடவும் முடியவில்லை. சென்ற தொலைவுக்கு கூப்பிடவும் முடியவில்லை. இது பெரிய ஏமாற்றமும் தாக்கமுமாக இருந்தது. அந்த இடத்தில் வைத்தே என்பிள்ளைக்கு நான் இறுதி விடை கொடுத்துவிட்டதாகவே நினைக்கின்றேன்.


எனது அண்ணனின் மகன் கூட இருந்து படித்துக் கொண்டிருந்தான். அவனைச் செட்டிக்குளத்தில் கொண்டு சென்று விடுவதற்காகவும், என்னவள் மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனைக்காகவும் சென்று விட்டனர். நானும் இரண்டாவது மகள் ஜீனும் மட்டும் முகாமில் இருந்தபடியால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இருவதும் ஆளுக்கொரு சைக்கிலில் சுற்றுலா புறப்பட்டோம். என்னைப் பொறுத்தவரை எனது நோக்கம் `வலிகாமம் இருந்து வன்னி வரை' யிலான எனது அனுபவக்கட்டுரைக்கு இரை தேடுவதே.

கிளிநொச்சியில் இருந்து புறப்பட்ட நாங்கள் புதுக்குடியிருப்பை வந்தடைந்தோம். அங்கே இருந்து சூழாமுறிப்புவரை சென்றோம். புதுக்குடியிருப்பில் இருந்து முள்ளியவளைக்குச் செல்லும்வரை அந்த வீதி திருத்தப்படாத வீதியாக இருந்தது. ஆனால் அது பிரதான வீதியுமல்ல. பிரதான வீதி இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. முல்லைத்தீவு முற்றுமுழுதாக இராணுவக் கட்டுப்பாட்டினுள். அதனால் இப்பொழுது நாம் பயணம் செய்த கேப்பாப்புலவுப் பாதை முன்னர் வெறும் வண்டிற்பாதையாக இருந்ததாகவும், பின்னர் அதுவே புதுக்குடியிருப்பு முள்ளியவளைக்கான பிரதான பாதையாக மாறிவிட்டதாகவும் கூறினார்கள். புதுக்குடியிருப்பில் இருந்து முள்ளியவளை வரை வெறும் காடுகளும், வயல்களுமே காணப்பட்டன. முன்னர் ஒருமுறை நான் வந்திருந்த போது வற்றாப்பளையில் இருந்த கலகலப்பு இல்லை. 19 ஆண்டு வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் திருவிழா அன்று முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து எறியப்பட்ட எறிகணைகளால் பக்தர்கள் கொல்லப்பட்டதும். பலர் காயப்பட்டதும் அதனால் மக்கள் வெளியேறியதும் காரணமாக இருக்கலாம். அம்முறை தான் ஊற்றங்கரைப்பிள்ளையார் கோவிலில் எறிகணை விழுந்து தேரும் எரிந்தது.

அந்த எறிகணை வீச்சுக்கொலைகளுக்குப் பின்னர் வற்றாப்பளை கண்ணகை அம்மனைச் தரிசிக்கச் செல்பவர்கள் மிகக்குறைவாகினர். ஆனால் கண்ணகை அம்மன் பக்தர்கள் புதுக்குடியிருப்பு முள்ளியவளை வீதியும், முல்லைத்தீவு மாங்குளம் வீதியும் சந்திக்கும் இடத்தில் சிறிய அளவிலாக அம்மன்கோவில் ஒன்றைக் கட்டி அதற்கு சந்தி அம்மன் என்று பெயர்வைத்து வழிபடுவதாகவும் அறிந்துகொண்டேன்.

சந்தி அம்மன் கோவிற் சந்தியில் இருந்து மாங்குளம் பக்கமாகத் திரும்பி சூழாமுறிப்பு நோக்கிச் சென்றோம். எமக்குப் புதிய பாதை. வீதியின் இருமடங்கும் அடர்ந்த காடு... வீதியில் நெடுக ஆங்காங்கு யானைச் சாணம் ஈரம் உலர்ந்தும், ஈரமாகவும் காணப்பட்டது. மனதுள் ஒருவித கிலி இருந்தாலும் துணிவை வரவழைத்துக் கொண்டு சென்றோம். சூழாமுறிப்பில் இருந்த புனித சூசையப்பர் கோவிலை அடைந்தோம். முல்லைத்தீவு இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தமையால் முல்லைத் தீவில் இருக்கவேண்டிய கோவிற்சுவாமியார் முல்லைத் தீவில் இருந்து பத்து மைல்களுக்கு அப்பால் சூழாமுறிப்பில் இருந்தார்.

(தொடரும்)




# கதை முற்றம்

## புகழ்ச்சி

ஒரு செல்வந்தனும் ஒரு வறியவனும் கூடிக் கதைத்துக்கொண்டிருந்தார்கள். `என்னிடம் நூறு அவுன்ஸ் தங்கம் இருக்கின்றது. அதில் இருபது அவுன்ஸ் தங்கத்தை நான் உனக்குத் தந்தால் நீ என்னைப் புகழ்வாயா?'

செல்வந்தன் ஏழையைக் கேட்டான். `உனது தங்கம் சரியாகப் பங்கீடு செய்யப்படாமலிருக்கும் பொழுது உன்னை நான் எப்படிப் புகழ முடியும்?'

`சரி அப்படியென்றால், என்னிடமுள்ள தங்கத்தில் அரைவாசிப் பங்கை நான் உனக்குத் தந்தால் என்னைப் புகழ்வாயா?'

`அப்பொழுது நாங்கள் இரண்டு பேரும் சரி சமமான நிலையிலுள்ளவர்களாக இருப்போம். ஆகவே நான் உன்னை ஏன் புகழவேண்டும்?'

செல்வந்தன் கேட்டான். `என்னிடமுள்ள எல்லாத் தங்கக் கட்டிகளையும் உனக்குத் தந்தால் என்னை நீ புகழ்வாயா?'

`உன்னுடைய எல்லாத் தங்கக் கட்டிகளும் என்னிடமிருந்தால் நான் செல்வந்தனாகி விடுவேன். அப்பொழுது நான் உன்னைப் புகழ வேண்டிய அவசியம் ஏற்படாதே' என்று ஏழை கூறினான்.

செல்வந்தன் திரு திரு என முழித்தான்.

# குறுங்கதை

## உறுத்தல்

சூரியனைப் பார்த்து நிலம் கத்தியது:
`நீ செய்வது சரிதானா?'
சூரியன் அதிர்ச்சியுற்றான்.
இதுவரை அவனை யாருமே இப்படிக் கேட்டதில்லை.
`என்ன சொல்கிறாய்?'
`இருளை நீ மறைக்காலம்.. அழகான விண்மீன்களை எப்படி நீ மறைக்கலாம்?'
சூரியன் திடுக்கிட்டான்.
`ஒவ்வொரு ஒளியிலும் ஒவ்வொரு அழகு இருக்கிறது உனக்குத் தெரியுமா?'
ஞாயிறு முகிலுள் ஒளிந்தான்.
நிலத்தின் குரல் அவன் காதில் ஓங்கி ஒலித்தது...
**`வெளிச்சத்தை மறைக்கலாமா**
**வெளிச்சம்'**

- காசி ஆனந்தன்.


# கண்டுபிடியுங்கள்

1. அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும் அது என்ன?
2. வந்ததுதான் வந்தீர்களே, வந்து ஒரு தரம் போனீர்களே இனி போனால் வருவீர்களா? இவன் யார்?
3. காது பெரியது கேட்காது, வாய் பெரியது பேசாது அது என்ன?
4. தாளைக் கொடுத்தால் தின்பான் தண்ணீர் கொடுத்தால் மடிவான் அவன் யார்?
5. மேலே பச்சை கீழே கருப்பு அவர் யார்?
6. தொங்குகிறவனுக்கும், ஓடுகிறவனுக்கும் ஒரே நாள் கல்யாணம்! அது என்ன?
7. வெள்ளை குதிரை பல்டி போடும் அது என்ன?
8. தாடிக்காரன், மீசைக்காரன், சமையல் அறையில் வெள்ளைக்காரன், அவன் யார்?
9. குள்ளம்மாள் குடை பிடித்திருக்காள் அவள் யார்?
10. நாகப்பாம்பு, சந்தைக்கு போகும்! அது என்ன?

மு.லோகநாதன், சீ. சுரேஷ்

**விடை அடுத்தவாரம்**

## கடந்தவார விடை



# அறிஞர் முற்றம்

## மந்திரம் கால் – மதி முக்கால்

கிரேக்க நாட்டில் வாழ்ந்த ஆக்கிமிடிஸ் என்ற விஞ்ஞானியைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் இருக்கமுடியாது. கிறிஸ்து பிறப்பதற்கு முன், அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் இந்த அறிவியல் அறிஞர் கிரேக்க நாட்டை எதிரிக் கப்பல்கள் முற்றுகை இட்டது. அந்த நாட்டுக்குப் பாய்மரக் கப்பலில் உணவுப் பொருட்கள் வருவதை பகைவர்கள் தடுத்துவிட்டார்கள். முற்றுகை நீடிக்கவே, சிராக்கஸ் நாட்டு மக்கள் பட்டினியால் அவதிப்பட்டனர். முற்றுகைகளை முறியடிக்க ஆக்கிமிடிஸை அழைத்து, மன்னன் ஆலோசனை கேட்டான். ஆக்கிமீடிஸ் உடனடியாக உதவத் திட்டம் போட்டு, செயற்பட ஒப்புக்கொண்டார்.

ஆக்கிமிடீஸின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. கடற்கரையில் கட்டப்பட்டுள்ள பெரிய மதிற் சுவரின்மீது அவர் பெரிய குவிவாடியை எடுத்துக்கொண்டு ஏறி அமர்ந்தார். காலையில் கிழக்கே உதிக்கும் சூரியனின் ஒளிக்கதிர்களை, குவிவாடி வழியாக கடற்கரைப்ப குதியிலுள்ள பகைவர்களின் பாய் மரங்கள் மீது குவியச் செய்தார்.

(இப்போதும் சூரியனின் ஒளிக்கற்களை குவிவாடி வழியாக, ஒரு காகிதத்தின்மீது குவியச் செய்தால், ஒளி குவிந்த இடம் சற்று நேரத்தில் தீப்பிடித்துக் கொள்வதைக் காணலாம்) இதே முறையைத் தான் ஆக்கிமிடிஸ் அன்று கையாண்டார். அதனால், பாய்மரங்கள் திடீரென தீப்பிடித்து எரிந்தன. எதிரிப் படைகளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ மந்திர சக்தியால் தீப்பிடித்து எரிவதாக எண்ணி, கப்பல்களை அப்புறப்படுத்தத் தொடங்கினர். அதுபோலவே, மதில் சுவர்களில் மிகவும் நீளமான நெம்பு கோல்களைப் பொருத்தி, வெளியே கடற்பக்கம் உள்ள எதிரிகளில் கப்பல்களை கொக்கியால் மாட்டி, கடலிருந்து மேலே தூக்க ஆரம்பித்தார். இதுவும் ஏதோ குட்டிச்சாத்தான் வேலைதான் என எண்ணிய எதிரிகள் - பயந்து ஓடத் தொடங்கினார்கள். ஆக்கிமிடிஸின் விஞ்ஞான அறிவு -தாய் நாடான கிரேக்க நாட்டை எதிரிகளின் முற்றுகையில் இருந்து மீட்டது.

**SCHOOL என்ற சொல்லில் வரும் எழுத்துக்களை இப்படிப் பொருள் கொண்டால் என்ன?**

S - Sincerity - நேர்மை
C - Capacity - திறமை
H - Honesty - உண்மை பேசும் குணம்
O - Obedience - கீழ்படிவு
O - Orderliness - ஒழுங்கு
L - Learning - கல்வி அறிவு

*தி. சாரங்கன்.*

# கவிதை முற்றம்



பாடி ஆடுவோம்
மயிலைப் போல ஆடுவோம்
மகிழ்ந்து நாமும் பாடுவோம்
குயிலைப் போலக் கூவுவோம்
கூடிக் கூடி ஆடுவோம்

தவளை போல நாமுமே
தத்தித் தத்திச் செல்லுவோம்
முயலைப் போல நாமுமே
குதித்துக் குதித்து ஓடுவோம்

ஆனை போல நாமுமே
அசைந்து அசைந்து
செல்லுவோம்
குதிரை போல நாமுமே
குதித்துக் குதித்து ஓடுவோம்

மானைப் போல ஓடுவோம்
மகிழ்ந்து நாமும் பாடுவோம்
பாடிப் பாடி ஆடுவோம்
பாப்பாப் பாட்டுப் பாடுவோம்

- கவிஞர் த. துரைசிங்கம்

# தகவல் முற்றம்

1. வருமான வரி விதித்த நாடு – இங்கிலாந்து
2. பெண்களுக்கு வாக்குரிமை அளித்த நாடு – நியூசிலாந்து
3. அறிவியல் மறுமலர்ச்சி ஏற்பட்ட நாடு – இத்தாலி
4. அணுகுண்டை வெடிக்கச் செய்து ஆராய்ந்த நாடு – பிரிட்டன்
5. மரம் நடும் இயக்கம் முதல் தோன்றிய நாடு – சிங்கப்பூர்
6. காக்கி நிறச் சீருடை உலக அளவில் முதலில் அணியப்பட்டது – இந்தியாவில்
7. தற்கால வங்கிமுறை முதன் முதல் ஆரம்பிக்கப்பட்டது – இத்தாலியில்
8. தேசியக்கொடியை உருவாக்கிய நாடு – டென்மார்க் 1219ல்
9. கலண்டரை உருவாக்கியவர்கள் – எகிப்து நாட்டவர்
10. கதவுகளிற்குப் பூட்டுப்போட்டு சாவியை உபயோசிக்கும் முறையை முதலில் அறிமுகப்படுத்தியவர் – எகிப்தியர்
11. ஆசியாக் கண்டத்தில் முதன் முதல் தொலைக்காட்சியை அறிமுகப்படுத்திய நாடு – தாய்லாந்து

# இதையும் விடவில்லையா..?

திருடர்களுக்கு எதனைத் திருடுவது என்றே நோக்கம் இல்லாமல் போய்விட்டது. பிரமிட்டுக்குள் இருந்த 2300 வருடம் பழமை வாய்ந்த மண்டை ஓடுகளை (மம்மி) திருடிச் சென்றிருக்கின்றனர். கைப்பற்றப்பட்ட அவற்றை ஒரு சுங்க அதிகாரி பார்வையிடுகின்றார்.



# வருகிறது மலிவு விலைக் கார் !




புதிய கார்களின் விலை பலருக்கு மூக்கில் விரலை வைக்க செய்யும். ஆனால் வரப்போகின்ற புதிய காரின் விலையோ அனைவரையும் ஆச்சிரியத்தில் மூழ்வைக்கப் போகின்றது. புதிய கார்களை வாங்கி ஓடமுடியவில்லையே என்று ஏங்குபவர்களின் ஏக்கத்தை பூர்த்தி செய்ய வருகின்றது இந்தக்கார். பிரான்சின் றெனோல்ட் (Renault) கார் நிறுவனம் தயாரிக்கும் புதிய ரக கார் ஒன்றின் விலை 5000 ஈரோக்கள் மட்டுமே. லொகான் (Logan) எனப் பெயரிடப்பட்டுள்ள இக்கார் பலரையும் கவரும் வகையில் நவீன முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இக்கார் விற்பனைக்கு வரவுள்ளது. இதன் இலக்கு வருடம் ஒன்றுக்கு சுமார் நான்கு மில்லியன் கார்களை விற்பனை செய்வது என்றும் தனது இலக்கை அது 2010ம் ஆண்டளவில் எட்டும் என்றும் இந்நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.






## அட அய்யாடியா...!

அமெரிக்காவில் மாநிலத்திற்கு மாநிலம் ஒவ்வொரு விநோதமான சட்டங்கள் இருப்பது நீங்கள் அறிந்ததே. இரட்டைக் கோபுரங்களின் தகர்ப்பு உலகையே உலுக்கிய நியூயோர்க் நகரத்தில் இப்போது புதிய சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த மாநகரில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அந்நகர மேயர் மைக்கல் புளும் பர்க் புதிய திட்டம் ஒன்றைத் தீட்டி இருக்கிறார். அதன்படி பகலில் 10 டெசிமல் அளவுக்கு அதிகமாகவும், இரவில் 7 டெசிமல் அளவுக்கு அதிகமாகவும் சத்தம் ஏற்பட்டால் அதற்கு காரணமானவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று சட்டம் கொண்டுவரப்பட இருக்கிறது. இந்தச் சட்டம் எப்போது கொண்டு வரப்பட இருக்கிறது என்பது தெரியவில்லை. நாய் சத்தமாக குலைப்பதற்கும், கட்டுமானப் பணிகள் நடக்கும் இடத்தில் இருந்து ஏற்படும் ஒலிகளுக்கும் கூட அபராதம் விதிக்கப்படுமாம்..!



# எஸ்ரா ஆன மடோனா !

உலகையே தன் கவர்ச்சியால் கட்டிப்போட்ட பிரபல பாடகி மடோனா தனது பெயரை மாற்றிக்கொண்டுள்ளார். மடோனாவின் தாயார் பெயர், மடோனா லூயிஸ் வெரோனிக்கா சிக்கோனி ஆகும். மடோனா, குழந்தையாக இருந்தபோது புற்று நோயால் இறந்துவிட்ட அவருடைய தாயாரின் நினைவாக மடோனா என்ற பெயர் சூட்டப்பட்டது. இப்போது, `எஸ்ர' என்ற புதுப்பெயருக்கு மாறி இருக்கும் மடோனா, "இதனால் எனது தாயாரின் பெயரை நான் ஏற்க மறுத்து விட்டதாக அர்த்தம் அல்ல. மாறுபட்ட ஒரு புதுப் பெயரில் அழைக்கப்படவேண்டும் என்ற தனது விருப்பமே அதற்கு காரணம்" என விளக்கம் அளித்து இருக்கிறார். இங்கிலாந்து திரைப்பட இயக்குனர் கய்ரிச்சியை மணந்து கொண்ட மடோனா, 2 குழந்தைகளுக்கு தாய் ஆவார்.

## பலதும் பத்தும்







வாகனத்தை நிறுத்த வேறு இடம் கிடைக்கவில்லையோ !

# பாசல் ரவி கடையின்

## மாபெரும் மலிவு விற்பனை

**இடம்: RESTAURANT GLAXY, EFFINGERSTR:20, 3001 BERN**

பேர்ண் மாநகரில்! 25.06.04 வெள்ளி தொடக்கம் 27.06.2004 ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாட்களும் 11:00 மணி முதல் 20:00 மணிவரை



**Sfr 150** ற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 1 கோலம் சாறி அன்பளிப்பாக வழங்கப்படும்

பஞ்சாபி, டெனீம், சேட்,Sfr- 5 ல் இருந்தும், சாறி Sfr- 7ல் இருந்தும் T-Shirt, Audio CD வகைகள் Sfr-1ல் இருந்தும் மணிக்கூடு Sfr-9ல் இருந்தும் எம்மிடம் விற்பனைக்கு உள்ளது.



ஆம் இது நிஜம்!

2004 ற்கான அனைத்து விதமான புதிய ஆடைகளையும் 70 % கழிவில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் பல புதிய டிசைன்களில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு மிக மின மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.



தாயகத்திற்கு விடுமுறையில் செல்ல இருப்பவர்களே உங்கள் உறவினர்களை மகிழ்விக்க ஓர் அரிய சந்தர்ப்பமாக இவ் மலிவு விற்பனை ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

**தாய் நிறுவனம் பாசல் ரவி கடை**

தொடர்புகளுக்கு- 076.272 90 30, 061.272 09 90, 079,356 22 78



# NIGHT TRAVEL

பேர்ண் மாநகரத்தில் ஒரு புதிய உதயம்

## நைற் ட்ரவல்



**உங்கள் விமானப் பயணத் தேவைகளை சிறந்த தரத்துடன் இலகுவாக ஆக்கிக்கொள்ள எங்களை நாடுங்கள். தரமான விலை, சிறந்த சேவை, நிறைந்த பயன் போன்றவற்றோடு இரவுநேர ஆசனப் பதிவுகளை 21.00 மணி தொடக்கம் 01.00 மணிவரை வாரத்தில் 7 நாட்களும் தொலைபேசியில் செய்து கொள்ளலாம்.**

**எங்கள் ஆரம்பத்தை முன்னிட்டு எயர் லங்கா விமானத்தில் கொழும்பு சென்றுவர 970 பிராங்குகள் மட்டுமே**

சிங்கப்பூர் 888 sfr, லண்டன் 130 sfr,

நோர்வே 449 sfr, நியூயோர்க் 398 sfr

(இந்த விலைகள் நீங்கள் பதிவுசெய்யும் கால இடைவெளியைப் பொறுத்து மாற்றமடையும்)

தொடர்புகளுக்கு: 031-302 53 37, 079 - 546 45 20 e-mail:nighttravel@hispeed.ch

## பருத்தித்துறை, புல்மோட்டை, திருகோணமலை...

# கடற் சமர்களில் இவள் படைத்த சாதனைகள் அதிகம்

### கடற்கரும்புலி மேஜர் விடுதலை

விடுதலை... தேச விடுதலைக்காய் 28.04.1992 அன்று, வீடென்ற வட்டத்துக்குள் இருந்து தேசம் என்ற அழகு தடாகத்திற்காய் உழைக்கப்புறப்பட்டாள். இந்திராணி என்ற இயற்பெயர் கொண்டவள் 'காஞ்சனா–01' பாசறையில் 'விடுதலை ஆனாள். கடற்புலிகள் முதலாவது பயிற்சிப்பாசறையது. பயிற்சிகளில் ஈடுபட்ட அவள்




பயிற்சியோடு நிற்கவில்லை. நடனக்கலை பயில வேண்டும் என்ற பெருவிருப்பு கொண்டு, நடனக்கலை பயின்று பாராட்டும் பெற்றாள்.

அதுமட்டுமல்ல, இவள் நீச்சல் பயின்றாள் தொழில் நுட்பம் பயின்றாள், கனரக ஆயுதப்பயிற்சிகள் பெற்றாள். ஒரு முழுமையான போர் வீரங்கனையாக தன்னை ஆக்கிக்கொண்டாள். கடற்படையினரின் கொடுமைகள் தொடரப் போராட்டச் சிந்தனையில் போராட்டப் பற்றில் மேலும் தன்னை இறுக்கமாக்கிக் கொண்டாள்.

கடற் தொழிலுக்கு சென்ற மீனவர்கள் திரும்பிக் கரை வராத சம்பவங்களும், எதிரி மீனவர்களை வெட்டியும், சுட்டும், அடித்தும் கடலில் குவித்த பொழுதுகள் எல்லாம் அவள் நெஞ்சு பொருமினாள்.

அந்த பகை கொடுத்த அனர்த்தங்களால் அந்தக் கொடியவர்களுக்கு முடிவு கட்டவேண்டும் என்று முடிவெடுத்தவள் கடற்கரும்புலி உருப்பெற்றாள். பயிற்சிகள் மிகவும் திறம்படச் செய்தாள். இவள் எதிலும் சாதாரணமானவள் அல்ல. சாரதி பயிற்சியில் திறமையானவள்.

இவள் பருத்தித்துறை, புல்மோட்டை, திருகோணமலை என்று கடல்களில் கம்பீரமாக படகு செலுத்தியவள், ஆடும் கடலில் மிக அழகாகப் படகு செலுத்துவதிலும் அதி திறமையானவள் விடுதலை.

1993ல் பூநகரி வெற்றிசமர், 1995இல் மண்டைதீவில் நடந்த சமர், அதே ஆண்டு பருத்தித்துறைக் கடலில் நடந்த சமர் 1995ல் காங்கேசன்துறைக் கடலில் நடந்த சமரில் எல்லாம் எங்கள் விடுதலை, தேசவிடியலுக்காய் கடற்காற்றோடும், உப்பு சுமந்துவரும் வெயிலோடும் போரிட்டாள் எதிரியிடம் இருந்து, தமிழீழத்தை மீட்க இயற்கையுடனும் போராடினாள்.

தாய்மண் விடுதலைக்காய் தன்னை அர்ப்பணித்தவள், பகை வெல்லும் நேரம் எப்போது என்று வெடியோடு காத்திருந்தாள். அவள் வரலாறு படிக்கும் எங்களுக்கு அது நெஞ்சை வெடிக்கத்தான் வைக்கும்.

ஓங்கியடித்த ஓயாத அலைகள்–01ல், ஆம் 1996ல் முல்லை மண்மீட்புப் போரில், விடுதலை கடல் மீது வலம் வந்தாள். கனரகம் கொண்டு எதிரிக்கு பதில் சொன்னாள். தொடர்ந்த ஆண்டுகள் ஒவ்வொன்றும் அவள் சமர் களத்தில்தான்... 1997ல் புல்மோட்டைக்கடற் சமரில் பங்குகொண்டாள்.

கங்கை கொண்டவர் கடாரம்
வென்றவர் வீரம் அல்ல இது
அதைவிஞ்சிய வீரம். புலிவீரம்
கடற்புலிகள் வீரம்
கரிகாலன் தலைவன் கண்ணசைத்தால்
விண்ணையும் வீழ்த்தும் வீரம்.

இந்த வீரக் கடற்கரும்புலி விடுதலையும் கடற்சமர்களால் உடல் வலுப்பெற்றவள். 1999 முல்லைக் கடற்சமரில் பங்கு கொண்டவள். எதிரியின் கடற்கலங்களான பபதா, வலம்புரி கப்பற் தாக்குதல்களில் பங்கு கொண்டவள். நேர்த்தியாக படகையோட்டி விடுதலைக்கு வீச்சுக் கொடுத்தவள். விடுதலை ஓயாத அலைகள்–03 சமர், தரையிறக்கச்சமர் என்று நின்றாடி வென்றவள். முள்ளிவாய்க்கால் கடற்பரப்பில் நடந்த கடற்சமரில் கையில் விழுப்புண்? அடைந்தாள். ஆனாலும் அவள் பணி தொடர்ந்தது...

விடுதலை, நீண்டகால கடல் அனுபவமுள்ள சிறந்த கடலோடி அமைப்பில் இணைந்த ஆரம்ப காலத்தில் உள்ளிணைப்பு இயந்திரப் பொறியியலாளராக செயற்பட்டு வந்தாள். பொறுமை நிறைந்தவள். எங்கள் விடுதலை போராளிகளுடன் அன்பாக பழகுவாள். அறிவோடு சேர்ந்த அன்பும் நிறைந்தவள். கவிதை எழுதும் ஆற்றல் உள்ள கடற்கரும்புலியவள்.

புலிகளின்குரல் வானொலியில் அவளின் கவிதைப்படைப்புகள் பல வெளிவந்தன.

விடுதலை, நல்ல 'பம்பல்காரி' வழமை போல பம்பல் அடித்துவிட்டு, ' நான் இண்டைக்கு போனால் வருவனோ தெரியாது. வரமாட்டன் போலதான் இருக்கு' என்றாள். அப்போது பொறுப்பாளர் கூப்பிட்டு, படகு ஒழுங்கை பார்க்கும் படி கூற, பறந்தோடிச் சென்றாள் வேகமாக.

அச்சமயம் அவளிடம் ஒரு போராளி ஓடிச் சென்று 'செல்லமாக பூனைக்குட்டி கவனமாய் சென்று வரவும் என்றபோது அவள், நான் அவதானமாக செயற்படுவன், நான் சிலவேளை திரும்பி வராவிட்டால், நீங்கள் கடலில் நிக்கும் டோறாக்கு தரமான அடிகொடுக்க வேண்டும் அக்கா, என்று கூறிவிட்டு பணிக்கு சென்றாள்.


சென்றவள், கரைக்கு வருவாள் என்றிருக்க, விடுதலை சாவை வென்று விட்டாள், முல்லைக் கடற்பரப்பில் கடற்படையுடன் எதிர்பாராது ஏற்பட்ட மோதலில் விடுதலை கடற்கரும்புலி மேஜர் விடுதலை ஆனாள்.

எதையும் அறியவேண்டும், தேசத்திற்காய் என்றெழுந்தவர்கள் வரிசையில் எங்கள் விடுதலையும் முத்தானாள். மாவீர முழுமதியானாள். வானில் மதியாகி கடலில் முகம் காட்டும் விடுதலையே எங்கள் தேசக்கடலின் நடுவில் எங்கள் தேசியக் கொடி ஏற்ற உழைக்கின்றோம் உன் சோதர உறவுகள்...

---

# நினைவு கூருகின்றோம்

## 5ம் ஆண்டு





# மேஜர் இன்பன் மாஸ்டர்

# (கலையழகன்)

(வலிகாமம் மேற்குப் பொறுப்பாளர் – நவாலி வடக்கு மானிப்பாய்)

## வீரச்சாவு: 20.06.1999

ஆண்டு 5 சென்றதையா
உன் அன்பு முகம் காணாமல்
காலனவன் நெஞ்சினிலே
கருணை இன்றி போனதனால்
கலங்கி துடிக்கின்றோம்
கண்ணீர் பெருக்கின்றோம்
தாயகத்தின் மீட்ப்பிற்காய்
தன்னுயிரை ஈந்தவனே !
பொன்நாட்டின் விடிவிற்காய்
விண்ணகம் சென்றவனே !
வீரர்களை பயிற்றுவித்து
வெற்றிதனைக் கண்டவனே !
இன்பனே..! எம்மைவிட்டு
எங்கே நீ சென்றுவிட்டாய் ?
மாவீரனே மீண்டும் இங்கு
எப்போது நீ வருவாய் ?
உன்பாதச் சுவடுகளில்
நாங்கள் நடக்கின்றோம்
பொன்போன்ற உன் நினைவை
போற்றி வருகின்றோம்...

கொக்குவில் பகுதியில் ஏற்பட்ட நேரடி மோதலில் இவருடன் வீரச்சாவடைந்த கப்டன் மணிவண்ணன் (சர்வானந்தன் ராஜ்குமார்)க்கும் எமது நினைவு வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
அப்பா, அம்மா, அண்ணா, அத்தான், அக்கா, தம்பி,
உறவினர்கள், போராளிகள், நண்பர்கள்
லவன் பிரான்ஸ் - 0033 (6) 64 82 70 38

உங்கள் இல்லங்களின் பெரு விழாக்களில் தமிழினியின் அறுசுவை உணவுகள்...

தமிழினி உணவகம்

**Restaurant Thamilini**

**PARTY SERVICE - TAKE AWAY**

திருமண விழாக்கள், நீராட்டு விழா, பிறந்த நாள் என உங்கள் அனைத்து வைபவங்களுக்கான சைவ- அசைவ உணவுகள் அறுசுவையுடன் சுவிஸின் அனைத்துப் பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.

பிரியாணி வகைகள்
சோறுடன் 5 வகை மரக்கறிகள்
கொத்து ரொட்டி, இடியப்பம்,
பிட்டு, தோசை, இட்லி,
றோல்ஸ், வடை, கட்லற்,
லட்டு, மஸ்கற்,
பகோடா, எள்ளுப்பாகு
மசாலாத்
தோசை



என அனைத்தும்
உங்கள்
தமிழினியில்...

Martastrasse 145 (Ecke Amtlerstrasse), 8003 Zürich, Tel. 01/450 84 00

சைவ உணவு
சோறுடன் 5 மரக்கறி, பாயசம், பப்படம், மிளகாய், தயிர்.

| | | |
|---|---|---|
| 50 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 8.- |
| 100 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 7.50 |
| 200 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 6.50 |
| 200 | சாப்பாட்டுக்கு மேற்பட்டது.. ஒரு சாப்பாடு | CHF 6.- |

அசைவ எணவு
சோறுடன் இறைச்சிக்கறி, இரண்டு மரக்கறி

| | | |
|---|---|---|
| 50 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 8.- |
| 100 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 7.- |
| 200 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 6.50 |
| 200 | சாப்பாட்டுக்கு மேற்பட்டது.. ஒரு சாப்பாடு | CHF 6.- |

ஆட்டுப்பிரியாணி, மாட்டுப்பிரியாணி, கோழிப்பிரியாணி, மரக்கறிப்பிரியாணி
பிரியாணிச் சோற்றுடன் இறைச்சிக்கறி, கோழிப் பொரியல், இரண்டு மரக்கறி, முட்டடை

| | | |
|---|---|---|
| 50 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 10.- |
| 100 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 9.- |
| 200 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 8.- |
| 200 | சாப்பாட்டுக்கு மேற்பட்டது.. ஒரு சாப்பாடு | CHF 7.50 |

கொத்துரொட்டி, பிட்டுக்கொத்து, இடியப்பக்கொத்து, இடியப்பம் பிட்டு, இட்லி, தோசை

| | | |
|---|---|---|
| 50 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 9.50 |
| 100 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 8.50 |
| 200 | சாப்பாட்டுக்கு உட்பட்டது. ஒரு சாப்பாடு | CHF 8.- |
| 200 | சாப்பாட்டுக்கு மேற்பட்டது.. ஒரு சாப்பாடு | CHF 7.50 |

குறிப்பு:
500 சாப்பாட்டிற்கு மேல் ஓடர் தருபவர்க்கு விநியோகம் இலவசமாகச் செய்யப்படும். விசேட விலைக் கழிவு வழங்கப்படும்

அனைத்துச் சாப்பாடுகளும் எடுத்துச் செல்வதற்கு (Take-Away) CHF 12.-மட்டுமே



# NATHU CASH & CARRY GMBH

## மாபெரும் மலிவு விற்பனை

### காலவரையின்றி இதுவே எமது நிரந்தர விலையாகும்

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| இலங்கை மரக்கறி வகைகள் 1Kg | 6.50Fr | **4.90Fr** |
| இந்திய மரக்கறி வகைகள் 1Kg | 5.50Fr | **3.80Fr** |
| தாய்லாந்து மரக்கறி வகைகள் 1Kg | 8.50Fr | **7.35Fr** |
| கீரை வகைகள் அனைத்தும் | 9.00Fr | **6.90Fr** |
| மீன் வகைகள் | 7.50Fr | **6.90Fr** |
| நண்டு, கணவாய் | 7.50Fr | **6.90Fr** |
| (மீன் வெட்டிச் சுத்தம் செய்து தரப்படும் - இலவசம்) | | |
| நல்லெண்ணெய 7.50Ml | 11.90Fr | **9.35Fr** |
| 375Ml | 6.75Fr | **4.90Fr** |
| அவித்து அரித்த சுத்தமான கோதுமை மா | 14.00Fr | **12.90Fr** |
| நெஸ்டமோல்ட் | 6.50Fr | **5.50Fr** |
| வீவா | 7.50Fr | **6.50Fr** |
| கோர்லிக்ஸ் | 6.90Fr | **5.90Fr** |
| மைலோ | 6.50Fr | **5.90Fr** |
| நெல்லி ரசம் | 6.50Fr | **5.40Fr** |
| பழரச வகைகள் | 6.50Fr | **5.40Fr** |
| லெமன் பஃப் | 2.50Fr | **1.25Fr** |
| டீ டைம் | 3.50Fr | **2.50Fr** |
| கிப்ட் செலக்ஸ்ஸன் | 6.50Fr | **4.80Fr** |
| சீனிச் சம்பல் | 6.50Fr | **4.20Fr** |
| ஊறுகாய் வகைகள் | 5.50Fr | **4.20Fr** |
| பிரியாணி மிக்ஸ் | 5.50Fr | **4.20Fr** |
| ஜாம் வகைகள் | 3.90Fr | **3.10Fr** |
| தேங்காய் பால் பவுடர் 1 Kg | 13.50Fr | **9.60Fr** |

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| தேங்காய்ப் பால் பவுடர் 350g | 5.95Fr | **4.50Fr** |
| தேங்காய்ப் பால் பவுடர் 150g | 3.15Fr | **2.30Fr** |
| மொட்டைக் கருப்பன் அரிசி5Kg | 12.50Fr | **9.30Fr** |
| மொட்டைக் கருப்பன் அரிசி 1Kg | 2.50Fr | **1.90Fr** |
| புழுங்கல் அரிசி 5 Kg | 12.50Fr | **9.30Fr** |
| புழுங்கல் அரிசி 1Kg | 2.50Fr | **1.90Fr** |
| பசுமதி அரிசி 5Kg | 10.90Fr | **7.45Fr** |
| முத்துச் சம்பா 5Kg | 12.50Fr | **9.30Fr** |
| முத்துச் சம்பா 1Kg | 2.50Fr | **1.90Fr** |
| மைசூர்ப் பருப்பு 2Kg | 5.50Fr | **3.40Fr** |
| உடன் ஆட்டிறைச்சிப் பங்கு 1 Kg | | **8.00Fr** |
| உடன் ஆட்டிறைச்சித் துடை 1 Kg | 14.00Fr | **11.00Fr** |
| அதி குளிரூட்டப்பட்ட கோழிக்கால் 2.5Kg | 12.50Fr | **9.90Fr** |

எமது அனைத்து உணவுப் பொருட்களும் அதி குறைந்த விலையில் எமது மக்களுக்காக விற்கப்படுகின்றன. மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட கழிவு உண்டு
வாருங்கள்! நுகருங்கள்!! நது புகழ்பரப்ப நல்லாதரவைத் தாருங்கள்!!!

**Nathu Enterprises(PVT) LTD**
**Importers & Exporters of Textiles, Grocery, Sea Foods, Fruits, Vegetables & Home Needs**
**Attinghausen Str 20, Breiterain, 3014 Bern**
**Tel: 0041 31 332 1010 - 0041 76 539 58 01**

# ஜே.வி.பி. கிளர்ச்சி 1987-1990ல் நடைபெறாதிருந்தால்

# இந்திய இராணுவத்தை வெளியேறும்படி பிறேமதாசா கேட்டிருப்பாரா ?

1988, 1989 ஆண்டுகளில் 3364 சிங்களக் குடும்பங்கள் மணலாறு பிராந்தியக் கிராமங்களில் குடியேற்றப்பட்டனர். பிராந்தியம் முழுவதையும் முழுச் சிங்களப் பிரதேசம் ஆக்கும் நோக்கில் தண்ணிமுறிப்புப் பகுதியில் வாழ்ந்த 3000 தமிழ்க் குடும்பங்கள் சிங்கள இராணுவத்தினர் நடத்திய தாக்குதல் மூலம் வெளியேற்றப்பட்டனர். வெளியேற மறுத்த 29 குடும்பங்களைச் சேர்ந்த தமிழர்கள், சிங்கள இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். தண்ணிமுறிப்புக் குடியேற்றங்களுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி ஜானகப் பெரேரா தனது பெயரையே இப்பகுதிக்குச் சூட்டியுள்ளார். தண்ணிமுறிப்பின் இப்போதைய பெயர் ஜானகபுர. தமிழர்களை விரட்டிச் சாதனை புரிந்தமைக்காக அவர் சிறீலங்காவின் இராசதந்திரத் தூதுவராக அவுஸ்திரேலியாவுக்கு



விஜயகுமாரதுங்கா - சந்திரிகா திருமணத்தின் போது...

அனுப்பப்பட்டுள்ளார்.

மணலாறு பறிபோனதற்கு, அதனது அமைவிடம் காரணமாகின்றது. வடக்குக் கிழக்கைத் தொடுக்கும் மண்பரப்பாக அது இடம்பெறுகின்றது. மணலாறை சிங்கள மயமாக்கினால் இணைந்த வடக்கு கிழக்குத் தோன்ற வாய்ப்பில்லை. மேலும் ஒரு காரணம் இருக்கின்றது மகாவலி நதி நீர் சிங்களவர்களுக்கே சொந்தம் என்ற சித்தாந்தம் பேரினவாதிகளிடம் உண்டு. வெலி ஓயா என்ற பெயர்மாற்றம் செய்யப்படும் பிராந்தியம் மகாவலித் திட்டத்தின் `எல்` வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. சிங்கள நீரை சிங்களவன் மாத்திரம் அனுபவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழர்கள் விரட்டப்பட்டனர். இது இந்தியாவின் அனுசரணையோடு நடத்தப்பட்ட விடயம்.

'சண்டே ரைம்ஸ்' என்ற கொழும்பில் பிரசுரமாகும் சிங்களப்

## அங்கம் 13

பேரினவாதிகளின் ஆங்கிலப் பத்திரிகையில் காமினி திசநாயக்காவை 'தமிழர்களின் உண்மையான நண்பன்' என்று விவரிக்கப்பட்டுள்ளது (Sunday Times, September 07, 1997). இதைப் படிக்கும்போது கண்ணீர்தான் வருகின்றது. தமிழர்களை வேரோடு களைவதற்கு முயன்ற பேரினவாதியை நண்பன் என்பதா? 1987 நவம்பர் மாதம் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட 13ம் சட்டத்திருத்தும் முடிக்குரிய காணிகளை மாகாண அரசுகளின் பொறுப்பில் விடுகின்றது. மகாவலி அபிவிருத்தித் திட்டம் மாத்திரம் மத்திய அரசுகளின் கையிலிருக்கும். இதன் பொருள் என்னவென்றால், மணலாறு சிங்கள அரசின் பொறுப்பிலிருக்கும். அங்கு சிங்களவர்கள் வாழ்வார்கள். தமிழர்கள் மீளக்குடியேற முடியாது.

மன்மோகன்சிங் அரசில் அமைச்சர் பதவி வகிக்கும் தமிழ்நாட்டின் மயிலாடுதுறைப் பிரதிநிதி மணிசங்கர் ஐயர் பி.பி.சி வானொலிக்குப் பேட்டியளிக்கும்போது ஈழத்தமிழர்களின் மனித உரிமைகள் உறுதிசெய்யப்பட வேண்டும், 13ம் திருத்தத்தில் கூறப்பட்டவை அமுலாக்கப்படவேண்டும். இவை ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளிற்குத் தீர்வாக அமையுமென்று கூறியுள்ளார். ராஜிவ் காந்தியின் உதவியாளராகவும் குடும்ப நண்பனாகவும் இருக்கும் ஐயர் மீண்டும் குட்டையைக் குழப்பத் தொடங்கியுள்ளார். இவருடைய செவ்வியின் உள்நோக்கம் நன்றாகப் புரிகின்றது.

சிங்கப்பூரின் பிதாமகரும் முன்னாள் முதல்வருமான லீ குவான் யூ அவர்கள் தனது வாழ்க்கை நாவலில் தமிழ் - சிங்கள மோதல் பூதாகாரமாக வளர்ச்சியடைவதற்கு மணலாறுக் குடியேற்றம் மிக முக்கியமான காரணமென்றுள்ளார். மண்ணையிழந்தவர்கள் சும்மாயிருப்பார்களா? என்று அவர் கேட்கிறார். அத்தோடு விரட்டப்பட்ட மக்களும் அவர்களுடைய இளம் தலைமுறையையும் புலியோடு புலியாக இணைந்து போரிடாமல் விடுவார்களா? என்றும் இந்த நூலில் கேட்கிறார். (THE SINGAPORE STORY:- FROM THIRD WORLD TO FIRST BY LEEKUAN YEW)

1983 யூலையில் நடைபெற்ற தமிழர்களுக்கெதிரான இன எதிர்ப்பு நடவடிக்கையின்போது காமினி தசாநாயக்கா மலையகத் தமிழர்களுக்கெதிரான தாக்குதல்களுக்குத் தலைமைதாங்கினார். பெரும்பாலான மலையகத் தமிழர்கள் வன்னிப் பகுதியில் குடியேறினர். இதற்கான உதவிகளை வெளிநாட்டு என்ஜியோக்கள் வழங்கின. அப்போது றெட்பானா என்ஜிஓ விற்குத் தலைவராகவிருந்த ஜோன் வெஸ்ப்பேக் மலையகத் தமிழர்களின் வன்னிக் குடியேற்றத்திற்குப் பெருமுதவிகளைச் செய்தார். இவர் பிற்காலத்தில் நோர்வேயின் சிறீலங்காத் தூதுவராகப் பதவி வகித்தார்.



ஆராரோ...!

றோ றோவோ!



( பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர் )

மலையகத் தமிழர்களைத் திருகோணமலை மாவட்டத்தில் குடியேற்றுவதற்கு என்ஜியோக்கள் எடுத்த முயற்சிகளை காமினி திசாநாயக்கா முறியடித்தார். யூலை 20, 1983ம் ஆண்டு வெளிவந்த சன் பத்திரிகையில் பின்வரும் செய்தி காணப்படுகின்றது. 'குடியேறுவதற்கு உரிமையில்லாதவர்களைக் குடியேற்றும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இதைத் தடுப்பதற்கான சட்ட அதிகாரங்களை அரசாங்க அதிபர்களுக்கு வழங்கும் பொலிஸ் அதிகாரங்களை நாம் பாராளுமன்ற மூடாகத் தருவோம்'. (GAMINI DISSANAYAKE, THE SUN Of JULY 20, 1983)

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபின் தமிழர் பகுதிகளில் ஒரு போரும், சிங்களவர் பகுதிகளில் ஒரு

> ஜே.வி.பியினர் நடத்திய கிளர்ச்சியின் தாக்கம் இன்றுவரை உணரப்படுகின்றது. சிங்களவர்கள் பம்பாய் வெ்காயம் என்று கூறுவதில்லை பெரிய வெங்காயம் என்று இன்றுவரை அழைக்கிறார்கள். அதுபோல் மைசூர் பருப்பு என்பதில்லை.

போரும் வெடித்தன. இரண்டும் சமகாலத்தில் நடைபெற்றன. ஜனதா விமுக்திப் பெரமுன எனப்படும் ஜே.வி.பி இந்தியாவுக்கு எதிரான தேசியவாதத்தை சிங்களவர்கள் மத்தியில் முன்னெடுத்தது. இவர்கள் நடத்திய ஆயுதக் கிளர்ச்சி காரணமாக சிங்கள நாட்டில் இரத்த ஆறு ஓடியது. அத்தோடு நின்றுவிடவில்லை, இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தையும் ஜே.வி.பி கிளர்ச்சி உருவாக்கியது. இறக்கும்வரை ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் நோக்குடன் தயாரித்த தனது அரசியல் சாசனத்தின் பயனை ஜெயவர்த்தனாவால் அனுபவிக்க முடியவில்லை. ஜே.வி.பி கிளர்ச்சியை அடக்கும் வகை தெரியாத ஜெயவர்த்தனா பிரதமர் பிறேமதாசாவிடம் தமது பதவியை ஒப்படைத்து விட்டு இளைப்பாறினார்.

ஜனவரி 03, 1989இல் பிறேமதாசா இலங்கையின் இரண்டாவது ஜனாதிபதியாகப் பதவியேற்றார். இவர் ஜே.வி.பி கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வந்தார். இதற்காக அவர் சிங்கள் இராணுவம் மற்றும் பொலிஸ் உதவியுடன் ஜே.வி.பியினரையும், ஜே.வி.பியுடன் தொடர்புடையோர் எனச் சந்தேகிக்கப்படுவோரையும் வகைதொகையின்றிக் கொன்றார். அத்தோடு புலிகளோடு பேச்சுவார்த்தையைத் தொடங்கிக் கொண்டு இந்திய இராணுவத்தை வெளியேறும்படி பணித்தார். முதலில் ஜே.வி.பியைக் கவனிப்போம் பின்பு எல்.ரி.ரி.ஈயைப் பார்ப்போம் என்ற அடிப்படையில் அவருடைய நகர்வுகள் இருந்தன. ஜே.வி.பி கிளர்ச்சி 1987-1990ல் நடைபெறாதிருந்தால் இந்திய இராணுவத்தை வெளியேறும்படி பிறேமதாசா கேட்டிருப்பாரா என்று ஆய்வாளர்கள் கேட்கின்றனர். அதே சமயத்தில் வந்த வேலையை முடிப்பதற்கு இந்திய இராணுவத்தை பிறேமதாசா அனுமதித்திருக்கலாமே என்ற விமர்சனமும் இன்றுவரை எழுப்பப்படுகின்றது.

ஜே.வி.பியினர் நடத்திய கிளர்ச்சியின் தாக்கம் இன்றுவரை உணரப்படுகின்றது. சிங்களவர்கள் பம்பாய் வெ்காயம் என்று கூறுவதில்லை பெரிய வெங்காயம் என்று இன்றுவரை அழைக்கிறார்கள். அதுபோல் மைசூர் பருப்பு என்பதில்லை. இரண்டையும் ஜே.வி.பி எதிர்த்தபடியால் அந்த மக்கள் இன்று பணிந்து நடக்கின்றனர். ஜே.வி.பி யின் கிளர்ச்சிக்காலத்தில் கொல்லப்பட்டோர்களில் மிகவும் முக்கியமானவர் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்க. பெப்ரவரி 16, 1988ம் நாள் இவருடைய வீட்டிற்கு இருவர் மோட்டார் சைக்கிளிலில் வந்தனர். பின் இருக்கையில் இருந்தவர் விஜயாகுமாரதுங்காவைச் சுட்டுக்கொன்றார். இதைச் சந்திரிகாவும் அவருடைய இரு பிள்ளைகளும் பார்த்தபடி நிற்கையில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

நவம்பர் 10,1989ல் ஜே.வி.பித் தலைவர் றோகன விஜயவீர உலப்பன எனுமிடத்தில் வைத்துக்கைது செய்யப்பட்டார். கொழும்பு கொண்டுவரப்பட்டு இராணுவத்தால் விசாரணை செய்யப்பட்டபின் கொல்லப்பட்டார். விஜயவீர கொல்லப்பட்ட விதம் பற்றிய தகவல்கள் கசிந்துள்ளன. இறந்த உடல் எரியூட்டும் கொழும்பு மாநகர சபையின் மயானத்தில் றோகண விஜயவீர உயிருடன் எரிக்கப்பட்டதாகப் பலமாக நம்பப்படுகின்றது. நவம்பர் 11,1989ல் ஜே.வி.பியின்



றோகண விஜயவீரா

றொகண விஜயவீரவுக்கு அடுத்த நிலையிலுள்ள இரண்டாம் நிலைத்தலைவர் உபத்ச கமநாயக்க கைது செய்யப்பட்டார். விசாரணைகளின்போது தப்பியோட முயற்சித்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார். இது அரசின் உத்தியோக பூர்வச்செய்தி. மேற்கூறிய சில நாட்களில் ஜே.வி.பியின் முழுத்தலைமைப் பீடத்தினரும் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஒருவர் மாத்திரம் இந்தியா ஊடாக இங்கிலாந்து சென்று அங்கு பலகாலம் வாழ்ந்தபின் அண்மையில் நாடு திரும்பியுள்ளார். இவர் யார் தெரியுமா?

(இன்னும் வரும்)


## வாரபலன்
## சிறீலங்கா அரசு

இந்த வாரமும் கடந்த வாரங்களைப் போலவே கிரக நிலைகள் மிக மோசமாக இருக்கின்றன. எட்டாம் இடத்தில் குடிகொண்டிருக்கும் (ஜேவிபி) சனீஸ்வரன் குழப்பத்துக்கு மேல் குழப்பம் விளைவித்துக்கொண்டே இருப்பார். அவர் உச்சத்துக்கு வருவதற்காக உங்களை படாதபாடுபடுத்துவார் போதாக்குறைக்கு நீங்கள் வலியத் தேடிப் பிடித்து அரவணைத்துவரும் கருணாண்டியால் பெரிய தொல்லைக்கு ஆளாகப் போகிறீர்கள். சுருட்டலுக்கு வழியில்லாமல் தவிக்கும் பூதகணங்களான உங்கள் படைத்துறைத் தளபதிகள் கருணாண்டிக்குப் படையல் செய்தால் பெரும் புதையல் கிடைக்கும் என்று வீணி வடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆழம் தெரியாமல் காலைவிட்டு சூரியத் தேவரை கோபங்கொள்ள வைத்தீர்கள் என்றால் பொசுங்கிப் போய்விடுவீர்கள். பறக்கவிட்ட சமாதானப் புறா கீழே விழுந்து கழுத்து முறிந்து இறந்ததானது, அந்தப் புறா கூட உங்கள் கைகளால் சமாதானப் பட்டம் பெற விரும்பவில்லை என்பதை உங்களுக்கு உணர்தியிருக்கும்.

அவ்வளவு தூரம் உங்கள் பக்கம் பாவம் சூழ்ந்துள்ளது.

இந்தக் கஷ்டங்களிலிருந்து மீழ்வதற்கு சூரிய வணக்கம் செய்வதைத் தவிர வேறு வழியே இல்லை.

*- திருஞான சாஸ்திரிகள்*



## இணைய வலம்



## புகழ்பெற்ற சிரிப்பு



### போட்டி எதிரொலி

சுற்றுப் பயணமாக ஸ்கொட்லாந்துக்காரன் ஒருவன் அமெரிக்காவிற்கு வந்திருந்தான். அமெரிக்கன் ஒருவன் அவனுக்குத் தன் நாட்டைச் சுற்றிக் காண்பித்துக்கொண்டு இருந்தான்.

பெரிய மலைக் குகையை அவனிடம் காட்டிய அமெரிக்கன், இங்கிருந்து நாம் என்ன பேசினாலும் இந்த மலைக் குகையில் பட்டுச் சரியாக நான்கு நிமிடங்கள் கழித்து அப்படியே எதிரொலிக்கும்.

பெருமையுடன் அவனைப் பார்த்த அமெரிக்கன், 'இதைப்போன்ற அற்புதம் எந்த நாட்டிலாவது உள்ளதா?' என்று கேட்டான்.

அதற்கு ஸ்கொட்லாந்துக்காரன், எங்கள் நாட்டு மலைப் பகுதியில் நாங்கள் முகாம் இட்டிருந்தோம். இரவு பத்துமணி ஆயிற்று நான் அங்கிருந்தவர்களிடம் 'நான் தூங்கப் போகிறேன், என்னைக் காலை ஆறு மணிக்கு எழுப்பி விடுங்கள்' என்றேன்.

அவர்களில் ஒருவர், 'யாரும் உங்களை எழுப்பவேண்டாம். பொழுது விடிந்துவிட்டது எழுந்திரு' என்று உரக்கக் குரல்கொடுத்துவிட்டுப் படுத்து விடுங்கள், எதிரொலி காலை ஆறு மணிக்கு உங்களை எழுப்பி விடும் என்றார்.

அவர் சொன்னதை நான் நம்பவில்லை. இருந்தாலும் 'பொழுது விடிந்து விட்டது. எழுந்திரு' என்று உரக்கக் குரல் கொடுத்துவிட்டுப் படுத்தேன். என்ன வியப்பு! சரியாக எட்டுமணி நேரம் கழித்துக் காலை ஆறு மணிக்கு அந்த எதிரொலி 'பொழுது விடிந்துவிட்டது. எழுந்திரு' என்று என்னை எழுப்பியது என்றான்.

### நாள்தோறும் வரும் ரகசியம்

அந்த அறுவைத் திரைப்படத்தை ஒருவர் தொடர்ந்து பத்து நாளாகப் பார்த்துக்கொண்டிருந்தார். வியப்பு அடைந்த திரையரங்க மேலாளர், 'சார்! உங்களுக்கு இந்தப் படம் ரொம்பப் பிடிச்சிருக்கா? நாள் தோறும் வருகின்றீர்களே?' என்று கேட்டார்.

'அதெல்லாம் ஒன்றும் இல்லை. இந்தப் படம் சரியான போர்தான். இதில் ஒரு காட்சியில் கதாநாயகி குளிக்கிறதுக்காக ஒவ்வொரு ஆடையாகக் கழற்றிப் போடறா. அப்ப திடீர்னு அந்த வழியா ட்ரெயின் வருது. அது போனவுடன் பார்த்தால் அவள் குளத்தில் குளித்துக்கொண்டிருக்கிறாள். ஒரு நாளாவது அந்த ட்ரெயின் லேட்டா வராதா என்பதற்காகத்தான் நாள்தோறும் வருகிறேன்' என்று விளக்கம் தந்தார் வந்தவர்.



மனோதத்துவ டாக்டரிடம் வந்த ஒருவன் 'டாக்டர்! எப்பவும் நான் பரபரப்பாக இருக்கிறேன் உள்ளத்திலே அமைதியே இல்லை' என்றான்.

அவனை நன்கு பரிசோதித்த டாக்டர், 'கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு ஒரு நோயும் இல்லை. யார் யார் எரிச்சல் உண்டாக்குகிறார்களோ அவர்களை விட்டுச் சிறிது காலம் விலகி இருங்கள். எல்லாம் சரியாகிவிடும். வாரத்திற்கு ஒருமுறை என்னை வந்து பாருங்கள்.' என்றார்.

இரண்டு வாரம் கழிந்தது. அவன் வந்து டாக்டரைப் பார்க்கவில்லை. என்ன ஆயிற்றோ என்ற கவலையில் அவனுக்குப் போன் செய்தார் டாக்டர்.

'நீங்கதானே டாக்டர் எரிச்சல் ஏற்படுத்தறவங்களைக் கொஞ்சக் காலம் பார்க்க வேண்டாம் என்று சொன்னீர்கள். உங்களை விட யாரும் எனக்கு அதிக எரிச்சல் தருவதாகத் தெரியவில்லை. அதனால்தான் பார்க்க வரவில்லை' என்று பதில் வந்தது.

☺ ☺ ☺

ஒருவன் உயரமான மரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்தான். அவனை வீட்டிற்குத் தூக்கிச் சென்றனர். அங்கு வந்த டாக்டர் அவனைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, 'அவன் இறந்து விட்டான்' என்றார். ஆனால் அடிபட்டவனோ தன் கண்ணை விழித்துப் பார்த்து 'நான் இறக்கவில்லை டாக்டர், உயிரோடுதான் இருக்கிறேன்' என்றான்.

அங்கிருந்த அவன் மனைவி, 'வாயை மூடுங்கள், டாக்டருக்குத் தெரியாதது உங்களுக்கு என்ன தெரியும்?' என்று அதட்டினாள்.

'டாக்டர்! என் உடம்பு தேறுவதற்காக நீங்க கொடுத்த மாத்திரையை ரெண்டு நாளாகச் சாப்பிட்டேன். இப்ப பேசக்கூட முடியலே! உடம்பு ரொம்ப மோசமாயிடுச்சி.'

'உங்க சாப்பாட்டிலே ஏதாவது கோளாறா இருக்கும்? என்னென்ன சாப்பிட்டிங்க? சொல்லுங்க'

'சாப்பாடு வேற சாப்பிடணுமா டாக்டர். இதை ஏன் முன்னாலேயே என்னிடம் சொல்லலே?'

## கடி ஜோக்ஸ்

கமலா: டெலிவிசன்லே சோபனா ரவி எப்பவும் சேலைத் தலைப்பைப் போர்த்திக்கிட்டுதான் செய்தி வாசிப்பாங்க. ஏன் அப்படி?

விமலா: தெரியாதே!

கமலா: அவங்க வாசிக்கிறது தலைப்பு செய்தியாச்சே!



☺ ☺ ☺

எதற்காக இப்படி வேகமாகப் படிக்கட்டு வழியாக இறங்குறீங்க?

என் கடிகாரம் மாடியிலிருந்து விழுந்துவிட்டது.

இந்நேரம் விழுந்திருக்குமே?

இன்னும் விழுந்திருக்காது, அது அஞ்சு நிமிசம் ஸ்லோ!



☺ ☺ ☺

ஆசிரியர்: மாலா, ஆறில் பத்து போகுமா?

மாலா: போகும் சார்!

ஆசிரியர்: எப்படி?

மாலா: எங்க வீடு ஆத்துக்குப் பக்கத்திலேதான் சார் இருக்கு. எங்கம்மா தினமும், பத்துப் பாத்திரத்தை அங்கேதான் தேய்ப்பாங்க.

☺ ☺ ☺

நான் ஒரு தடவை இருபது அடி உயரமுள்ள ஏணியிலிருந்து கீழே விழுந்திருக்கிறேன்.

ஐயையோ, ரொம்பவும் அடிபட்டிருக்குமே.

அப்படியெல்லாம் ஒன்றுமில்லையே... அப்போது நான் ஏணியின் முதல் படியில்தானே இருந்தேன்.

☺ ☺ ☺

👍 உங்களுக்குத் தேவை இல்லாதது ஏதாவது இருந்தால் போடுங்கள். காசு கொடுக்கிறேன்

ஒரு நிமிடம் இரு. என் மனைவியைக் கூப்பிடுகிறேன்.

☺ ☺ ☺

👍 சீப்புக்கும் வாழைப்பழத்துத் தோலுக்கும் ஓர் ஒற்றுமை. அது என்னன்னு சொல்லுங்க பார்ப்போம்!

தெரியாது!

சீப்பு தலை வாரும், வாழைப்பழத் தோல் காலை வாரும்.

☺ ☺ ☺

👍 அது ஓர் அழுகை சினிமா. படம் பார்க்கும்போது அழுதுவிட்டேன்!

எந்த இடத்தில்?

உட்கார்ந்து கொண்டு படம் பார்த்த அதே இடத்தில்தான்.

☺ ☺ ☺

👍எல்லா மொழிகளையும் பேசக்கூடியது எது?

எதிரொலி

**மாணவி:-** ஆசிரியரே உங்களிடம் ஒரு தனிப்பட்ட கேள்வி கேட்கலாமா?

**ஆசிரியை:-** தாராளமாகக் கேளுங்கள்...

**மாணவி:-** நீங்கள் ஏன் திருமணம் செய்துகொள்ளவில்லை..?

**ஆசிரியை:-** எனக்கு திருமணம் தேவைப்படாததாலேயே நான் திருமணம் செய்துகொள்ளவில்லை.

என்னிடம் மூன்று செல்லப் பிராணிகள் இருக்கின்றன. அவை கணவன் ஒருவன் செய்யும் மூன்று காரியங்களையும் செய்யும். எனது நாய் விடியற்காலை உறுமும். எனது கிளி முழுப்பகற் பொழுதும் சத்தியம் செய்துகொண்டிருக்கும். எனது பூனை தினமும் இரவில் நேரம் கழித்து வீட்டுக்கு வரும்.

7வது தடவையாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்ஸ் நடாத்தும் மாபெரும்

# தமிழர் விளையாட்டு விழா - 2004

GRANDE RENCONTRE SPORTIVE - TAMOULE

மைதான நுழைவுச் சீட்டுடன் பெறுமதிவாய்ந்த பரிசுப்பொருட்கள் காத்திருக்கின்றன!

## 27-06-2004

ஞாயிறு காலை முதல் மாலை வரை பரந்த le Bourget மைதானத்தில்!

தமிழீழ உணவகம்

மணக்க மணக்க
சுடச்சுட
தாயகத்து
சுவையுடன்
ஒடியல் கூழ்
கொத்துரொட்டி
இன்னும்
பலவகைச்
சிற்றுண்டிகளுடன்

தமிழீழ உணவகம்

"புல்வெளியில் அமர்ந்து ஊர்க்கதை பேசிக் கூடிக் கூழ்குடித்து கும்மாளமிட்டு, மண்மணம் வீசும் பாரம்பரிய விளையாட்டுக்களுடன் மன மகிழ்வூட்டும் தமிழர் விளையாட்டுவிழா!"

L'Aire de Vents (Dugny)
Parc Départemental de la courneuve
Accés
Autoroute A1-Sortie LE BOURGET Direction DUGNY Centre
R.E.R (B) LE BOURGET Autobus 133 Arrêt de bus - LA COMÈTE



தொடர்புகட்கு: ORT France, 26 rue du Départment, 75018 Paris.Tél/Fax:01 40 38 30 74, E-mail:trofrance@trofr.com, web:www.trofr.com



INDIAN ASTROLOGER

# சாய்பாபா

ॐ

## Laxmi Kanthswamy

**பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.**

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்றுதலும் செய்து தருவோம்.

**சந்திக்குமிடம்:**
**(West London) South hall**
**Contact:**
**Tel: 07932724065 / 07939613067**



தியான மூலம் மந்திரமூலம் குருமூலம்
குருவாக்கியம் தஸ்மை ஸ்ரீ குருவே நமக

# யோகக்கலை



சுவிஸ் வாழ் நம் தமிழ் உறவுகளே ! இதோ ஓர் அரிய வாய்ப்பு: சூரிச், பேர்ண் மாநிலங்களில் கீழ்காணும் முகவரியில் புதிய யோகாசன வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன, ஆர்வமுள்ளோர் உங்களைப் பதிவுசெய்துகொண்டு `ஜூன்` மாத முற்பகுதியில் ஆரம்பமாகவுள்ள புதிய வகுப்பில் பங்குகொள்ளலாம்.

**வகுப்புக்கள் நடைபெறவுள்ள முகவரி:**
சூரிச்: **Scinece Academy, Militarstrasse. 84, 8004 ZURICH** (சனிதோறும்)
பேர்ண்: **Thamilar Illam, Laupenstrasse. 37,3006 Bern** (ஞாயிறுதோறும்)

இப் பயிற்சி வகுப்புக்கள்யாவும் யோகாசனப் பேராசிரியர் திரு. ஆசன ஆண்டியப்பன் ஐயா அவர்களின் மாணவரும், ஆயுர்வேத வைத்தியருமான நாகலிங்கம் குலசிங்கம் அவர்களால் நடத்தப்படும்.

இது தொடர்பான மேலதி தகவல்களுக்கும், கேள்விகளுக்கும் தொடர்புகொள்ள:

திரு. குலசிங்கம் (யோகாசிரியர்), பிறைபூர்க்: 026 481 23 46, 078 623 12 37
திரு. ஞானா (சயன்ஸ் அக்கடமி சூரிச்) 079 439 88 34
திரு.நேசன் (தமிழர் இல்லம், போர்ண்) 079 783 32 37

**யோகக்கலை**
நீரிழிவு, ஆஸ்த்மா, பீனிசம், வாதம், மூட்டுவலி போன்ற நோய்கள் நீங்கவும், மாணவர்கள் ஞாபகசக்தியைப் பெருக்கவும் தலைசிறந்த மார்க்கமாகவும்

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

Sw-19



# விதுஜா ஏசியன் சொப்

## மாபெரும் மலிவு விற்பனை

**காலம்:** 18.06.04 - 19.06.04 - 20.06.04
**நேரம்:** 10.00 - 18.30
**இடம்:** **RESTAURANT GALAXY**
**Effinger Strasse -20, 3008 Bern.**

- சிறுவர் சிறுமியர்களுக்கான இந்திய, இந்தோனேசிய நாட்டு உடுப்புக்கள்
- சோலி, சுரிதார், பஞ்சாபி
- பனாரஸ், கோலம், மைசூர் சில்க், சில்க் சாறிகள்

**அனைத்தும் 50 வீதக் கழிவில் கிடைக்கும்!**

- தொலைபேசி அட்டைகள் 23SFR
- பழைய புதிய வீடியோ CDகள் விற்பனைக்குண்டு.
- முதல் தர மிக்ஸி Preethi விலை – 99SFR மட்டுமே
- அழகு சாதனப்பொருட்களும் மற்றும் வீட்டு உபகரணப் பொருட்களும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **VIDUJA ASIAN SHOP**
**JEWELLERY -TEXTILES**
**Waaghaus Passge -8**
**3011 Bern (1 Stock), switzerland**
**Shop: 031 3113510 Fax: 031 3113510**
**Res: 031 9928267 Cell:079 2417163**

*Jewellery Items* *Telephone Card*
*Readymand Dresses & Sarees* *Video & Audio CD*
*Gift Articles*
*Imitation Items.....*

33

# உலக அரங்கில் தமிழ்மொழி

உலகத்தில் இன்று பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை ஆறாயிரம் எனக்கணிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் மூவாயிரம் மொழிகள் – எழுத்து இலக்கியம், மொழியிலக்கணம் கொண்ட மொழிகளாக இனங்காணப்பட்டுள்ளன. உலகத்திலுள்ள மொழிகளிலே ஆறு மொழிகள் மட்டுமே இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தவையெனவும் அவை தமிழ், சமஸ்கிருதம், சீனம், லத்தின், ஹீப்ரு, கிறீக் ஆகிய மொழிகளெனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இம் மொழிகளில் ஐம்பது மொழிகளால் மட்டும்தான் இன்றைய காலத்தேவைக்கேற்ப கணணி, அறிவியல், தொழில்நுட்பம் போன்றவற்றுக்கு ஈடுகொடுத்து நின்று நிலைக்க முடியுமெனவும், ஏனைய மொழிகள் நிலைக்கமுடியாமல் அழிந்து விடுமெனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறு வாழப்போகும் மொழிகளென அடையாளப்படுத்தப்பட்ட ஐம்பது மொழிகளில்தமிழ்மொழியும் ஒன்றாக இருப்பது சந்தோசமாக இருக்கிறது.

தற்போது இந்திய மத்திய அரசில் ஆட்சியமைத்திருக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, குறைந்தபட்ச செயற்திட்டமொன்றை அறிவித்துள்ளது. அச்செயற்திட்டத்தில் தமிழை செம்மொழியாக்கும் திட்டமும் இடம் பெற்றுள்ளதையடுத்து, தமிழைச் செம்மொழியாகவும் அறிவித்தாகிவிட்டது.

உலகத்தில் உள்ள மொழிகளில் ஐந்து மொழிகள் ஏற்கனவே செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுவிட்டன. இப்போது ஆறாவது மொழியாக தமிழ் மொழியும் அறிவிக்கப்பட்டுள்ளமை தமிழுக்கு உலக அரங்கில் பெரும்மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்த விடயமாக பெருமைகொள்ளலாம்.

ஒருமொழி செம்மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமெனில் அம்மொழி பதினொரு வகையான அந்தஸ்துகளைப் பெற்றிருக்கவேண்டும். அவையாவன

1. தொன்மை
2. தனித்தன்மை
3. பொதுமைப்பண்பு
4. நடுநிலமை
5. தாய்த்தன்மை
6. பண்பாடு, கலை, பட்டறிவு, வெளிப்பாடு
7. பிறமொழித் தாக்கமின்மை
8. இலக்கியவளம்
9. உயர்சிந்தனை
10. மொழியியற் கோட்பாடுகள்
11. கலை, இலக்கிய தனித்தன்மை வெளிப்பாடு – பங்களிப்பு என்பனவென

மொழியியல் அறிஞர்கள் கூறியுள்ளார்கள். இவ்வகையிலமைந்த பதினொரு தகுதிகளும் தமிழுக்குண்டு என்று ஆய்வுகள் மூலம் என்றோ நிருபித்தாகி விட்டது. ஆனால் ஏழு தகுதிகள் மட்டுமே கொண்ட சமஸ்கிருதம் ஏற்கனவே செம்மொழியாக்கப்பட்டமையும், அம்மொழியின் வளர்ச்சிக்காக 142 கோடி ரூபாக்களை இந்திய மத்திய அரசு ஒதுக்கியமையும் தமிழகத் தமிழறிஞர்களை மிக்கவருத்தத்துக்குள்ளாக்கியிருந்தது. ஆனால் தகுதியுடையது வாழும், நிற்கும் என்ற இயக்கவியல் தத்துவத்திற்கேற்ப இப்போது தமிழும் செமமொழியாக அறிவிக்கப்பட்டது மிகுந்த சந்தோசத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தமிழ் மொழி செம்மொழியாக்கப்பட்டமையால் உலகத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழுக்கென தனியான துறைகள் நிறுவப்படும். இதனால் 178 நாடுகளில் வாழும் தமிழர்கள் பயனும், பெருமையுமடைவர். தமிழர்களின் கலாச்சாரம், பண்பாடு, கலை, இலக்கியம் என்பவற்றின் வரலாறுகள் ஆய்வுக்குட்படுத்தப்படும். புதிய அகழ்வாராய்ச்சிகள் ஊக்குவிக்கப்படும். அகழ்வாராய்ச்சிகள் மூலம் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள், ஈமத்தாழிகள், தாயத்துக்கள் போன்றவற்றிலுள்ள வட்டெழுத்துக்கள் தமிழை அளவுகோலாகக்கொண்டு ஆராயப்படும். இதனால் தமிழ் சமஸ்கிருதத்திலிருந்துதான் வந்ததுபோன்ற முடிவுகள் பொய்ப்பிக்கப்படும். பன்னாட்டுக் கருத்தரங்குகளில் தமிழ் மொழிவல்லுநர்கள் கலந்துகொள்ளும் வாய்ப்புகள் உண்டாகும். தமிழிலே பல்வேறு ஆய்வு நூல்கள் வெளிவருவதோடு தமிழை அறிவியல் ரீதியாக வளர்க்கவும், வளம்படுத்தவும் நடுவண் அரசிடமிருந்து மட்டுமல்லாமல் உலகின் பல நிறுவனங்களிடமிருந்தும் பல கோடி ரூபாக்கள் நிதியுதவி கிட்டும். இவை எம் தாய் மொழியாம் தமிழ் மொழி சீரும் சிறப்பும்பெற்று உலக அரங்கில் திகழ வழியேற்படுத்தும்.

இவ்வாறு சிறப்புற்ற தமிழ் மொழியை 1897 முதல் சூரியநாராயண சாஸ்திரி பல ஆராய்ச்சிகள் செய்து தமிழினை தனிமொழி, உயர்மொழி, தனிச்செம்மொழி போன்ற தொடர்களால் அழைத்தார். தொடர்ந்து இராமானுசம், கார்த்திகேயன், மேல்நாட்டறிஞர்கள் கமில் சுவலபில், பின்சுலே போன்றோர் தமிழை செம்மொழியென நிறுவுவதில் முழுதாக முயற்சி செய்தனர். சென்னைப் பல்கலைக்கழகம் 1918ல் தமிழைச் செம்மொழியாக்க தீர்மானம் நிறைவேற்றியது. தமிழ்ச் சங்கம் 1919, 1920 ஆண்டுவிழாக்களில் தமிழைச் செம்மொழியாக்கத் தீர்மானம் நிறைவேற்றியது. தொடர்ந்து மணவை முஸ்தபா அவர்களின் வேண்டுதலின்பேரில் 1981ல் மதுரை தமிழாராய்ச்சி மகாநாட்டைத் தொடர்ந்து முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் தமிழைச் செம்மொழியாக்க நடவடிக்கையெடுத்தார். 1989ல் தமிழ் நாட்டில் கலைஞரின் ஆட்சி வந்ததையடுத்தும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1995ல் ஜெயலலிதாவாலும் செம்மொழியாக்கலுக்கான விண்ணப்பம் மைசூரிலுள்ள மொழி ஆய்வு மையத்துக்கு அனுப்பப்பட்டது. ஆய்வுமையம் தமிழ் செம்மொழியாக்க தகுதியுடையதென மத்திய அரசுக்கு சிபார்சு செய்தது. ஆனால் தற்போதைய புதிய அரசே தமிழை செம்மொழியென அறிவித்துப் பெருமைசேர்த்துள்ளது. இத்தோடு நின்றுவிடாமல் இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டுமெனவும் கலைஞர் கருணாநிதி கூறியுள்ளார்.

- பொ. இராசரத்தினம்

# வாக்குமூலம்



அம்பிகா, 7வயது

எல்லோருக்கும் வணக்கம்!
கனக்க ஆக்கள் இருக்கிறியள்
கண்டால் சொல்லலாமெண்டு நினைச்சன்
சந்தர்ப்பம் சரியா வந்திருக்கு

போன கிழமை - அது
புதன் கிழமையெண்டு நினைக்கிறன்.
புலி மாமாவைக்குக் காசு சேர்க்க
மாமா ஆக்கள் வந்து பெல் அடிச்சினம்
நான், அப்பாக்கு ஆரெண்டு சொன்னன்
`நான், இல்லையெண்டு சொல்லடி'
அப்பா கத்தினார்!
எனக்குத் தெரியுமே, நானும்
`அப்பா, தான் இல்லையெண்டு
சொல்லட்டாம்'
அப்படியெல்லே சொல்லிப்போட்டன்
அவருக்கு வந்த ஆத்திரத்திலை
கன்னத்தை பொத்தி
வெளுத்துப்போட்டார்
கவனமா பாருங்கோ...
காதுப் பக்கம் இன்னும் வீக்கம் இருக்கு.

எனக்கு இன்னும் விளங்கேல்லை
அண்டைக்கு தம்பிக் குட்டிக்கு
அப்பிள் குடுத்தனான் எண்டு
அம்மாட்டை பொய் சொல்லிப் போட்டன்
`ஏனடி பொய் சொன்னனி' எண்டு
அதுக்கும் அப்பா அடிச்சவர்
`பொய் சொல்லக்கூடாது பாப்பா' - இது
பாரதியார் மாமா பாடினதெண்டு
பவானி ரீச்சர் சொல்லித்தந்தவ - இனி
`பொய் சொல்லக் கூடாது பப்பா'
இப்படியும் பாடவேணும்.

அப்பாவைப் பற்றி சொன்னதை
அவருக்கு சொல்லிப்
போடாதேங்கோ - பிறகு
அதுக்கும் அடிவிழும்

– சோதியா (நோர்வே)

# தெற்கு, சிறீலங்கா இல்லை!

**சமாதானம் இல்லாமல் சந்திரிகா 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறமாட்டார். அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே நிலவும் அடர்த்தியான நிலை, பொருளாதாரத்தின் பலவீனமான நிலை ஆகியன, நாட்டின் சமாதானத்திற்கு ஏற்படப் போகும் பேரழிவை-கேடை, முன்னெச்சரிக்கை செய்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.**

சந்திரிக்கா குமாரதுங்காவுக்கு 2005ம் ஆண்டுக்குப் பிறகு பதவியிலிருப்பதற்கு அரசியல் யாப்பைச் சீர்திருத்துவது ஒரு விடயம், நாடாளுமன்றத்தில் தற்காப்பற்றவரைத் தாக்கி முடமாக்குவதும், எதிர்ப்பவர்களுக்கு அச்சுறுத்தல் விடுவதும் இன்னொரு விடயம். அரசாங்கத் தரப்பினரால் நாடாளுமன்றத்தில் அரங்கேற்றப்பட்ட அவமானகரமான அவர்களது நடத்தையைப் புகைத்திரையிட்டு மூடிமறைக்கும் முயற்சி, உள்நாட்டு மற்றும் சர்வதேச நாட்டு சமூகத்தினரிடம் பெரிதாக நம்பிக்கையூட்டாது. இன்றைய கூட்டணி ஆட்சியிலிருப்பதற்கு உறுதி பூண்டுள்ளது. எதிர்க்கட்சியை நிலைகுலைய வைப்பதனாலும் நாடாளுமன்றத்தில் ஆட்சியில்லா நிலையை ஏற்படுத்துவதானாலும் தற்போதைய அரசியல் யாப்பு செயற்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியற் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்துவதில் ஐக்கிய தேசிய முன்னணி மந்தப் போக்கையே காட்டிவருகிறது. மேலும் ஐக்கிய தேசிய முன்னணியின் பெரும்பான்மையினர் தேர்தலுக்குப் பின்னர் தோல்வி கொடுத்த மருட்சியிலிருந்து மீண்டதாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சிகளின் இந்த மந்த நிலையைப் பயன்படுத்தி சு.ஐ.ம.மு தமது தற்போதைய சாதகமற்ற நிலையிலிருந்து மீண்டு எழும்பி மாகாண சபைத் தேர்தல்களில் வெற்றி வாய்ப்பு ஏற்படுத்தினாலும் அதிசயம் இல்லை. தனது சிறுபான்மை அந்தஸ்த்தை மறைப்பதற்கு, இந்நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், நாடாளுமன்றத்தில் அரசாங்கம் ஒன்று இத்தகைய பயங்கர தந்திரோபாயத்தை மேற்கொண்டிருப்பது இதுவே முதற்தடவையாகும். இதனை விடுத்து எதிர் கட்சியினரின் ஒத்துழைப்புப் பெற வழிவகைகளையும் மார்க்கங்களையும் கண்டறியும் முயற்சியில் ஈடுபடவேண்டும். மாதம் ஒருமுறை நாடாளுமன்றம் கூடுவதனால் ஐக்கிய தேசிய முன்னணிக்கு நாடாளுமன்றத்தில் இருக்கும் அனுகூலம் படிப்படியாக இழந்து போகாமலிருக்க அது கடைசிக் காலம் வரை காத்திராமல் நாடாளுமன்றத்தை வேளைக்குக் கூட்டும்படி நெருக்குதல் கொடுக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் மற்றக் கட்சிகளுடன் இணைந்து ஒரு சமரசங் கண்டு ஓர் அரசை அமைக்கவேண்டும். இப்படிச் செய்யாதுவிட்டால் ஐக்கியதேசிய முன்னணிக்கு தனது ஆதரவாளர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியாது நீண்ட காலத்திற்கு எதிர்க்கட்சியிலேயே இருக்க நேரிடும். குமாரதுங்க இந்நிலையில் தொடர்ந்து இருப்பது அரசாங்கத்திற்கும் நாட்டுக்கும் தீங்காகவே முடியும். இந்நிலையினைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு ஜே.வி.பி எங்கள் நாட்டையும் எங்களது எதிர்காலத்தையும் பணயங்களாக்கித் தனது அரசியல் விளையாட்டை விளையாடித் தண்டிப் பிழைக்கப் பார்க்கிறது. 1970 களிலும் 1989திலும் ஜே.வி.பி யினர் செய்த பேரழிவுகளையும் அட்டூழியங்களையும் இந்நாட்டு மக்கள் மறந்திருக்கமாட்டார்கள், மறந்து மன்னிக்கவும் மாட்டார்கள். சிறீலங்காவின் தெற்கு சிறீலங்காவாகாது. குமாரதுங்கவின் விளையாட்டுத் திட்டம் என்னவென்று எங்கள் எல்லோருக்கும் நன்றாகவே தெரியும். தனது பதவிக் காலத்தை மூன்றாவது முறையாகவும் நீடிப்பது அல்லது நாடாளுமன்றத்திற்குப் பிரதம மந்திரியாகத் திரும்பி வருவது அவரது இலக்கு. இன்று இந்த விளையாட்டு ஒரு மாயமான குழப்பமாகவே இருக்கிறது. அவருக்கு இப்பொழுது இருக்கும் தேரிவுகள் இரண்டு மாத்திரமே. ஒரு பொருத்தமான கட்டத்தில் மக்களிடமிருந்து புதிதாக ஆணையொன்றை நாடுவது, அல்லது ரணில் விக்கிரமசிங்கவுடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வருவது. அமெரிக்காவில் கூட ஒரு சனாதிபதிக்கு இரண்டு பதவிக்காலங்கள்தான் கிடைக்கின்றன. வாக்காளர் களைப்பு நிலையை அடைவர் என்பதை சனாதிபதி மறக்கலாகாது. வாக்காளர் புதிய சிந்தனைக்கான வழியையே விரும்புவர். எனவே சோனியா காந்தி தனது ஆன்மாவின் குரலுக்குச் செவிமடுத்ததுபோல் சந்திரிக்காவும் தனது உள்மனத்தின் குரலின்படி தனக்கும் நாட்டுக்கும் எது நல்லதோ அதைச் செய்ய வேண்டும்.

ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி ஒரு பலம் வாய்ந்த எதிர்க்கட்சியின் பங்கை வகிக்கத் தொடங்க வேண்டும். தனது கூட்டுக்கட்சிகளின் எண்ணிக்கையின் பலத்தால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி சந்திரிகாவினால் ஹிட்லர் பாணியில் இனி வரக்கூடிய தந்திரோபாயங்களைத் தடுத்துத் தனது ஆதாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும். கட்சியின் ஒற்றுமையை விலைபேசும் அளவுக்கு குறுகிய நோக்கங்களையும், விருப்பு வெறுப்புகளையும் அரசியல் நிரல்களுக்கு இடங்கொடுத்துத் தலைமைத்துவம் குறுக்கு வழிகளைக் கையாளும்வரை, ஐக்கிய தேசிய முன்னணி அலங்கோலங்களையும், அவலங்களையுமே சந்தித்துக் கொண்டு இருக்கும். சந்திரிக்காவும் தனது 2005ம் ஆண்டுக்குப் பின்னரும் பதவியில் நீடித்திருக்கும் இலக்கை அடைவதற்கு ஒரு புதிய புரட்சிகரமான அரசியல் யாப்புக் கனவை விடப்போவதில்லை. சில காலங்களாகத் தனித்தொகுக்கப்பட்டிருந்த ஜே.வி.பிக்கு இந்த அரசியற் கூட்டு ஒரு வித சமூக அந்தஸ்த்தைப் பெற்றுக்கொடுத்திருக்கிறது. இத்தேர்தல் கூட்டணி, அரசாங்கமென்னும் ஊர்தியில் ஓட்டுநர் இருக்கையில் அமரும் சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி இன்று வாடிவதங்கிச் சாகும் தறுவாயில் இருப்பதாலேயே ஜே.வி.பியினருக்கு இச்சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மக்களுக்குச் சந்திரிகாவால் கொடுக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை அவராலேயே நிறைவேற்ற வைத்து, தான் மாகாணசபைத் தேர்தலில் மாகாண அளவில் கூடிய பிரதிநிதிகளைப் பெறவேண்டும் என ஜே.வி.பி திட்டந்தீட்டியுள்ளது. துரதிஷ்டவசமாகச் சந்திரிக்காவும் தனது அரசியல் யாப்பு ஆக்கத்திற்கு அவர்களுடைய உதவியைப் பெறுவதற்காக அவர்களுடன் தொடர்ந்து பந்து விளையாடக் கூடும். சந்திரிக்கா ஜே.வி.பியின் கோரிக்கைகளுக்கும் திட்டங்களுக்கும் விட்டுக்கொடுப்பாரேயானால் அவர் சர்வதேசச் சமூகத்தினதும் வர்த்தக சமூகத்தினதும் நம்பிக்கையையும் ஆதரவையும் நிச்சயமாக இழப்பார். அதே வேளை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்ட கால நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காட்டிலும் ஜே.வி.பியினருக்கு அம்மையார் கூடிய சலுகைகளையும் முன்னுரிமைகளையும் கொடுப்பதாக அவர்கள் குறைகண்டுகொண்டு இருக்கிறார்கள். இந்த விளையாட்டில் ஜே.வி.பியும் சந்திரிக்காவும் அவரது கட்சியினரும் தங்கள் கவனங்களைக் குவித்துக்கொண்டிருக்கும்வரை நாட்டின் பொருளாதாரம் மோசமான வீழ்ச்சியைக் காணும். அதற்கும் மேலாக சமாதான முயற்சிகளும் மீளமுடியாத அளவுக்கு இடர்காணும். மோசமான தேசியப் பிரச்சினைகளை ஊக்கத்துடன் எதிர்கொண்டு அவற்றிற்குத் தீர்வுகள் காண வர்த்தகத் தலைவர்கள் சிலர் தேசிய சபையொன்றை அமைக்கவேண்டும் எனக் கோருகிறார்கள். இவர்கள் இலாபங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காட்டிலும் நாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இதுவிடயத்தில் அவர்கள் தென் ஆபிரிக்க, அமெரிக்க வர்த்தகத் தலைவர்களின் முன்னுதாரணங்களைப் பின்பற்றவேண்டும்.



ஒஸ்லோவுக்கு எதிராக எவ்வித தருக்க ரீதியான நியாயமுமில்லாது மிக்க கடுமையானதும் மூர்க்கத்தனமுமான கண்டனங்களையும் எதிர்ப்புக்களையும் தொடர்ச்சியாக வெளிக்காட்டிச் சமாதான முயற்சிகளைத் தோல்வியுறவைப்பதில் ஜே.வி.பி காட்டும் முனைப்புக் காரணமாக ஜயந்த் தனபால போன்ற மனிதராலும் சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை உடைக்கக் கடினமாகவுள்ளது. சமாதான முயற்சிகள் காலவரையற்று இழுபட்டுக்கொண்டு போகுமானால் ஜயந்த தனபால விடுதலைப் புலிகளினது நம்பிக்கையை இழக்கும் அபாயத்துக்குத் தள்ளப்படுவார்.

சமாதானம் இல்லாமல் சந்திரிகா 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறமாட்டார். அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே நிலவும், அடர்த்தியான நிலை, பொருளாதாரத்தின் பலவீனமான நிலை ஆகியன, நாட்டின் சமாதானத்திற்கு ஏற்படப்போகும் பேரழிவை-கேடை முன்னெச்சரிக்கை செய்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

சகல அரசியற் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதற்கு இவை மிகத் தெளிவான செய்திகளாகும். சில அரசியற் கட்சிகளுக்கிடையே இனப் பிரச்சினை சமாதான முறையில் சுமூகமாகத் தீர்க்கப்படவேண்டும் என்ற ஏகமனதான நிலைப்பாட்டை எடுத்திருப்பது ஒரு வரவேற்கக்கூடிய அம்சமாகும்.

சமாதானத் தீர்வில் விடுதலைப் புலிகளும் கூடிய அக்கறை கொண்டுள்ளனர். இச்சூழலில் பிரதான அரசியல் கட்சிகள் முனைப்புடன் செயற்படவேண்டும். ஏனைய அரசியற் கட்சிகளுக்கிடையே ஏகமனதான ஒற்றுமை ஓர் ஆக்கபூர்வமான பயனைத் தர, குமாரதுங்கவும் ஜே.வி.பியும் விக்கிரமசிங்கவும் தத்தமது தனிப்பட்ட அக்கறைகளையும் தமது கட்சிகளின் விருப்பு வெறுப்புகளையும் முற்றாகக் கைவிட்டு நாட்டின் நலனுக்கே முதலிடம் கொடுக்கவேண்டும்.

அண்மையில் ஒரு மதிப்பிற்குரிய ஆய்வாளர் கூறிய கூற்று நாம் அனைவரும் மிகவும் ஊன்றிக் கவனிக்க வேண்டிய ஓர் அதிமுக்கியமான கூற்றாகும். அது பின்வருமாறு அமைந்திருந்தது:-

`எம்மிடம் தன்முனைப்போடு செயலாற்றும் கிறுக்குத் தனமான ஆர்வவெறிகொண்ட பித்துப் பிடித்த அரசியல்வாதிகளே உள்ளனர். இவர்கள் நாட்டுக்கு எக்கேடு விளைந்தாலும் அதைப்பற்றிச் சிறிதளவேனும் கவலைப்படாமல் தமது பதவிகளைத் தக்க வைத்துக்கொள்ளும் வெம்பழியுடன் சிந்திக்கும் நரக மனப்பான்மை கொண்டவர்கள். இவர்கள் மக்களுக்குச் சேவையாற்றவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனரேயன்றி, மக்கள் இவர்களுக்குச் சேவையாற்ற இவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதைப் பலர் மறந்துவிடுகின்றனர். 2004ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை என்பதிலிருந்தே நாட்டு மக்கள் தங்களது எதிர்காலத்தை முற்றுமுழுதாகக் குமாரதுங்கவின் கூட்டணியிடமோ விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணியிடமோ தனியாக நம்பிக் கையளிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்கால அமைதிக்கும் சுபீட்சத்திற்கும் செழிப்பிற்கும் வழிவகுக்கக்கூடிய, அர்த்தமுள்ள மாற்றங்களை இவர்கள் இருவரும் சேர்ந்து கொண்டு வரவேண்டுமென்றே இவர்கள் இருவரையும் தெரிவு செய்தனர். இரண்டு கட்சிகளும் இருவேறு துருவங்களாகப் பிளவுபட்டிராமல் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதே மக்களது விருப்பமாகும். எனவே இவை தங்களுக்கிடையேயுள்ள பகைமையை விட்டொழித்துத் தமது சக்திகளை ஒன்று சேர்த்து, இரு கட்சிகள் சார்ந்த நிலையின் அடிப்படையில் வலுவான ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம்.

**சண்டே லீடர் இதழில் டினேஸ் வீரக்கொடி**
**(தமிழில் கந்தையா நவரேந்திரன்)**

# நீலவாணி எண்டர் பிறைஸ்

## இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு
## பேர்ண் மாநகரில்

# மாபெரும் மலிவு விற்பனை

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| உடன் இலங்கை மீன் வகைகள் 1Kg | 7.50Fr | 6.90Fr |
| உடன் இலங்கை நண்டு கணவாய் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| இலங்கை கீரை வகைகள் 1Kg | 9.00Fr | 6.90Fr |
| மரவள்ளி | 3.80Fr | 3.00Fr |
| இராச வள்ளி | 8.00Fr | 5.50Fr |
| வெண்டி, புடோல், பூசணி, முருங்கை | 5.50Fr | 3.80Fr |
| உள்ளி | 3.00Fr | 1.75Fr |
| சின்ன வெங்காயம் | 8.00Fr | 5.50Fr |
| தாய்லாந்து பயற்றங்காய், பாகற்காய் | 9.00Fr | 7.35Fr |
| நெஸ்டோமோல்ட் | 6.90Fr | 5.50Fr |
| விவா | 8.90Fr | 6.90Fr |
| கோர்லிக்ஸ் | 6.90Fr | 5.90Fr |
| மைலோ | 6.90Fr | 5.90Fr |
| நெல்லி ரசம் (தோலகட்டி) | 6.50Fr | 5.40Fr |
| பழரச வகைகள் | 6.50Fr | 5.40Fr |
| லெமன் பஃப் | 2.50Fr | 1.25Fr |
| டி டைம் | 3.50Fr | 2.50Fr |
| கிப்ட் செலக்ஸ்ஸன் | 6.50Fr | 4.80Fr |
| ஃபமிலி ஷசேட்மன்ட் | 4.80Fr | 3.50Fr |
| கிறிம் கிறேக்கர் | 2.50Fr | 1.70Fr |
| சீனி சம்பல் | 5.50Fr | 4.20Fr |
| ஊறுகாய் வகைகள் | 5.50Fr | 4.20Fr |

| உதாரணத்துக்காக மாற்றம் செய்யப்பட்ட விலை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| பிரியாணி மிக்ஸ் | 5.50Fr | 4.20Fr |
| ஜாம் வகைகள் | 3.90Fr | 3.10Fr |
| தேங்காய் பால் பவுடர் 1 Kg | 13.50Fr | 9.60Fr |
| தேங்காய் பால் பவுடர் 350g | 5.95Fr | 4.50Fr |
| தேங்காய் பால் பவுடர் 150g | 3.15Fr | 2.10Fr |
| மொட்டைக் கருப்பன் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |
| புழுங்கல் அரிசி 5Kg | 12.50Fr | 9.30Fr |
| புழுங்கல் அரிசி 1Kg | 2.50Fr | 1.90Fr |
| சம்பா 5 Kg | 13.50 Fr | 9.30Fr |
| சம்பா 1Kg | 2.50Fr | 1.90Fr |
| பசுமதி அரிசி 5Kg | 12.00Fr | 7.50Fr |
| U.S.A அரிசி 25 Kg | 35.00 Fr | 28.50Fr |
| மைசூர் பருப்பு 2Kg | 5.50Fr | 3.50Fr |
| நல்லெண்ணெய் 375 Ml | 6.90Fr | 4.90Fr |
| 750 Ml | 11.90Fr | 9.40Fr |
| வறுத்த அரிசி மா 1 Kg | 3.90Fr | 2.90Fr |
| யாழ்.மிளகாய்தூள் 900g | 9.60Fr | 7.90Fr |
| கிங்ஸ், லீலா, சூரியா 500g | 5.50Fr | 4.30Fr |
| அதி குளிரூட்டப்பட்ட கோழிக்கால் 2.5Kg | 12.90Fr | 9.90Fr |
| உடன் ஆட்டிறைச்சி பங்கு 1Kg | 9.50Fr | 8.00Fr |
| உடன் ஆட்டிறைச்சி தொடை 1Kg | 14.00Fr | 11.00Fr |
| உடன்கோழி | 6.50Fr | 5.50Fr |

**மீன்வெட்டிச் சுத்தம் செய்து தரப்படும் இலவசம்**

இங்கு குறிப்பிடப்படாத மேலும் பல பொருட்கள் அதி குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம் மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விஷேட கழிவு உண்டு

**வாருங்கள்! நுகருங்கள்!**
**நல் ஆதரவைத் தாருங்கள்!!!**

**Bubenbergplatz 8 - 3011 bern**
**Tel: 031 -312 17 50**
**Natel: 079-300 37 49**
**Fax: 031 - 312 17 49**
பேர்ண் பெரிய தபால் நிலையத்துக்கு அருகே

காலவரையின்றி இதுவே எமது நிரந்தர விலையாகும்
எமது ஸ்தாபனம் உங்களுக்காக 365 நாட்களும் திறந்திருக்கும்

# மறுபக்கம்

ஐரோப்பியப் புலம்பெயர்வு என்பது 80ற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் இந்திய இராணுவத்தினரின் வருகையும் அதற்குப் பின்னரான 91, 92ம் ஆண்டு காலப்பகுதியுமே பெருமளவானவர்கள் ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த காலம் எனக் கொள்ளலாம். ஆரம்பத்தில் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் இங்கு வந்து தமக்கான இருப்பை உறுதிப்படுத்தியவர்கள், தமது சகோதரங்களை அல்லது உறவுகளை அழைத்துக்கொள்ள முனைந்ததும் இந்தக்காலப்பகுதியில் தான் மிக அதிகம்.

**தங்களை மறந்து, தாய் மண்ணை மறந்து, உறவுகளையும் மறந்து அடையாளம் இல்லாமல், மனிதனுக்கு அத்தியவசிய தேவையான உணவு, உடை, உறைவிடம் கூட இல்லாமல் அலையும் தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை ஐரோப்பிய மண்ணில் பெருகிக்கொண்டே இருக்கின்ற வேதனை நிகழ்ந்துகொண்டிருக்கின்றது.**

இவ்வாறு புறப்பட்டவர்கள் வந்து சேர்ந்ததும் உண்டு, வரும் வழியிலேயே உயிர் போனவர்களும் உண்டு, இன்று வரை வர முடியாமல் ஏதோ ஒரு நாட்டில், இன்னும் நம்பிக்கையோடு காத்திருப்பவர்களும், கைது செய்யப்பட்டு சிறைக்குப் பின்னால் எனப் பலருண்டு. அதேநேரம் இங்கு வந்து திருப்பி அனுப்பப்பட்டு, மீண்டும் மீண்டும் முயற்சி செய்யும் ஏணியும் - பாம்பும் விளையாட்டு போன்ற வாழ்வும் சிலருக்கு அமைந்து போனதுண்டு.

யாழ்ப்பாணத்தில் இருந்து புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பகுதியான மக்கள் இன்று ஐரோப்பிய நாடுகளிலேயே வாழ்கின்றனர். நாட்டில் இருந்து புறப்படும்போது இவர்களின் புலம்பெயர்விற்கான காரணங்கள் பல் வேறாக இருந்தபோதும், இந்த ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் பெறுவதற்காக இவர்கள் கூறிக்கொண்ட காரணங்கள் ஓரளவுக்கு ஒன்றை ஒன்று ஒத்தவை.

ஆரம்பத்தில் வெளிநாட்டுக்குப் புறப்பட்டவர்கள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தினர்தான். மிகவும் பின்தங்கிய வர்க்கம் வெளிநாடு பற்றிய சிந்தனையின்றியிருக்க, கொஞ்சம் வசதியான வர்க்கம் இதனை உற்றுநோக்கிக் கொண்டிருந்தது. வெளிநாட்டுக்கு தங்கள் கௌரவத்தைவிட்டு கோப்பை கழுவ பிள்ளைகளை அனுப்ப வேண்டுமா என்று கேள்வி எழுப்பிய இவர்களுக்கு, சிலகாலத்திலேயே அது தவறென்று பட்டுவிட்டது. காரணம் அவர்களுக்குள் எழுந்த இன்னொரு வகையிலான கௌரவப் பிரச்சினை..!

அயலில் உள்ளவர்கள், தங்கள் பிள்ளைகள் கனடாவில், ஜேர்மனியில், இலண்டனில், பிரான்சில், சுவிசில்... இருப்பதாக பெருமையடித்துக் கொள்ளும்போது, தங்கள் வீட்டில் இருந்து அவ்வாறு ஒருவரும் இல்லையே என்ற ஏக்கம் ஒரு பெரும் கௌரவப்பிரச்சினையாக அவர்களுக்கு மாறியது. இதனால் தங்கள் வீடுகளில் இருந்து ஒருவராவது வெளிநாடு போகவேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு பலர் வந்தனர். இதனையடுத்து இவ்வாறான வசதியான வீட்டுப்பிள்ளைகளும் அகதிகளாக பெருமளவில் வெளிநாடுகளுக்கு புறப்பட்டார்கள்.

நடுத்தர வர்க்கங்களில் இருந்து புறப்பட்ட பெரும்பாலானோர் தமது சொத்தை அல்லது பொருளை அடமானம் வைத்தோ அல்லது விற்றோ இங்கு வந்து சேர்ந்தவர்களாக இருந்தார்கள். எனவே, அவற்றை மீட்டெடுக்கவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. அதற்காக கடுமையாக உழைக்கவேண்டியும் இருந்தது. ஆனால், தமது சொந்தப் பணத்தில் வெளிநாடுகளுக்கு வந்தவர்களுக்கு அந்த அவசியம் இருக்கவில்லை. அத்தோடு அவர்களின் உழைப்பையோ, வருமானத்தையோ நம்பி நாட்டிலோ, வீட்டிலோ யாரும் காத்திருக்கவுமில்லை.

எனவே, அவ்வாறான இளைஞர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகியது. இங்கு அவர்களை கேள்வி கேட்பவர்கள் யாருமின்றி இன்னும் சுதந்திரம் மிக்கவர்களானார்கள். ஒரு சிலர் சரியான வழியை தேர்ந்தெடுத்துப் போனாலும் பலர் இந்த சுதந்திரத்தை தமக்கு சாதமாகப்பயன்படுத்திக் கொண்டனர். இங்குள்ள சுகபோகங்களை அனுபவிக்கப்போய், தங்களை மறந்து, தாய் மண்ணை மறந்து, உறவுகளையும் மறந்து அடையாளம் இல்லாமல், மனிதனுக்கு அத்தியவசிய தேவையான உணவு, உடை, உறைவிடம் கூட இல்லாமல் அலையும் தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை ஐரோப்பிய மண்ணில் பெருகிக்கொண்டே இருக்கின்ற வேதனை நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. இதற்காக அவர்கள் வேதனைப்படுவதாகவோ, அதில் இருந்து மீளுவதற்காகவோ அக்கறைகொண்டதாக தெரியவில்லை. இவர்கள் இவ்வாறான மகிழ்ச்சியில் [?] திளைத்திருக்க, தங்கள் பிள்ளைகளிடம் இருந்து பணம், காசு வராவிட்டாலும் பரவாயில்லை, ஒரு கடிதம் அல்லது ஒரு தொலைபேசி அழைப்பாவது வரமாட்டாதோ என்று ஏக்கத்தோடும், கண்ணீரோடும் காத்திருக்கின்ற கூட்டமொன்று தாய் மண்ணில் இருக்கின்றது. இங்கிருந்து செல்பவர்களிடம் தங்கள் பிள்ளைகளைப்பற்றிய ஓர் ஆறுதல் வார்த்தையாவது கிடைக்கமாட்டாதோ என்ற அங்கலாய்பு அவர்களிடம் தேங்கிக்கிடக்கின்றது.



இந்தப் புலம்பெயர்வு இவ்வாறு இன்னொரு பக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது..!


**- செந்துரன்**

---

12வது ஆண்டு

# நினைவு வணக்கம்





தாயக மீட்பில்

31 05 1992

அறிவொளி

**நாகரெத்தினம் கிருபா**

(D8 உருத்திரபுரம்)


மண்ணில் பிறந்த மனிதர்கள்
தமிழ் மண்ணை மறந்து வாழ்வதுண்டு
எண்ணில் அடங்காக் கனவினிலே
எம்மை நாமே தொலைத்ததுண்டு
பொன்னும் பொருளும் தேடியிங்கு - இப் பூமியில்
ஆவியை விட்டதுண்டு - அறிவொளியாய்
மண்ணைக் கண்ணாய் நினைத்தவன் - நீ
இன்று துயிலும் இல்லத்தில் துயில்கின்றாய்
மறைந்த பின்னும் வாழ்கின்ற
மனிதருள் உன்னை நாம் வணங்குகின்றோம்.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அத்தான்மார், அக்காமார், அண்ணா, தங்கை, மருமக்கள், மகன்.

---

## நோர்வேயில்
## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வு

நோர்வே தமிழ் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் ஒஸ்லோ, பர்கன் ஆகிய நகரங்களில் யூன் 6ம் நாள் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் உணர்வுபூர்வமாக அனுட்டிக்கப்பட்டது. தமிழ் மக்களின் விடியலுக்காக உறுதியோடு போராடி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஆகுதியாக்கிய தியாகி பொன். சிவகுமாரனின் ஈகத்தை உணர்த்தும் வகையில் இந்நாளின் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.



தியாகி சிவகுமாரனின் நினைவை மீட்கும் வகையில் நிகழ்வில் முதலாவதாக விருத்தப்பாடல் பாடப்பட்டது. அதனைத்தொடர்ந்து தமிழ் இளைஞர்களை விடுதலைப் போரட்டத்தின் பால் எழுச்சி கொள்ள வைத்ததோடு, தனது வீரச்சாவினால் தமிழ் மக்கள் மனங்களில் விடுதலை மீதான உறுதிப்பாட்டை ஏற்படுத்தி, போராட்டத்திற்கு சரியான அடித்தளமிட்ட தியாகி சிவகுமாரனின் போராட்ட முன்னெடுப்பு பற்றிய தொகுப்பு இடம்பெற்றது. தொடர்ந்து தமிழ் மக்களை ஒடுக்குவதற்காக சிங்கள ஆளும் வர்க்கம் தமிழ் மாணவர்களின் கல்வியை எவ்வாறெல்லாம் சீரழித்தது, எவ்வாறெல்லாம் திட்டமிட்டு கல்வியில் பின்னடைவை ஏற்படுத்தியது போன்ற விடயம்கள், அதனுடைய வரலாற்றுப் பின்னணியோடு எடுத்துரைக்கப்பட்டது.

இறுதியாக இளையோருக்கான போட்டி நிகழ்ச்சி இடம் பெற்றது. தமிழீழ விடுதலைப் போராட்ட நிகழ்வுகள், தமிழர் வரலாறு உள்ளிட்ட தாயகம் சார்ந்த கேள்விகள், பொது அறிவு, அறிவியல், சமுகம் சார்ந்த பல்வகைப்பட்ட கேள்விகளை உள்ளடக்கியதாக போட்டி நிகழ்ச்சி அமைக்கப்பட்டிருந்தது. புலம் பெயந்து வாழும் தமிழ் இளையோர் தாயகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் இந்நிகழ்வில் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**- ரூபன்**

## உயர் பாதுகாப்பு...

*(03ம் பக்க தொடர்ச்சி)*

### நிவாரணத்தை நிறுத்த இடமளியோம்

உயர்பாதுகாப்பு வலயத்தினால் 16 ஆயிரத்து 27 விவசாயக் குடும்பங்கள் விவசாய முயற்சியை இழந்துள்ளன. மீன்பிடித் தொழிலை வாழ்வின் ஆதாரமாகக் கொள்ளும் நாலாயிரத்து 436ற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வை இழந்துள்ளன. ஆயிரத்து 670ற்கு மேற்பட்ட கூலித்தொழிலாளர்கள் தமது வேலை வாய்ப்பை இழந்துள்ளனர். மொத்தத்தில் உற்பத்தியில்லை - உற்பத்திக்கான நிலமில்லை. குடியிருப்பதற்கான இடமில்லை. அங்கிருந்து வெளியேறிய குடும்பங்களின் உடல், உளப் பிரச்சினைகள் மற்றும் பொருளாதார, சமூக, பண்பாட்டுப் பிரச்சினைகள் வளர்ந்து செல்கின்றன.

இதுவரை சிறீலங்கா இவ் இழப்பீடுகளுக்கு எந்த நிவாரணத்தையும் பூரணமாக வழங்கவில்லை. பகுதியாக வழங்கிய நிவாரணத்தையும் இடை நிறுத்தப்போவதாக மிரட்டுகிறது.

கடல் வலயத் தடைச்சட்டத்தினைப் பூரணமாக நீக்கும் வரை - விவசாய உற்பத்திக்கான நிலங்களைப் பூரணமாக வழங்கும் வரை - இடம்பெயர்ந்த மக்களை அவர்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் வரை - சிறீலங்கா அரசு நிவாரணத்தை நிறுத்த முடியாது. தமிழர்களின் பொருளாதார உரிமையையும், வாழ்வியல் உரிமையையும் மீறியுள்ள சிறீலங்கா அரசு சமாதானத்தின் பெயரால் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை உலக நாடுகளிடமிருந்து பெறமுயலுகிறது. ஆனால், அதில் எவ்வளவு நிதியை வடக்கு - கிழக்கிற்கு ஒதுக்கப்போகிறது என்பதை இதுவரை கூறவில்லை.

உயர்பாதுகாப்பு வலயத்தினால் 47ற்கு மேற்பட்ட பாடசாலைகள் இயங்க முடியாத நிலையிலுள்ளன. தெல்லிப்பழைப் பிரதேசத்தில் மாத்திரம் 31 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. 246ற்கு அதிகமான ஆலயங்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ளன. தெல்லிப்பழைப் பகுதியில் மட்டுமே பல ஆயிரத்து மில்லியன் ரூபா பெறுமதியான பொருளாதார இழப்பீடு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கல்வி, பொருளாதாரம், உற்பத்தி, வேலைவாய்ப்பு எனத் தமிழர்களுக்கு இயல்புவாழ்வு மறுக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கையின்படி எந்த மாறுதலையும் சிறீலங்கா அரசு உருவாக்கவில்லை. மாறாக, நெருக் கடிவரும்போது பிரதேசமொன்றின் ஒரு பகுதியிலிருந்து அப்பிரதேசத்தின் இன்னோர் பகுதிக்கு இராணுவம் நகர்ந்திருக்கிறதே அன்றி முழுமையாக எந்தப் பிரதேசத்தையும் விட்டு வாபஸ் பெறப்படவில்லை.

மீள்குடியமர்வுக்கான திட்டங்கள் எதனையும் சிறீலங்கா அரசு மேற்கொள்ளவில்லை. பல ஆண்டுகளாகத் தமிழர்கள் தமது வாழ்விடங்களை இழந்து அலைகின்றனர். உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றாதநிலை, நிலக்கண்ணிகளை முற்றாக அகழ்ந் தெடுக்காத சூழல், மக்கள் வாழ் விடங்களுக்கு அருகில் இராணுவ முகாம்களையும், காவலரண்களையும் அமைத்திருக்கின்ற நிலைமை என்பன மீள் குடியமர்வை முற்றாகத் தடுக்கின்றன. பாதுகாப்பற்ற சூழலாலும், போதிய போக்குவரத்து வசதி இன்மையாலும், அடிப்படைத் தேவைகள் பல பகுதிகளில் பூர்த்தி செய்யப்படாமை யாலும் மீள்குடியமர்வில் பாரியசிக்கல்களைத் தமிழ் மக்கள் எதிர்கொள்வதுடன் இதனால், உருவாகியுள்ள சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது திணறுகின்றனர்.

### சமாதானப் போர்வையில் தொடரும் படுகொலைகள்

சமாதானப் போர்வையில் படுகொலைகளைப் புரிவதன் மூலம் சிறீலங்கா அரசு கிழக்கில் நிலவிய அமைதியான சூழலைக் குழுப்பியுள்ளது. சமாதானத்தைச் சிதைக்க விரும்பும் சில சக்திகளையும், சில சுயநலன் விரும்பிகளையும், அவர்களது அடியாள்களையும் வைத்துக் கொண்டு கிழக்கில் படுகொலைகளை சிறீலங்கா இராணுவத்தின் புலனாய்வுத்துறையே மேற்கொண்டு வருகின்றது. இது சமாதானத்திற்கு விடப்படும் பெரும் சவாலாகும். இதனூடாக, விடுதலைப் புலிகளை போருக்கு இழுக்கவும், அதன் மூலம் சமாதானத்தை சீரழிந்த பழியை விடுதலைப் புலிகள் மேல் போடவும் அரசு திட்டமிடுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளையும், தமிழ்த் தேசியப் பற்றாளர்களையும் திட்டமிட்டுப் படுகொலை செய்துவருகின்றமை சிறீலங்கா இராணுவத்தினது சமாதானத்தின் மீதான பற்றுறுதியின்மையையே காட்டுகின்றது. எனவே, கிழக்கில் நிகழ்ந்திவரும் படுகொலைகளை சிறீலங்கா அரசு நிறுத்த வேண்டும். அல்லது விடுதலைப் புலிகளிடம் வடக்கு - கிழக்கை பூரணமாக ஒப்படைக்க வேண்டும். கிழக்கில் இஸ்லாமிய, தமிழ் சமூகங்களிடையே மோதல்களைத் தூண்டுகின்ற நடடிவக்கைகளை சிறீலங்கா அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும். போர் நிறுத்த உடன்பாட்டின் பின்பும், சமாதானப் பேச்சுக்களின் பின்பும் சிறீலங்கா அரசு தமிழ் - இஸ்லாமிய சமூகங்களைப் பிரித்தாள பல படுகொலைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றை சிறீலங்கா அரசின் புலனாய்வுத்துறையினரே மேற்கொண்டு வந்தனர். இவற்றையும் சிறீலங்கா அரசு முற்றாகக்கைவிட வேண்டும்.

பிராந்திய, சர்வதேச ஆக்கிரமிப்பு சக்திகளை அழைத்து பயிற்சி பெறுவதையும், ஆலோசனை கேட்பதையும் சிறீலங்கா அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும். இராணுவத்தைப் போருக்கு தயார்ப்படுத்துகின்ற பணியை முடுக்கிவிட்டுள்ள சிறீலங்கா அரசு, சமாதான காலத்தை போருக்கான தயார்ப்படுத்தலுக்கான காலமாகக் கொள்கின்றமையை இந்நடவடிக்கை உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக சிறீலங்கா அரசு நிறுத்த வேண்டும். மலையகத் தமிழர் மீது மிரட்டலையும், அச்சுறுத்தலையும் மேற்கொண்டுவரும் சிறீலங்கா படைத்துறைகளின் நடவடிக்கைகளும் நிறுத்தப் படவேண்டும். மலையகத் தமிழர்களைக் கைது செய்வது, சிறையிலடைப்பது, படுகொலை செய்வது என்பன அவர்கள் மீதான வன்முறைக ளாகும். இவற்றை மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களாகவே நோக்க வேண்டும். இவற்றை சிறீலங்கா அரசு உடனடியாக நிறுத்தவேண்டும்.

## பூநகரி ஞானிமடப் பகுதியில் மனித எலும்புக்கூடு மீட்பு!

பூநகரி ஞானிமடப் பகுதியில் எலும்புக் கூடு ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அந்த எலும்புக்கூட்டுக்கு அருகில் பெண்கள் அணியும் ஆடைகள் காணப்பட்டதால் இது பெண் ஒருவரின் எலும்புக்கூடாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்து.


கடந்த காலங்களில் கிளாலி ஊடாகப் போக்குவரத்து இடம் பெற்ற சமயம் காணாமற்போன இளம்பெண் ஒருவரின் எலும்புக் கூடாக இது இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இந்தப் பகுதியில் சிறீலங்கா கடற்படை முகாம் ஒன்று முன்பு செயற்பட்டது என்று அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்தனர். இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்ட இடத்திற்கு சமீபமாக கிணறு ஒன்று மூடப்பட்ட நிலையில் காணப்டுவதாகவும், அக்கிணற்றில் மேலும் எலும்புக் கூடுகள் இருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது என்றும் அப் பகுதி மக்கள் கூறினர்.

## தன்னாட்சி அதிகார சபையை புலிகளிடம் ஒப்படைக்குக!

எனவே, சிறீலங்கா அரசு போர் நிறுத்த உடன்பாட்டைப் பாதுகாத்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் வடக்கு - கிழக்கின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும். இதுவே, தமிழர்களின் இயல்பு வாழ்வையும், மீள்குடியமர்வையும் சாத்தியப்படுத்துவதுடன், வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் பாதுகாப்பையும், சுதந்திரமான வாழ்வையும் உறுதிப் படுத்தும். மேலும், இலங்கைத்தீவு முழுவதற்குமான அமைதிநிலைக்கும், பொருளாதார சுபீட்சத்துக்கும், தீவிலே வாழ்கிற சகல இன மக்களதும் பாதுகாப்புக்கும், வடக்கு - கிழக்கு இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபையின் தோற்றம் வழி சமைக்கும்.

எனவே, நாம் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஐந்து அம்சக் கோரிக்கையை யாழ். குடாநாட்டு மக்கள் ஓரணியில் ஒன்று திரண்டு நடத்திய இப்பேரணி ஊடாக தங்கள் மேலானகவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம். யாழ். மக்களின் ஏகப்பிரதி நிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வடக்கு - கிழக்கிற்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உடன் வழங்கல் வேண்டும். இயல்பு வாழ்க்கைக்குத் தடையாக உள்ள காரணிகளை அகற்றி உரிய சூழலைத் தோற்றுவித்தல் வேண்டும். வடக்கு - கிழக்குப் பகுதியிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றி, புலம்பெயர்ந்து வாழும் மக்களை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தல் வேண்டும். அரச உதவியுடன் கிழக்கில் நடைபெறும் தமிழ்த்தேசியப் பற்றாளர்கள் மீதான படுகொலைகளை நிறுத்துதல் வேண்டும். மலையகத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்தை நிறுத்துதல் வேண்டும் - என்று அந்தக் கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 31ம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 . 08 . 1994 |  | 03 . 06 . 2004 |

### தேவதாஸ் விதூசன்

03.06.2004 அன்று நடைபெற்ற இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு ஆற்றாத் துயரில் இருந்த எங்களுக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்களுக்கும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

அன்னாரின் 31ம் நாள் நினைவஞ்சலியும், ஆத்மசாந்தி ஆராதனையும் வருகின்ற 03.07.2004 சனிக் கிழமை நடைபெற இருப்பதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**நடைபெறும் இடம்**
**Dorf Str - 49**
**3457 Waseo**

தகவல்:
த. தேவதாஸ்
குடும்பத்தினர், நண்பர்கள்.

தொலைபேசி:
078 85 96 562
034 42 60 270

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 27 . 10 . 1944 |  | 21 . 06 . 2003 |

### திருமதி மனோன்மணி முருகையா

பாசத்தில் ஆலமரமாய் இருந்த தாயே `எமைப்
பண்பால் வளர்த்திட்ட தெய்வமே உன்
பிள்ளைகள் உறவுகளை விட்டு எங்கே
சென்றாய் அன்னையே' காலம் உனை
மாய்த்து விட்டதே அம்மா.
நீ இல்லை என்று சொல்ல மனம் இல்லை
எங்களுக்கு நேற்று நடந்தது போல் இருக்கு
ஓர் ஆண்டு சென்றனவே அழுது துடிக்கிறோம்

உங்கள் பிரிவால் வாடும்
கணவர், பிள்ளைகள், சகோதர சகோதரிகள்
மருமகன்கள், மருமக்கள், மைத்துனர் மைத்துனிகள்
பேரர்கள் பேர்த்திகள்

24.06.04 ல் மதிய போசனத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**50 Av Gabriel Peri**
**la Gare -Epinay sur seine**
முன்பாக

தகவல் - சந்திரன் ஆனந்தி
**01 48 21 47 63 - 06 25 24 22 14**

# சிறீலங்காவின் தலைமை அமைச்சர் மஹிந்த ராஜபக்சவை பதவி விலகக் கோருகிறது ஜே.வி.பி

பிரதமர் மஹிந்த ராஜபக்சவைப் பதவி விலகுமாறு ஜே.வி.பி. கோரியுள்ளது. இணையத்தளம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, தற்போதைய அரசியல் நெருக்கடியைச் சரியாகக் கையாள்வதிலும் நாடாளுமன்றத்தில் இடம்பெறும் தொடர்ச்சியான குழப்பங்களைச் சரியான முறையில் அணுகுவதிலும் சமாதான முயற்சிகளில் உறுதியான முடிவுகளை எடுப்பதிலும் பிரதமர் ராஜபக்ச தவறிவிட்டார்.

முடங்கிப் போயுள்ள சமாதான முயற்சிகள் தொடர்வதில் இழுபறி ஏற்பட்டு, மீண்டும் போர் மூழும் அபாயம் எழுந்துள்ளதால், சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் முழுப்பொறுப்பையும் சனாதிபதி சந்திரிகா தமது நேரடிக் கவனிப்பில் கொண்டுவரவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளதைத் தொடர்ந்தே ஜே.வி.பி. இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. சனாதிபதி சந்திரிகாவின் கடுமையான நிலைப்பாட்டையே பிரதமரும் எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தும் ஜே.வி.பி., அவ்வப்போது சனாதிபதி சந்திரிகா வெளியிடும் கருத்துக்களை அப்படியே ஏற்றுக் கொண்டு அவற்றை நடைமுறைப் படுத்துவதே பிரதமரின் வேலையாக இருக்கவேண்டுமென்றும் அதைச் செய்யத் தவறிய பிரதமர் தமது கூட்டணிக் கட்சியின் பிரதிநிதியாகத் தலைமை ஆசனத்தில் தொடர்ந்தும் அமர்ந்திருப்பது மாபெரும் தவறு என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில், சனாதிபதி சந்திரிகாவின் நம்பிக்கைக்குரிய ஓர் அமைச்சராகக் கடந்த காலத்தில் விளங்கிய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா சமாதான முயற்சிகளை வேகமாக முன்னெடுக்க சனாதிபதி தயங்குவதற்கான காரணத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டுமென்று கடுமையாகக் கண்டித்துள்ளார்.

சனாதிபதியின் குழப்பமான நிலைப்பாடுகளும், முரண்பட்ட கருத்துக்களும் நாட்டின் சமாதான சூழலை வெகுவாகப் பாதித்துள்ளதாகக் குறிப்பிடும் அமைச்சர், மிக வேகமாக உள்வாங்கப்பட்ட சமாதானத்திற்கான நிரந்தரவாய்ப்பை சனாதிபதி எதற்காக அதேவேகத்துடன் முன்னெடுக்கப் பின்வாங்க வேண்டும் என்றும் வினவியுள்ளார், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றத்திற்குள் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐ.தே.க. செயற்குழு கண்டனம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் நாடாளுமன்றத்திற்குள் நடத்தப்பட்ட அநாகரிகமான தாக்குதல் சம்பவங்களுக்கு தமது முழுமையான கண்டனத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில், ஜனநாயக நாடொன்றில் மக்களின் இறைமையை நடைமுறைப்படுத்தும் போது மிக உயர்ந்த இடம் வகிப்பது நாடாளுமன்றமாகும். மக்களின் அரசியல் யாப்பு சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதான இடமும் நாடாளுமன்றமேயாகும். பொதுத்தேர்தல் ஒன்றில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் மக்களுக்காக குரல் எழுப்பி கருத்துகளை கூறுவதும் அக்கருத்துகள் பலப்பரீட்சைக்கும் உட்படுத்தும் மேடையாகவும் நாடாளுமன்றம் விளங்குகின்றது.

சபாநாயகர் தெரிவு முதல் இது வரைக்கும் நாடாளுமன்றம் நான்கு தடவைகள் மாத்திரமே கூடியது. இந்நான்கு தடவைகளும் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் கருத்துகளுக்கு ஒத்துப்போகாத எல்லாப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள், கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது பிக்குமார்கள் மீது தாக்குதல் நடாத்தியதுடன் உச்ச கட்டத்தை அடைந்தது.

இவ்வாறான நிந்தனைமிக்க அநாகரிகமான தாக்குதல்களின் பின்னரும், பிக்குமார்கள் மீது எதுவிதமான தாக்குதல்களும் இடம்பெறவில்லை என்று செய்தியாளர் மாநாடுகளிலும், அரச ஊடகங்கள் மூலமும் கூறினாலும், வைத்திய அறிக்கைகளின் பிரகாரம் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என்பது தற்போது முழுநாடும் அறிந்த விடயமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி பௌத்த சமயத்தை அழிப்பதாக தவறான கருத்துக்களை நாடுமுழுவதும், பரப்பி ஆட்சிக்கு வந்த சுதந்திர முன்னணி அரசாங்கம் மேன்மைமிக்க நாடாளுமன்றத்திற்குள்ளேயே பிக்குமார்களுக்கு தாக்குதல் நடாத்தியது புத்தசாசன அமைச்சருக்கு முன்பாகவேயாகும். இதன் மூலம் வெளிப்படுவது நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் கவனியாமல் பாசிசவாத வன்முறைகளை நாடாளுமன்றத்தில் கட்டவிழ்த்து விட்டு மிகவும் திட்டமிட்ட முறையில் நாடாளுமன்றத்தை செயலிழக்கச் செய்வதற்கும் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## மிக் வீழ்ந்தது தொடர்பான விசாரணை உக்ரேன் அதிகாரிகள் வருகை

(21.06.04)

நீர்கொழும்பு வாவிக்குள் விமானப் படையின் மிக்-27 ரக போர் விமானம் வீழ்ந்து வெடித்துச் சிதறியது தொடர்பாக நடைபெறும் விசாரணைக்கு உதவ உக்ரேன் விமான நிறுவன அதிகாரிகள் இருவர் கொழும்பு வந்துள்ளனர். சிறீலங்கா விமானப் படையினரின் அழைப்பை ஏற்றே இவ்விரு நிபுணர்களும் கொழும்பு வந்துள்ளனர். மேற்படி விமானத்தைத் தயாரித்த உக்ரேன் நிறுவன அதிகாரிகள், இது தொடர்பான விசாரணையில் உதவுவார்களென எதிர்பார்த்தே தாங்கள் அவர்களை



அழைத்ததாக விமானப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துக் குறித்து ஆராயும் உக்ரேன் நிபுணர்களும் இது தொடர்பாக இலங்கை விமானப் படைத் தளபதியிடம் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை, இந்த விபத்துக் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் விமானப் படையினர் மிக விரைவில் தங்கள் அறிக்கையை விமானப் படைத்தளபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளனர். ஏற்கனவே, முதல் கட்ட விசாரணை தொடர்பான அறிக்கை, குறூப் கப்டன் கஹான் புளத்சிங்களவினால் விமானப் படைத் தளபதியிடம் கையளிக்கப்பட்டமை தெரிந்ததே.

## அமெரிக்காவிடம் போர்க் கப்பல் கொள்வனவு ஒப்பந்தத்தில் வாஷிங்டனில் கடற்படைத் தளபதி கைச்சாத்திடுவார்

(22.06.2004)

அமெரிக்காவிடமிருந்து பாரிய கரையோரக் காவல் கப்பலைப் பெற்றுக் கொள்ளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக சிறீலங்காவின் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி இன்று செவ்வாய்க் கிழமை அமெரிக்கா செல்லவுள்ளார். 210 அடி நீளமுடைய `கரேஜியஸ்' என்ற இந்தப் பாரிய தேடுதல் மற்றும் மீட்புக் கப்பலை அமெரிக்க அரசு சிறீலங்கா கடற்படைக்கு இலவசமாக வழங்குகின்றது.


இந்தக் கப்பலைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்வு இன்று வாஷிங்டனில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சில் நடைபெறவுள்ளது. சிறீலங்கா கடற்படை சார்பில் வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும், அமெரிக்கக் கரையோரக் காவல் படைத் தளபதியும் இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளனர்.

சிறீலங்கா கடற்படைக்கு அமெரிக்கா இந்தக் கப்பலை கட்டணமின்றி வழங்கினாலும், இதனைத் திருத்துவதற்கும், இக்கப்பலை இலங்கைக்குக் கொண்டு வரு முன்னர் சிறீலங்கா கடற்படையினருக்கு பயிற்சி வழங்கவும் 6.9 மில்லியன் டொலர் (சுமார் 690 மில்லியன் ரூபா) செலவு ஏற்பட்டுள்ளாளது.இதைவிட, இந்தக் கப்பலில் கனரக ஆயுதங்களைப் பொருத்துவதற்காக மேலும் நான்கு மில்லியன் டொலர் (சுமார் 400 மில்லியன் ரூபா) செலவிடப்படவுள்ளது.

இந்தக் கப்பல் கொள்வனவு குறித்து, கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த மாதமே இதற்கான அனுமதியை சிறீலங்காவின் அரசுத் தலைவர் சந்திரிகா வழங்கியிருந்தார்.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக அட்மிரல் சந்தகிரி வாஷிங்டனுக்குச் செல்லும் முன்பாக, சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்வதற்காக சிறீலங்கா கடற்படையின் உயர்மட்டக் குழுவொன்று ஏற்கனவே வாஷிங்டனுக்குச் சென்றுள்ளது. இந்தக் கப்பல் அமெரிக்காவின் பால்ரிமோர் பகுதியிலிருந்து அத்திலாந்திக் மற்றும் இந்து சமுத்திரங்களூடாக கொழும்பு வரவுள்ளது.

## வவுனியாவில் இரு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன





தமிழீழ விடுதலைப் புலிகளால் மாதாந்தம் வெளியிடப்படுகின்ற தேதுன்ன (வானவில்) என்ற சிங்கள மொழிப் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த க.வே.பாலகுமாரன் எழுதிய `மௌனித்திருந்தவர் மனக்குரல்' தம்பியப்பா எழுதிய `வன்னியிலிருந்து ஓர் மடல்'- கடிதங்களின் தொகுப்பு ஆகிய இரு நூல்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

வவுனியா நகரிலுள்ள முத்தையா மண்டபத்தில் காலை பத்து மணியளவில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமை தாங்கினார். வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி.அலை வரவேற்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்வு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது.



வவுனியா கல்வியியற் கல்லூரி அதிபர் பேனாட் வைபவரீதியாக இவ்விரு புத்தகங்களையும் வெளியிட்டு வைக்க, பிரபல சிங்களப் பாடகர் ஜயதிலக பண்டார பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் வெளியீட்டு உரையை பிரபல அரசியல் விமர்சகர் திருநாவுக்கரசு நிகழ்த்தினார். சிங்கள பேராசிரியர் சுசரித ஹம்லத் மதிப்பீட்டுரையை நிகழ்த்தினர். பதிலுரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார். சிங்களப் பாடகர் ஜயதிலக பண்டாரவுக்கு க.வே.பாலகுமாரன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். பேராசிரியர் சுசரித ஹம்லத்தை கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தின துரை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

**சத்தி நகை மாடம் Sathy Jewellery**



* மாற்றுக் குறையாத தங்க நகைகளுக்கு உத்தரவாதம்

* கல்லுக்கு விலையில்லை அத்துடன் கூலியோ சேதாரமோ அறவிடப்படமாட்டாது.

* வழமையான எமது உண்டியல் சேவை புதிய வடிவில் உங்கள் வீட்டிலிருந்தவாறே பணம் அனுப்பலாம்.

*சகல நாடுகளுக்குமான மலிவு விமானச் சீட்டுக்களை உங்கள் ஊரிலேயே பெற்றுக்கொள்ள வழிசெய்வோம்.

புதிய நகைச்சீட்டு

சுவிசில் முதல்முதலாக அறிமுகப்படுத்துகின்றோம்.

**SATHY JEWELLERY**
**Elisabethenanlage 11, 4051 Basel BS**
**Tel: 061 383 86 86 / 079 669 42 07**



## வீடு விற்பனைக்கு

SAVIGNY BOURG இல்
115 m2 Hab, 4 Chambre, 2 wc, Sejour
Double Terrain 560 m2, prox et gare de cesson
Urgent Tel: port: 0664734982



**LA CHAPELLE**

**இறைச்சிக் கடை**

சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்

34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95



**அதிசயம் ஆனால் உண்மை**

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

விமல் விநியோக நிலையம்

**VIMAL DISTRIBUTION**

1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98

குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.



**Asha Video Movies**

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073**

Pub-Fr-39


## சோமாலியாவில் சிக்கியுள்ள இலங்கையர்களை திருப்பி அழைப்பதற்கு முயற்சி

ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்காக பிரயாண முகவர்களால் அழைத்துச் செய்லப்பட்டு சோமாலியாவில் கைவிடப்பட்ட நிலையில் சிக்கியிருக்கும் நானூறுக்கும் மேற்பட்ட இலங்கையரை, நாட்டுக்குத் திருப்பியழைக்கும் முயற்சியில் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சு ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக இத்தாலிக்குள் நுழையும் நோக்கில் சென்ற போதே இவர்கள் சோமாலியாவில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த பல மாதங்களாக இவர்கள் சோமாலியாவில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் தங்கியுள்ளனர். பெருமளவு பணத்தைப் பெற்றுக் கொண்ட பயண முகவர்கள் இவர்களை சோமாலியாவில் தவிக்க விட்டுத் தப்பி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கென்யாவின் நைரோபியிலுள்ள சிறீலங்கா தூதரகம் ஊடாக இவர்களைத் திரும்பியழைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

## தேசிய ஊடகக்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்ட நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு.....

தேசத்தின் குரலாய் தமிழ்தேசியத்தின் ஆன்மாவாயிருந்து தாயக விடுதலைக்கு பலம் சேர்க்கும் வகையில் தேசிய ஊடகக்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்ட நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு.....

**03.07.2004 சனிக்கிழமை**
**ரி.ரி.என் கலையகத்தில்..**

நேரடி ஒளிபரப்பில்... உங்கள் முன்னிலையில்... குலுக்கல் முறையில் தெரிவுக்குள்ளாகிறது. தாயக மண்ணை வீரம் விழைந்த நிலத்தை தரிசிக்கப் போகும் நல்வாய்ப்புப் பெற்றவர்கள் யார்?

அறியக் காத்திருங்கள்.....அது நீங்களாகக் கூட இருக்கலாம்.

# மரண அறிவித்தல்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அரவணைப்பில் |
|---|---|---|
| 24 . 09 . 1924 |  | 15 . 06 . 2004 |

## திரு சீனியன் சிவகுரு

யாழ்ப்பாணம் அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் பிரதமகுரு திரு. சீ. சிவகுரு 15.06.04 அன்று இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்ற ப.சீனியன் இளையபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சோதியின் அன்புக் கணவரும், வள்ளிப்பிள்ளை, குமரகுரு, திருத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம்(இலங்கை), செல்வரத்தினம், தங்கரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

அருச்சுனன், ஜோகராஜா (ஜேர்மனி), சரஸ்வதி, தவமலர் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருணோதயா, கரிதாஸ், வித்தி, ஜெகன், சர்வா (ஜேர்மனி) இந்திரன் சசி (பிரான்ஸ்) அனுஷா, சிவா (சுவிஸ்), ராசு, கோகிலா (ஜேர்மனி) சிவானந்தம், மாலா சதீசன், சதீஸ்வாணி (இலங்கை), செல்வம், சுரேஸ் (லண்டன்) வவா, ஜெயா, தர்ஷி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பேரனும், அமீரா, கஜீனா (ஜேர்மனி) இந்துஷா, வினோத், அஸ்வினா(பிரான்ஸ்) தீபா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 16.06.04 அன்று நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
த. அருச்சுனன் (ஜேர்மனி) - 02962 802979
கு.ஜோகராஜா (ஜேர்மனி) - 07666 883439


**ஈழமுரசு**
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Via - Imprimé chez I.C.T.
Z.A. de l' EPI d'Or, 94800 Villejuif.

நிர்வாகி: அ.பி. சந்தியோகு

ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்:
**அன்பு**
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



Restaurant **Tharsana's**

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்

* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

Restaurant **Prassah**
Gastronomiques Indiennes

தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad



**தர்ஷனா & பிரஷா உணவகங்கள்**

இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்



பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

# `போரிடும் வல்லமை சேர்ப்போம்' வெளியீட்டு விழாவில் தேசியத் தலைவர் கலந்துகொண்டு சிறப்பிப்பு!





`போரிடும் வல்லமை சேர்ப்போம்' இறுவெட்டு வெளியீட்டு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரால் உருவாக்கப்பட்ட இந்த இறுவெட்டை வைத்தியக் கலாநிதி அஜந்தன் அவர்கள் வெளியிட்டு வைக்க தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டார். விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவின் உருவாக்கத்தில் புலிகளின் குரல் சிட்டு கலையகத்தின் வெளியீடாக `போரிடும் வல்லமை சேர்ப்போம்' எனும் இறுவெட்டு கடந்த 15ம் திகதி செவ்வாய்கிழமை கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது.

இதற்கான இசையுருவாக்கத்தை இளைய இசையமைப்பாளரும் போராளியுமான செயல்வீரன் அவர்கள் ஆக்கியுள்ளார். நிதர்சனப் போராளி வீரா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக முதன்மைச் சுடரினை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஏற்றிவைத்ததோடு, இதுவரை காலமும் வீரச்சாவடைந்த மருத்துவப் பிரிவுப் போராளிகளை நினைவுகூரும் முகமாக வரையப்பட்டிருந்த பொதுப்படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து மருத்துவப்பிரிவுப் போராளி மாவீரான் கப்டன் யாழ்வேலின் திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றி வைத்ததோடு மலர் மாலையையும் அணிவித்தார்.

தொடர்ந்தும் மருத்துவப்பிரிவுப் பெண் போராளிகளின் மாவீரர் வணக்க நடனத்துடன் உள்ளரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. இவ் வெளியீட்டு விழாவின் வெளியீட்டு உரையினை விடுதலைப் புலிகளின் வைத்தியக் கலாநிதி அஜந்தன் அவர்கள் ஆற்றினார். தொடர்ந்தும் வைத்தியக் கலாநிதி அஜந்தன் அவர்கள் இறுவெட்டை வெளியிட்டு வைக்க தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டார் அதனைத் தொடர்ந்து இவ்வுருவாக்கத்தில் பங்கெடுத்த அனைத்துக் கலைஞர்களும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

`போரிடும் வல்லமை சேர்ப்போம்' இறுவெட்டின் மதிப்பீட்டு உரையினை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் திரு வே. பாலகுமாரன் அவர்கள் நிகழ்த்தினார். இறுதியாக நன்றியுரையினை யாழ்வேல் மருத்துவமனைப் பொறுப்பாளர் திரு சிவா அவர்கள் நிகழ்த்தினார். இந்நிகழ்வுக்கு போராளிகள், பொறுப்பாளர்கள், தளபதிகள், வைத்தியர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். உயிர்காக்கும் பணியில் ஈடுபட்டுவரும் மருத்துவப் பிரிவுப் போராளிகள் கடந்த காலங்களில் விடுதலைப் போராட்டத்தின் சமர்க் களங்களிலெல்லாம் தம் மனப்பதிவுகளாகிய பல விடயங்களும், அவர்களின் உள்ளத்து உணர்வுகளும் இங்கு பாடல் வடிவம் பெற்று உயிரூட்டப்பட்டிருக்கின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இப்பாடல்கள் வரலாற்றுப் பதிவுகளாகவும், மீட்டப்படும் நினைவுகளாகவும் இருப்பதை அவதானிக்க முடிகிறது.



# உலக அகதிகள் தினம் கிளிநொச்சியில் மாபெரும் பேரணி

கிளிநொச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உலக அகதிகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். துரித மீள்குடியேற்றத்திற்கு வழிசமைத்தல், வடக்கு, கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தல், விடுதலைப் புலிகளிடம் இடைக் கால நிர்வாக சபையைக் கையளித்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பேரணி நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப் பேரணி காலை 10.15 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள லெப்.கேணல் சந்திரன் பூங்காவிற்கு அருகில் ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தைச் சென்றடைந்தது.

இப்பேரணியில் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதியில் இடம் பெயர்ந்து வாழும் பெருமளவான பொது மக்கள் கலந்து கொண்டனர். பின்னர் கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலக முன்றலில் கிளிநொச்சி வெகுஜன ஒன்றியத்தின் தலைவர் பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் அரியரட்ணம் ஆகியோர் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை, யு.என்.எச்.சி.ஆர்.இன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் ஐ.நா.வுக்கான மகஜரையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்குமான மகஜரை கிளிநொச்சி அரச அதிபரிடமும் கையளித்தார். இந்த ஆர்ப்பாட்டப்பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட அதேநேரம், கிளிநொச்சி நகரின் இயல்பு நிலை வழமைபோலிருந்தது.





விசேட விலைக் கழிவு

RHYTHM

Website
rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

வீடு வாங்குதல்–விற்றல்–முதலீடு செய்தல்
- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய – பழைய வீடுகள் வாங்குதல்
- நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்

முழு அளவிலான இலவச
ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82



# சமாதான முயற்சிகளின் நிலை குறித்து தீக்ஷித்துக்கு ஹெல்கீசன் விளக்கம்

(21.06.04)

இலங்கை அமைதி முயற்சிகள் தொடர்பான பிந்திய நிலைமைகள் குறித்து நோர்வே பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன், இந்தியாவின் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என். தீக்ஷத்துக்கு விளக்கமளித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை புதுடில்லியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஹெல்கீசனுடன், சிறீலங்காவுக்கான நோர்வே தூதுவர் ஹான்ட்ஸ் பிரஸ்காரும் கலந்து கொண்டார். கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுகள் குறித்தும் புதிய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே உடனடியாக சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதில் ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டைகள் குறித்தும் நோர்வே அனுசரணையாளர்கள் தீக்ஷித்திற்கு விளக்கமளித்தனர்.

கடந்த 17ம் திகதி வியாழக்கிழமை நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சூல்ஹைம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை இலண்டனில் சந்தித்துப் பேசியிருந்தார். இதேநேரம், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை விதார் ஹெல்கீசன், தற்போது இலண்டனில் தங்கியிருக்கும் சிறீலங்காவின் அரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

இந்த இரு சந்திப்புகள் குறித்தும் இலண்டனில் எரிக் சூல்ஹைமும், ஹெல்கீசனும் ஆராய்ந்த பின்னர், ஹெல்கீசன் அன்று காலையே புதுடில்லி புறப்பட்டார். இதேநேரம், கடந்த 16ம் திகதி புதன்கிழமை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த நோர்வே தூதுவர் பிரட்ஸ்காரும் புதுடில்லி சென்றடைந்தார்.

வெள்ளிக்கிழமை இரவு தீக்ஷித்தை இவ்விருவரும் சந்தித்து இலங்கையின் பிந்திய நிலைமைகள் குறித்து விளக்கமளித்துள்ளனர். அத்துடன் இது தொடர்பாக தாங்கள் மீண்டும் யூலை முதல் வாரத்தில் தங்கள் முயற்சியை ஆரம்பிக்கவுள்ளதாகவும் யூலை 10ம் திகதி நடைபெறும் மாகாண சபைத் தேர்தலின் பின்பே இந்த முயற்சிகள் நடைபெறுமென்றும் நோர்வே அனுசரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கருணாவிற்கு இராணுவமே தஞ்சம் வழங்கியுள்ளது

## - மட்டு-அம்பாறை மாவட்டத் தளபதி ரமேஸ்

(21.06.04)



கருணாவிற்கு தஞ்சம் வழங்கியுள்ள சிறீலங்கா இராணுவம் கிழக்கில் அவர் மூலம் வன்முறைகளை மேற்கொண்டு வருவதற்கு தகுந்த ஆதாரம் இருப்பதாக மட்டு-அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் ரமேஸ் கடந்த சனிக்கிழமை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.


கரடியனாறு தேனகம் முகாமில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது இந்தக் கருத்தைத் தெரிவித்த ரமேஸ், சிறீலங்கா அரசு கருணாவைப் பாவித்து தமிழர்களின் மேல் போர் ஒன்றைத் திணிக்க முயலுமானால் அதற்குத் தகுந்த பதிலடி வழங்கப்படும் என்றும் கூறினார்..

கருணாவுடன் சென்ற மகளிர் அணியின் அரசியல் - இராணுவப் பொறுப்பாளர் உள்ளிட்ட நான்கு பேர் இந்த வார முற்பகுதியில் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் வந்து இணைந்துள்ளார்களெனவும் இவர்கள் விரைவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து கருணா மூலம் இராணுவம் அரங்கேற்றிவரும் செயல்களை வெளிக்கொணர்வார்கள் எனவும் ரமேஸ் அங்கு தெரிவித்தார். கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இதுவரை பல கொலைகள் இடம்பெற்றுள்ளதாகவும், குறிப்பாக விடுதலைப் புலிப் போராளிகளே கொல்லப்பட்டுள்ளனர் எனவும் இவைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# ரட்ணசிறி பறக்க விட்ட புறா இறந்தது எப்படி?

## விசாரணை நடத்த இராணுவ மேஜர் தலைமையில் குழு

சிறீலங்கா பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க பறக்க விட்ட புறா மரணமடைந்தது குறித்து விசாரிக்க இராணுவ மேஜர் தலைமையிலான மூவர் கொண்ட விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சமாதானப் படையில் சிறீலங்காப் படையினரையும் இணைத்துக் கொள்ளும் வைபவம் கடந்த



வாரம் குக்குலுகங்கை இராணுவ பயற்சி முகாமில், அமெரிக்க படையினரின் ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜேம்ஸ் எப் கெம்பெல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வைபவத்தில் சமாதானத்தை குறிக்குமுகமாக 7 வெள்ளைப் புறாக்கள் பறக்கவிடப்பட்டன. இவற்றுள் பிரதிப் பாதுகாப்பமைச்சர் பறக்க விட்ட புறாவைத் தவிர ஏனைய புறாக்கள் யாவும் வானில் பறந்த அதேவேளை, பிரதிப் பாதுகாப்பமைச்சர் பறக்க விட்ட புறா தலைமுறிந்து இறந்து வீழ்ந்தது.

அமைச்சர்கள் மற்றும் பல வெளிநாட்டு பிரதானிகள் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் அமைச்சர் ரட்ணசிறி பறக்க விட்ட வெண்புறா செத்து வீழ்ந்தது, நாட்டு மக்களிடையே மீண்டும் ஒரு போர் மூண்டு விடுமோ என்ற அச்ச உணர்வை தோற்றுவித்திருந்தது. இதையடுத்தே இப்புறாவின் மரணத்தில் ஏதாவது சதி வேலைகள் தொடர்புபட்டிருக்கலாமா என்பது குறித்து விசாரிக்க மூவர் கொண்ட விசாரணைக் குழுவை பாதுகாப்பமைச்சு நியமித்துள்ளது.

PHONE 2000

LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE

SFR

Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| PHONE 2000<br>2, Rue Perdonnet,<br>75018 Paris.<br>☎: 01 40 05 03 43<br>Fax: 01 40 05 03 53<br>M°: La Chapelle | PHONE 2000<br>85, Rue des Pyrénées,<br>75020 Paris.<br>☎: 01 40 09 13 15<br>Fax: 01 40 09 01 31<br>M°: Maraîchers | PHONE 2000<br>19, Rue du Labat,<br>75018 Paris.<br>☎: 01 42 58 55 40<br>Fax: 01 42 58 55 46<br>M°: Marcadet Poissonniers | PHONE 2000<br>Informatique<br>87, Rue des Pyrénées,<br>75020 Paris.<br>M°: Maraîchers<br>Tél: 06 20 21 11 11 | PHONE 2000<br>4, Rue de Cail,<br>75010 Paris.<br>☎: 01 40 05 93 28<br>Fax: 01 40 05 97 03<br>M°: La Chapelle ou Gare du Nord | PHONE 2000<br>5, Bld. davout,<br>75020 Paris.<br>☎: 01 43 71 40 30<br>Fax: 01 40 09 01 31<br>Mobile: 06 17 17 28 17<br>M°: Porte de Vincennes |

Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11